بسم الله الرحمن الرحيم

அல்கலாம்

AL-KALAM

பத்திராதிபர்:—கூ. அ. அப்துல் மஜீத்.

வால்யூம். 4	1927௵ நவம்பர்௴, டிசம்பர்௴	பகுதி. 11 & 12

பிரசங்கி, அல்லது ராஜீயவாதி.

மிஸர் பத்திரிகைகளிலிருந்தெடுத்து 'அல்ஹிலால்' பிரசுரித்திருப்பது வருமாறு:—

நம்மிடை ராஜீய வாழ்க்கை, அதிஇலகுவான காரியமாகவிருக்கின்றது. ஏனெனின், இவ்வாழ்க்கைக்கு எத்தகைய சட்டதிட்டங்களும், ஒழுங்கு முறையும், கல்வியறிவும், அனுபோகமும் அவசியமில்லை. கொல்லுவேலை, தட்டார்வேலை, புக்பைண்டு வேலை, லாடம் கட்டும் தொழில் முதற்கொண்டு நாசுவத் தொழில் வரையிலுள்ள எல்லா காரியங்களும் ராஜீய வாழ்க்கையில் ஈடுபடுவதைக் காட்டிலும், பெரிய கஷ்டமானவைகளாகவே இருக்கின்றன. ஏனெனின், மேற்கூறப்பட்ட ஒவ்வொரு தொழிலுக்கும் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு முறையும், சட்டதிட்டங்களுமுண்டு. இவைகளை அறியாதவனோ, எவனும் அத்தொழிலை ஏற்று நடத்தமுடியாது. ஆனால், ராஜீய வாழ்க்கையோ மேற்கூறப்பட்ட எல்லா தொழிலுக்கும் முற்றும் மாறாகத்தோன்றுகிறது. எந்த நிமிஷத்தில் நினைத்தாலும் எவனும் தன்னை ராஜீயவாதியென விளம்பரம் செய்துவிட எத்தடையுமில்லை.

மேலும், ராஜீய விஷயமென்னும் பெயரை யிட்டு, எதையும் தவக்க மின்றி பேசிவிட சந்தர்ப்பமேற்படுவதோடு, இவைகளை ஆக்ஷேபிக்க எவருக்கும் தைரியமில்லாது போகின்றது. ஏனெனின், நம்மி டையுள்ள ராஜீய வாழ்க்கைக்கு எத்தகைய ஒழுங்குமுறையும், சட்ட திட்டங்களும் கிடையாது.

ராஜீய வாழ்க்கையைச்சார்ந்த பொறுப்பை எவ்வகுப்பு நன் கறிந்திருக்கின்றதோ, அவ்வகுப்பு ராஜீய வாழ்க்கையை மிகக் கஷ்ட மானதாகக் கருதுகின்றது. அவ்வகுப்பிடத்தில் ராஜீயவாழ்க்கைக்கு அவசியமான சில சட்ட திட்டங்களும், ஒழுங்கு முறைகளும் இரு ந்து வருகின்றன. மேலும், இவைகளைக்கற்று, தேர்ச்சி பெறுதவரை எவனும் ராஜீயவாழ்க்கையில் பிரவேசிக்க முடியாது. அவ்வகுப்பிட த்து ராஜீயவாழ்க்கைக்கு அவசியமானவைகளுள் முதன்மையானது : நற்குணமும், நன்னடைக்கையுமாகும். பேச்சுவன்மை, அல்லது பிரசங்கம் கடைசி அவசியமென கருதப்படுகின்றது. மௌனியா யும், ஆராய்ச்சி செய்பவனும், சதா வேலையை நடத்திவைப்பவனு யும் இருப்பவனையே, அவ்வகுப்பு ராஜீயவாதியெனக் கருதுகின்றது. ராஜீயவாதியின் சப்தம் கடைவீதிகளிற் செவியுறப்படுவதில்லை. கூட் டங்கள், அல்லது சபைகள் ராஜீயவாதியின் கட்டுரையை யறியா. மேலும், ராஜீய வாழ்க்கையில் ஈடுபட்டிருப்போன் சமுத்திரத்தைப் போல் மௌனமாக விருந்து, சந்தடியும், இரைச்சலுமின்றி வேலை செய்து கொண்டிருப்பான். அதிகம் பேசுகிறவனையும், குறைந்த வேலை செய்கிறவனையும், தன் கௌரவத்தை யொட்டித்தானே பறை சாற்றுகிறவனையும் ராஜீயவாதியென ராஜீயத்தை யறியும் வகுப்பு அழைப்பதில்லை. வேலை செய்ய சக்தியும், ஆராய்ச்சி, ஆலோசனை ஆகியவைகளுக்குரிய அந்தஸ்து மிருப்பதோடு, பிரசங்கிக்கும் வன் மையும் இருக்குமாயின், தங்கத்திற்கு வர்ணம் கொடுத்ததற் கொப் பாகும். பிளாயிட், கிளாட்ஸ்டோன் ஆகியவர்கள் பிரசங்கிக்கும் சக்தியைக் கொண்டிருந்ததற்காக போற்றப்பட்டவர்களன்று. அவர் களிருவரும் முதன் முதலாக ராஜீயவாதியாயும், பிறகு பிரசங்கிகளா கவும் முன் வந்தனர்.

தங்களின் பிரசங்க சப்தங்கள் சபைகளில் கர்ச்சிக்காவிடினும், மௌனம் பூண்ட வேலையைக்கொண்டே உலகத்தை ஆட்டிவைத்த பல ராஜீய வாதிகள் உலகத்தில் ஜீவித்திருந்ததுண்டு. இத்தகைய ராஜீயவாதிகளுள் பலர் பிரசங்க வன்மையைப் பெற்றிருக்கவில்லை. ஆகவே, இவர்கள் பார்லிமெண்டில் பேசுவதற்கெழுந்து நிற்பார்களா யின், பார்லிமெண்டின் மெம்பர்கள் அனேகமாய் சிகரெட்டுப் பிடிப்பு

தற்காக சபையைவிட்டு வெளியேறிவிடுவார்கள். எஞ்சியிருப்பவர்களிற் பலர் உறங்கி விழுபவர்களாயும், குறட்டையிட்டு நித்திரைக்கொள்பவர்களாயுமிருப்பார்கள். ஆனால், பிரசங்கவன்மையைப் பெறாத இந்த ராஜீயவாதிகள் செய்துமுடித்திருக்கும் பல காரியங்கள் இன்றும் உலகில் ஜீவித்திருக்கின்றன. ஆதலின், சரித்திரத்தில் இவர்களின் நாமங்களைக் கொட்டை எழுத்துகளால் வரையப்பட்டிருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான சபைகளில் கர்ச்சிக்கத் தக்கபிரசங்கவன்மையை பெற்றிருந்த பலரின் நாமங்கள், அவர்கள் இறந்த அன்றே அழிந்துபோயின.

டியூக் வில்லிங்கடன் பிரசங்கியாக விருக்கவில்லை; மேலும், அவர் குறைந்த பேச்சையுடையவராகவிருந்ததைமுன்னிட்டு மௌனியென்னும் நாமம் சூட்டப்பட்டிருந்தார். ஆயினும், அவர் தன்னை மற்றவர் எகுவைப்போன்ற சக்தியை யுடையவரென்று கூறும்படி செய்திருந்தார். ஏனெனின், அவர் ஜெயசீலரான நெப்போலியனைக்கூட யுத்தத்தில் வென்றுவிட்டார். மேலும், யுத்தமில்லாத அமைதிக்காலத்தில் தம் நல்லறிவின் சக்தியைக்கொண்டு எல்லா எதிரிகளையும் அடக்கிவிட்டார். ஆகவே, பிரசங்கியான கிளேட்ஸ்டோனைக் காட்டினும், மௌனியாகிய டியூக் வில்லிங்கடன் குறைந்த அந்தஸ்தை யுடையவரென்று எவரும் கூறமுடியாது.

மேற்கூறப்பட்டுள்ள வார்த்தைகளின் மூலமாய் பிரசங்கவன்மைக்குரிய சக்தியின் கௌரவத்தை நாம் குறைக்கக் கருதவில்லை. மேலும், இச்சக்தியானது அல்லாஹுதஆலாவால் அளிக்கப்படும் பாக்கியங்களுள் ஓர் பெரியபாக்கியமும், சமூகத்தின் கூட்டுறவுவாழ்க்கைக்கு ஓர் அவசியமான கருவியென்றும் நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆயினும், பிரசங்கமே சகல கீர்த்திக்குமுடையது என்னும் கொள்கையை பிசகென்று நிரூபிக்க கருதுகின்றோம். ஏனெனின், ஜனங்களின் மனதை கவரத்தக்க பிரசங்கவன்மையைக் கொண்டிருப்பவனே சகலவற்றினும் சிறந்தவனென்றும், இவ்வன்மையில்லாதவனே உபயோகமற்றவனென்றும் உலகம் கருதுகின்றது. உண்மையென்னவெனில், கல்வியிற் குறைந்த ஒருவன் உயர்தரமான பிரசங்கியாகக்கூடும். கல்வியிற் சிறந்தவன் பிரசங்கிப்பதற்குரிய களத்தில் ஒரு அடியைக்கூட பெயர்த்துவைக்க முடியாதிருக்கலாம்.

சில தினங்களுக்குமுன் பிரிட்டிஷ் பிரதான மந்திரியாகிய மிஸ்டர் பால்டோன், கலாசாலையின் மாணவர்கட்குமுன் ஓர் சொற்பொழிவு செய்துள்ளார். அப்பிரசங்கம் நம் நோக்கத்தைச் சார்ந்திருக்கிறது. மேலும், தனி நபர் அல்லது சமூகம் ராஜீய வாழ்க்கையில் ஈடுபட

வேண்டுமாயின், அதற்கு கல்வியறிவு, பழக்கவழக்கம் ஆகியவைகள் அதிமுக்கியமானவைகளென்று மிஸ்டர் பால்டோன் அதிநன்றாய் விளக்கிக் காட்டியிருக்கின்றார். ஆதலின், ஒவ்வொருவரும் அப்பிரசங்கத்தைப்படித்து, நன்மையெய்துவது அவசியமாகும். மிஸ்டர் பால்டோனின் பிரசங்கமாவது:—

நற்பழக்கத்தின் சகல பலாபலன்களிலும், அதி முக்கியமானது அறிவையுண்டு பண்ணுவதும், ஆடம்பரத்தைப் போக்குவதும், வஸ்துகளின் உண்மையைத் தெரிந்து கொள்ளுவதற்குரிய சந்தர்ப்பத்தை அளிப்பதுமாகும். கல்வியானது உண்மையில் பேச்சுவன்மை, வாக்குச் சாதுரியம் ஆகியவைகளை வெறுக்கச் செய்கின்றது. ஜனங்களைத் தீயவழியில் நடத்தத்தக்க சுயேச்சையையே இன்று சுயேச்சை நாடுகளில் நம்பத்தகாததென கொள்ளவேண்டும். ஏனெனின், இப்பிரசங்கிகள் கல்வியிற் குறைந்தவர்களாக விருப்பதோடு, தங்களின் பேச்சுவன்மையைக் கொண்டு பாமரர்களைத் தம்வலைக்குள் இழுத்து, தீயவழியை அழகிய வழியைப்போல் அவர்களுக்குக் காட்டிவிடுகின்றனர். ஆகவே, சுயேச்சையின் ஒவ்வொரு காலத்திலும் வழிகெடுக்கும் இப்பிரசங்கிகளே பேராபத்தாக விருந்தனர். இன்றும் பேராபத்தாகவே இருக்கின்றனர். மேலும், வருங்காலத்திலுங் கூட இவர்கள் பேராபத்தாகத்தான் இருப்பர். இன்று நமக்கிருந்து வரும் சுயேச்சையானது பரிசுத்தமானதாகும். மேலும், நம் நாட்டிலிருந்து வரும் சுயேச்சையானது ஆண்டவனால் அளிக்கப்பட்ட ஓர் பெரும்பாக்கியமாகும். ஆகையால், நன்னடக்கை, நற்குணமற்றவரும் பேச்சுவன்மையுள்ளவருமான பிரசங்கிகள், தங்களின் நாக்களிலுள்ள விஷத்தின் மூலமாய் இப்பெரும் பேற்றைக் கெடுத்து, நாசமாக்குவதை நாம் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அலங்காரச் சொற்களையும், வன்மைநிறைந்த பதங்களையும் நான் என் சிறுபிராயத்தில் அதியன்போடு நேசித்து வந்தேன். ஆனால், பதினெட்டு வயதை நான் அடைந்தபோழ்து "கல்வியிற் கேட்டது பிறசங்கியைத் தயாரிப்பதாகும்" என்ற (மிஸ்டர்) "ப்ரோட்" அவர்களின் வாக்கியத்தைப் படித்தேன். அன்றுமுதல் நான் நேசித்து வந்தவைகளை வெறுக்கவேண்டியதாயிற்று. மேலும், பேச்சுவன்மை, சொல்லலங்காரம் ஆகியவைகளில் எனக்கிருந்து வந்த நம்பிக்கையற்றுப் போயிற்று. நான் பிரதான மந்திரி பதவியை ஏற்றுக் கொண்டதன் பின்னர், நம் நாட்டின் ஓர் உயர்தர பெண்மணி தன் நண்பனிடத்தில் "புதிய முதன் மந்திரியை நாகரீகக் காரனென்று கூறமுடியுமா?" என வினவியதாக நான் கேள்வியுற்றேன். அப்

பெண்மணி "நாகரீகக்காரர்" என்பதன் பொருளை சரிவர நன்கறிந்திருப்பாள் என்பதில் எனக்கு சந்தேகமுண்டாகிறது. ஆனால் "நாகரீகம்" செய்யும் வன்மையை இங்கிலாந்தின் பிரதம மந்திரி பெற்றிருக்க வேண்டுமென்பது, அம்மாதுவிடத்தில் அதியத்யாவசியமாக விருக்கிறது என நான் நிச்சயமாய் நினைக்கிறேன். சந்தேகமின்றி "இவ்வெண்ணம் மிக உயர்வானதே."

"என்னிடத்தில் நாகரீகம் என்பது எப்பொழுதும் முற்று பெறமுடியாத ஒரு காரியமாகவிருக்கும். கலாசாலையில் என்னுடைய நிலை வடுவற்றிருந்தது. ஆனால், நான் கலாசாலை மாணவனாக விருந்தபோழ்து, வாழ்நாளை வியர்த்தமாக்கி விட்டேன் என்பதை, நான் உங்கள் முன் ஒப்புக்கொள்கிறேன். ஆயினும், நான் உணர்ச்சிபெற்ற தினத்திலிருந்து என் குறையை யகற்றி, நன்னிலையை அடைய முயற்சித்துக்கொண்டிருக்கிறேன். "கல்வியை அடைந்ததனால் ஏற்படும் மகிழ்ச்சியைக் காட்டினும், உலகில் வேறு சிறந்த மகிழ்ச்சி எதுவும் கிடையாது" என்று நான் உங்கள் சமுகத்தில் உண்மையாக கூறுகிறேன். நான் இன்றும் மாணவனாக விருக்கிறேன். நான் நூறு வருட ஆயுளை யடைந்தபின்னரும் மாணவனாகத்தா னிருப்பேன். நான் இப்போழ்து வகித்துவரும் பதவியைவிட்டும் நீங்கியபின்னர், பூர்ண முயற்சியோடு கல்வி பயில்வதற்கு ஆரம்பிப்பதே என் கடமையாகும்."

எச்சமூகமாவது ஆண்டவனால் நாகரீகமாக்கப் பட்டதாக அனுப்பப்படவில்லை என்பதை நாமெல்லோரும் அறிவோம். நாகரீகத்தை அடைந்திருக்கும் ஒவ்வொரு வகுப்பும் தத்தம் முயற்சியின் மூலமாகவே சீர்திருத்தம் பெற்றிருக்கிறது. நாகரீகத்தையும், முன்னேற்றத்தையும் அடைய வழிநடப்போரைத் தடுக்கும் கஷ்டங்கள் அநேகமுண்டு. நாகரீகமானது க்ஷீணித்துவிடாமல் பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை. ஒரு காலத்தில் முன்னேற்றமடைந்திருந்த பற்பல சமூகங்கள் தங்களின் மறதியினாலேயே க்ஷீணித்து, அநாகரீகத்தின் வெள்ளத்தில் சிக்குண்டுவிட்டன. நாம் (பிரிட்டிஷார்) இன்று அடைந்திருக்கும் முன்னேற்றத்தைக் கண்டு இருமாப்பு அடையக்கூடாது. ஏனெனின், நம்முதிரத்தை ஜலத்தைப்போல் சிந்தியதோடு, தொடர்ச்சியாய் நாம் முயற்சித்து வந்ததன் முன்னிட்டே இம்முன்னேற்றத்தை யடைந்துள்ளோம். சீர்திருத்தம் சொற்ப கவனயின்மையினாலும், இருமாப்பினாலும் க்ஷீணித்து, அழிந்து போகக்கூடும். அழிந்துபோகும் அபிவிருத்தியும், மறுமைக்குரிய நன்மையைத் தர முடியாத கல்வியும் முன்னேற்றமல்ல. ஏனெனின், உண்மையில்

முன்னேற்ற மென்பது மேற்கூறியவைகளைக் காட்டினும் சிறந்த வேறு வஸ்துவாக விருக்கவேண்டும். கல்வி அதிவிரைவாய் முன் சென்று கொண்டிருப்பதோடு, ஸ்திரமான முன்னேற்றம், ஆத்தம சீர்திருத்தம் ஆகியவைகளை மறந்து, உலகில் அழிவுக்குரிய செல்வாக்கு, மறுமையின் நன்மையைச் சாராதக் கல்விப்பெருக்கம், உல்லாச வாழ்க்கைக்குரிய அழிந்துபோகும் பொருள் மிதமிஞ்சி, அவைகளின் மூலமாய் ஜனங்கள் இன்பமுற்று, பிரயாசையின்றி உண்டு களிக்கும் காலமே மானிட தன்மைக்குப் பெரும் அபாயகரமான காலமாகும். ஆனதுபற்றியே, இக்காலம் மேற்கூறியது போன்ற கவலைக்குரியதாக விருக்கக்கூடுமென்றும், இன்றைய நம் முன்னேற்றத்தின் கப்பல் பேராசையின் பாறையில் மோதுண்டு மூழ்கிவிடுமோ வென்றும் நான் பயப்படுகிறேன்.

வஸ்துகளின் உண்மையான நிலைமையை அறிவிப்பதைக் காட்டினும் கல்விக்கு வேறு சிரேஷ்டமான லக்ஷியம் கிடையாது. ஒவ்வொரு வஸ்துவையும் அதன் உண்மையை அறிந்து, அதற்குரிய ஸ்திதியில் வைத்திருப்பதே கல்வியின் பயனாகவிருக்கவேண்டும். கல்வியின் இவ்வரிய லக்ஷியமும், கல்வியைச் சார்ந்த சிறந்த இவ்வறிவும் சுயகாரிய புலிகளல்லாத நல்லுபாத்தியாயர்களின் மூல்யமாகவே மானிடர் அடையக்கூடும். உண்மையைச் சார்ந்த கல்வியை, அது உண்மையாகவிருப்பதை முன்னிட்டே மானிடர்கட்குக் கற்பிக்கப் படுகிறது. இச்சிறந்த கல்வியானது சத்தியத்தைப் பூர்ணவுண்மையாயும், பரிசுத்தமாயும், நம்பத்தகுந்ததாயும் வெளிப்படுத்தக்கூடும். ஆகவே, சுயநலப்புலிகளான உபாத்தியாயரும், ராஜீய லக்ஷியத்தின் அடிமைகளும், உலகத்தைச்சார்ந்த இழிய நோக்கங்களுக்காக சத்தியத்தைப் பறிகொடுப்போரும் உண்மையைக் கற்பிக்கும் உபாத்தியாயராக விருக்கமுடியாது. மேலும், இத்தகைய இழிய உபாத்தியாயரை சமூகத்திற்கு பெரும் தீங்கரென்றே நிச்சயிக்கவேண்டும். இப்போலி உபாத்தியாயர்களின் தீங்கைவிட்டு சமூகத்தின் வாலிபரைப் பாதுகாத்து, ஆதரவளிப்பது ஒவ்வொரு தேசாபிமானியினுடையவும் முதற்கடமையாகும். மேலும், இத்தகைய தீயோரின் கெடுதியைச்சார்ந்த வேரைக்களைந்து, இவர்களின் தீமையைவிட்டு சதா சமூகத்தை பாதுகாக்கவேண்டும்.

மஜ்லிஸுல் உலமா
நான்காவது மகாநாடு

மகாநாட்டுத் தலைவர் அல்லாமா ஹாஜிஸையத்சுலைமான் சாஹிப் நத்வி அவர்களின் பிரசங்கம்.

(390-வது பக்கத்தொடர்ச்சி.)

இவ்வரசர்கள் உண்மையை விசாரித்தறிய அரபி தேசத்திற்கு அவர்களே நேரிற் சென்றார்களா? அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளா? என்பது மூன்றாவது அபிப்பிராய பேதம். எவ்வாறாயினும் இது உண்மையான சம்பவம்தான். இது ஹிஜ்ரி முதலாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடந்திருக்கிறது.

முஸ்லிம் வர்த்தகர்களைத் தொடர்ந்து உலமாக்களும், தர்வேஷ்களும் இப் பக்கம் வருவதற்கு அவர்களுடைய மனதை இழுத்தது என்னவெனில் "ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம்" அவர்கள் பூமியில் இறங்கியபோது முதலாவது அடியானது "சங்கல் தீப்" அல்லது "சரந்தீப்" (இலங்கை) யில்பட்டது என்றும், அவருடைய அடிச்சுவடானது அத்தீவிலுள்ள ஒரு மலையின் மீதிருக்கிறது என்றும் கூறப்பட்ட செய்திதான். அவ்வடிச்சுவட்டைப் பார்ப்பதற்காக நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் யாத்திரீகர்கள் இப்பக்கம் வர ஆரம்பித்தார்கள். இதன் பலனை இப்பாகத்தில் இஸ்லாம் மதப்பிரசாரம் என்ற ரூபமாக வந்தது. ஆகவே, ஆலிமாகவும் தர்வேஷாகவுமிருந்த 'மாலிக் இப்னுஹபீப்' என்பவரின் பெயர்தான் இதில் முதலாவதாகக் கூறப்படுகிறது. இவரும் இவருடைய சகாக்களும் இவ்வடிச்சுவட்டைத் தரிசிப்பதற்காக இப்பக்கம் வந்தார்கள். இவர்களின் மதப்பிரசாரமானது முதல் முதலாக இஸ்லாம் என்ற விருக்ஷத்தை இப்பிரதேசத்தில் ஊன்றிற்று. இவர்களின் முயற்சியினால் இத்தேசத்தில் "கராங்கானூர்" என்ற ஸ்தலத்தில் முதல் முதலாக மஸ்ஜிது கட்டப்பட்டது. அரபி வியாபாரிகளின் கப்பல்கள் இராக்கிலிருந்தும், அம்மான் துறைமுகத்திலிருந்தும் சாமான்களை ஏற்றிக்கொண்டு இவ்விடத்திற்கு வருவதும், கடற்கரையோரமாகவுள்ள தீவுகளில் அரபிகள் தங்குவதும், பின்பு சீன தேசத்திற்குச் செல்வதும், பின்பு சீனாவிலிருந்து வருகையில் இதே வழியாகச் செல்லுவதுமாக

இருந்தன. இதன்படி இது அரபி வியாபாரிகளுக்கும், பிரயாணிகளுக்கும் அதிகமாக ஸ்திரமான போக்குவரத்து பாதையாய் இருந்திருக்கிறது. அநேக அரபிகளும், இதர முஸ்லிம்களும் இவ்விடத்தில் வாசஞ்செய்ய ஆரம்பித்திருக்கின்றனர். அவர்கள் இவ்விடத்தில் விவாகங்கள் செய்யவும் ஆரம்பித்திருக்கின்றனர். இவ்விடத்திய ராஜாக்களின் தர்பார்களில் தாங்களும் மரியாதையையும், கௌரவத்தையுஞ் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றனர். இவ்விடங்களில் முஸ்லிம்களுக்குச் சரியான குடியேற்ற ஸ்தலங்கள் ஏற்பட்டிருந்திருக்கின்றன. இவர்களின் மூலமாக சுதேசிகளும் இஸ்லாம் மதத்தை தழுவ ஆரம்பித்திருக்கின்றனர்.

"சுலைமான் ஸைராபி" என்ற அரபி வியாபாரி ஹிஜ்ரி 237-ல் எழுதிய தன்னுடைய பிரயாணக் குறிப்புப் புத்தகத்தில் எல்லாவற்றிற்கும் முதலில் சரந்தீபை (இலங்கை) யும், ஹஜரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் அடிச்சுவட்டையும் பற்றிக் கூறியிருக்கிறார். இத்தீவு அம்பர், முத்து, தேங்காய் ஆகியவைகளுக்கு அரபி தேசமெங்கும் கியாதி பெற்றிருந்தது. "சுலைமானு" க்கு 25 வருஷங்களுக்குப் பின் 'அபூஸத் ஸைராபி' என்றவர் வந்தார். இவர் இத்தீவில் அரபி வியாபாரிகள் குடியேறி இருந்ததாகவும், இங்குள்ள கொள்ளைக் காரர்களாலும், திருடர்களாலும் பல கஷ்டங்களை அநுபவித்து வந்ததாகவும் கூறி இருக்கிறார். மூன்றாவது நூற்றாண்டின் இறுதியிலும், நான்காவது நூற்றாண்டின் ஆரம்பத்திலும் "புஸரங் இப்னு ஷஹ்ரியார்" என்ற ஓர் அஜமிக்கப்பலோட்டி தம்முடைய கடற் பிரயாணத்தைப் பற்றி எழுதி இருக்கிறார். அவருடைய காலத்தில் இப்பாகங்களிலும், தீவுகளிலும் இஸ்லாமியக் குடியேற்ற ஸ்தலங்கள் இருந்தனவென்பதன் அறிகுறிகள் அதிகமாகத் தெளிவாகத் தெரிகின்றன. அவர்களுக்குள் ஆலிம்களும், காஜிகளும் இருந்ததாகவும் காணப் படுகின்றன. அவர்களை அவர்கள் "ஹூனர் மந்து" என்றழைத்து வந்தனர். மலபாரிலுள்ள "ராஜா ஜீமுரன்" என்பவரிடத்திலும், சிங்கப்பூர், ஜாவா, இலங்கை, மஹல்லதீவு, தமான் ஆகிய இடங்களிலும் இவர்கள் வியாபாரக்கப்பல் சென்று, இவ்விடங்களிலுள்ள ராஜாங்க தர்பார்களிலும் முஸ்லிம்கள் சென்றிருக்கிறார்கள். அவ்விடங்களில் இஸ்லாம் பரவிக்கொண்டே இருந்திருக்கிறது. தினே தினே புதியமுஸ்லிம்கள் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். முக்கியமாக சென்னை மாகாணத்திலுள்ள நகரங்களில் கள்ளிக்கோட்டை, கொல்லம், பாங்னூர், காஜர்கோர், மங்களூர் ஆகிய இடங்களில் மஸ்ஜிதுகள் கட்டப்பட்டிருக்கின்றன,

ஐந்தாவது நூற்றாண்டிலிருந்த மொரோக்கோவிலுள்ள பூகோள சாஸ்திரியான "இப்னுஸஊது" என்பவர் கொல்லத்தைப்பற்றி 'இது மஸாலூன்களின் கடைசிநகரம். சமுத்திரத்தின் கரையோரத்தில் இருக்கின்றது. இங்கு முஸ்லிம்களின் மஹல்லா (Ward, வார்டு) ஒன்றும், ஒருஜாமியே மஸ்ஜிது ஒன்றும் இருக்கின்றன என்றெழுதி இருக்கிறார்.

இதற்குப்பின், ஏறக்குறைய 1¼ நூற்றாண்டுக்குப்பின் மொரோக்கோ தேசத்து பிரபல சரித்திரக்காரரான "இப்னுபத்தூதா" என்பவர் "முஹம்மதுஷாஹ் டோக்லக்" உடைய காலத்தில் இந்தியாவுக்குவந்தார். பின்பு,இவ்வரசரின் பிரதிநிதியாகச் சீனதேசத்திற்குச் சென்றார். இக்காலமானது எட்டாவது நூற்றாண்டின் மத்திய காலமாகும். இதுவரை சென்னை மாகாணப் பிரதேசத்தின்மீது முஸ்லிம்கள் படையெடுக்கவில்லை. ஆனால், இதற்குச் சில வருஷங்களுக்குப் பின்பு தான் விஜயநகரம், கர்னாடகம் ஆகிய தேசங்களின் அரசர்களுடன் யுத்தம் ஆரம்பமாயிற்று. "இப்னுபத்தூத்தா" என்பவர் டில்லியிலிருந்து கம்பாயத்துக்கும், அங்கிருந்து கந்தாருக்கும், அங்கிருந்து கூர்கா என்ற நகரத்திற்குஞ் சென்றார். அவ்விடத்தில் முஸ்லிம்களின் ஜனத்தொகை ஓரளவு இருந்தது. ஹஜ்ரத் 'அலி ரலியல்லாஹு அன்ஹு' அவர்களின் பெயரால் இங்கு ஒரு மஸ்ஜிதுமிருந்தது, இது மாலுமிகளாற் கட்டப்பட்டது. அங்கு "ஹைதரீ தர்வேஷ்கள்" தங்களின் ஷெய்கு உடன் வாசஞ்செய்து கொண்டிருந்தார்கள். இவ்விடத்திலிருந்துஅவர்(இப்னுபத்தூதா)சிங்கப்பூருக்குச் சென்றார். இங்கு ராஜா ஹரிப்புக்கு உட்பட்ட சுல்தான் "ஜமாலுத்தீன் ஹனூரிக்கு" ஒரு சமஸ்தானம் இருந்தது. அதன் தலைநகரம் முஸ்லிம்களால் குடியேறப்பெற்றதாக இருந்தது. இதனுடைய ஜாமியே மஸ்ஜிது பக்தாதிலுள்ள மஸ்ஜிதுகளுக்குச் சமமாக இருந்தது. இம்மஸ்ஜிது சுல்தான் "ஜமாலுத்தீன் ஹனூரியின்" தகப்பனாரான "ஸன்னாகுதா" வால் கட்டப்பெற்றது.

இவர் மாலுமியாக இருந்து அரசுசெலுத்தும் பதவியை அடைந்தவர். இத்தீவுக்குப் பக்கத்திலுள்ள ஒரு தீவின் கோவிலில் யோகிகளைப்போல் வேஷம்பூண்ட "நௌமுஸ்லிமை" "இப்னுபத்தூத்தா" பார்த்திருந்தார்.

சிங்கப்பூரிலிருது இவர் (இப்னுபத்தூத்தா) மலபாருக்கு வந்தார். அப்பொழுது இத்தேசத்தில் சிற்றரசர்கள், பெரிய அரசர்கள் உட்பட மொத்தம் பன்னிரண்டு ஹிந்து அரசர்கள் அரசாங்கஞ் செலுத்திக் கொண்டிருந்ததை அவர் பார்த்தார். தேசம் மிகச் செழிப்பாக இருந்

தது. முஸ்லிம்களுக்கு அதிக மரியாதையு மிருந்தது. ஆயினும், ஹிந்துக்கள் முஸ்லிம்களுடன் சாப்பிடுவதில்லை. அவர்கள் வீட்டிற்கு வந்தாலும்,அல்லது ரஸ்தாவிற்செல்லும்போதும் அவர்களைக்கண்டாலும் முஸ்லிம்களின் மீதுபடாமல் ஒதுங்கிக் கொண்டிருந்தார்கள். முஸ்லிம் வியாபாரிகள், கப்பலோட்டிகள் ஆகியவர்களால் கட்டப்பெற்ற சத்திரங்கள் ஆங்காங்கு இருந்தன. முஸ்லிம்கள் எங்கும் காணப்பட்டனர். இவர் மலபாரில் முதல் முதல் சென்ற ஊர் "ஆபேசுரூர்" என்றும் இது சமுத்திரக் கரையிலிருந்ததாகவும், இவ்விடத்தில் முஸ்லிம்களுக்கு "ஷேய்குஜுமுஆ" என்பவர் தலைவராக இருந்தார். இவர் தர்ம சிந்தனையுள்ளவராகவும், அதிக புத்திசாலியாகவும் இருந்தார் என்றும் எழுதியிருக்கிறார். பின்பு இங்கிருந்து "பாக்னூருக்கு" இப்னுபத்தூத்தா சென்றார்.

இவ்விடத்திலும் முஸ்லிம்களின் வர்த்தக ஸ்தலமிருந்தது. இவர்களுக்கு "ஹுஸைன் சலாத்" என்பவர் தலைவராக இருந்தார். இவரால் கட்டப்பெற்ற மஸ்ஜிது ஒன்றும் உண்டு. இதற்கு கத்தீபும், இமாமும் இருந்தனர். இவ்விடத்திற்கு பாஸ்தேவ் என்பவர் இராஜாவாக இருந்தார். இவருக்கு 30 யுத்தக் கப்பல்களிருந்தன. ஆனால், இவைகளின் காப்டன் (தலைவர்) முஸ்லிமாக இருந்தார். இதற்குப்பின் அவர் "மங்கரூர்" என்ற ஸ்தலத்திற்குச் சென்றார். அங்கு பாரசீகம், யமன் ஆகிய தேசங்களின் வியாபாரிகளை அவர் கண்டார். இவ்விடத்தில் ராம்தேவ் என்பவர் அரசராக இருந்தார். அங்கு நான்காயிரம் முஸ்லிம்களிருந்தார்கள். பிரஜைகள் அவர்களிடம் சிநேகமாக இல்லாவிட்டாலும் வியாபாரம், வர்த்தகம் ஆகியவைகளை முன்னிட்டு ராஜா அம்முஸ்லிம்களுடன் நேசமாக இருந்தார். "பத்றுத்தீன்" என்பவர் இவ்விடத்திய முஸ்லிம்களுக்கு காஜியாக இருந்தார். அவர் இங்கு மதக்கல்வி போதித்தும் வந்தார். "மங்ரூரி"லிருந்து அவர் (இப்னுபத்தூத்தா) ஹப்லிக்குச் சென்றார். "ஹஸன்பதாயி" என்பவர் இங்குள்ள முஸ்லிம்களுக்கு தலைவராக இருந்தார். இவ்விடத்தில் ஒரு பெரிய மஸ்ஜிது ஒன்றிருந்தது. அதன் காரணமாக இங்குள்ள முஸ்லிம்களும், ஹிந்துக்களும் இந்நகரத்தைப் புண்ணிய க்ஷேத்திரமாகக் கருதினார்கள். கப்பற்காரர்கள் இம்மஸ்ஜிதுக்குக் காணிக்கை செலுத்தி வந்தனர். இம்மஸ்ஜிதில் ஒரு மத்ரஸாவுமிருந்தது. அதன் மாணவர்களுக்கு மஸ்ஜிதின் பொக்கிஷத்திலிருந்து உபகாரச் சம்பளமும், ஏழைகளுக்கும், பிரயாணிகளுக்கும் இலவசமாகச் சாப்பாடும் கிடைத்தது. 'மக்தஷ்வா' (ஆப்பிரிக்கா) தேசத்து தர்வேஷ் ஒருவர் அங்கு இருந்தார்.

அங்கிருந்து அவர் (இப்னுபத்தூத்தா) குரு பட்டணத்திற்குச் சென்றார். அவ்விடத்தில் பக்தாது நகரத்து ஆலிம் ஒருவரைச் சந்தித்தார். இவருடைய சகோதரர் இவ்விடத்தில் பெரிய வியாபாரியாக இருந்தார். "கோயல்" என்பவர் இவ்விடத்து அரசர். இவ்விடத்திலிருந்து பாரசீகம், அம்மான், யமன் ஆகிய தேசங்களுக்குக் கப்பல்கள் செல்லுகின்றன. இவ்விடத்திலிருந்து அவர் (இப்னுபத்தூத்தா) பட்டணமென்ற ஸ்தலத்திற்குச் சென்றார். இங்குள்ள அரசர் ராஜா "கோயலுக்குக்" கீழ்ப்படிந்தவர். ராஜா "கோயல்" உடைய தகப்பனால் கட்டப்பெற்ற ஜாமியே மஸ்ஜித் என்று குளம் ஒன்றுமிருக்கிறது. இந்த அரசரின் முன்னோர்களில் ஒருவர் முஸ்லிமாக இருந்திருக்கிறார். அவர் இஸ்லாம் மதம் தழுவியதைப்பற்றிய கதை ஒன்றுண்டு. அதாவது இம்மஸ்ஜிதில் ஒரு மரம் இருந்தது. இலையுதிர் காலத்தில் இம்மரத்திலிருந்து விழுகிற இலைகளில் ஒன்றில் "திருக்கலிமா தைய்யிபா" எழுதப்பட்டிருந்தது. அவ்விலை விழுந்தவுடன் அதில் ஒரு பாதியை ஹிந்துக்களும், மற்றொரு பாதியை முஸ்லிம்களுமாகப் பாகித்துக்கொண்டனர். இவ்வற்புதத்தைப் பார்த்த அரசர் இஸ்லாம் மதம் தழுவி, அவ்விடத்தில் ஒரு மஸ்ஜிதும், குளமும் கட்டுவித்தார். பின்பு அவருடைய மக்களில் யாரும் இஸ்லாம் மதத்தைத் தழுவவில்லை. இவ்விடத்திலிருந்து இவர் "பத்" பட்டணம் (பாலா பட்டணம்) சென்றார். அது சமுத்திரக்கரை ஓரத்திலிருக்கிறது. நகரத்திற்கு வெளியில் ஒரு மஸ்ஜிது இருக்கிறது. அதில் முஸ்லிம் பிரயாணிகள் தங்குகிறார்கள்.

இவ்விடத்தில் பிராமணர்கள் வசிக்கிறார்கள். இவர்களுக்கு முஸ்லிம்களின் மீது வெறுப்பு அதிகம். ஆதலால்தான் இங்கு முஸ்லிம் எவரும் குடியேறவில்லை. மஸ்ஜிதுங்கூட அவர்களுடைய அக்கிரமத்திலிருந்து தப்பித்திருக்கவில்லை. அம்மஸ்ஜிதின் மேல்முகட்டை இடித்த பிராமணன் வீடு நெருப்புப்பற்றி எரிந்ததாகவும், அதனால் அவர்கள் அன்று முதல் அம்மஸ்ஜிதைப் புனிதமானதெனக் கருதத் தலைப்பட்டனர் என்றும் சொல்லப்படுகிறது. இங்கிருந்து அவர் (இப்னுபத்தூத்தா) "பந்தர்யா" என்ற ஸ்தலத்திற்குச் சென்றார். அங்கு முஸ்லிம்களுக்கு மூன்று "மஹல்லாக்கள்" இருப்பதையும், ஒவ்வொரு மஹல்லாவிலும் ஒவ்வொரு மஸ்ஜிது இருப்பதையும், கரையோரத்தில் ஜாமியே மஸ்ஜித் ஒன்றிருப்பதையும் அவர் கண்டிருக்கிறார். "அம்மான்" நகரத்து அரபி ஒருவர் இங்கு காஜியாகவும், கத்தீபாகவும் இருந்தார். சீன தேசத்துக் கப்பல்கள் பனிகாலத்தில் இங்கு தங்குகின்றன.

இவ்விடத்திலிருந்து அவர் இப்னுபத்தூத்தா கள்ளிக்கோட்டைக்கு வந்தார். அங்கு "சாமி" என்ற ஹிந்து அரசராக இருந்தார். இந்நகரம் உலகத்திய பெரிய துறைமுகங்களிலொன்று. சீனு, ஜாவா, சிலோன், மஹல்லதீவு, பாரசீகம் ஆகிய தேசங்களின் கப்பல்கள் இங்கு வந்தன. உலகத்திலுள்ள வியாபாரிகளும், வர்த்தகர்களும் இங்கு ஒருவரை ஒருவர் சந்தித்தனர். "பஹ்ரைன்" தேசத்து முஸ்லிம் வியாபாரியான "இப்ராஹிம் ஷாஹ்பந்தா" என்பவர் இவ்விடத்திய வியாபாரிகளுக்குத் தலைவரா (மலிக்குத்துஜரா)க இருந்தார். இவ்விடத்திய காஜியின் பெயர் "பத்ருத்தீன் உதுமான் "கான்காஹ்" (தர்கா)வுக்கு "ஷெய்குஷஹா புத்தீன் காஜரூனி" "பாரசீகவாசி" ஒருவர் தலைவராக இருந்தார். இவருக்கு ஹிந்துக்களிடமிருந்தும், சீனர்களிடமிருந்தும் காணிக்கைகள் கிடைத்தன. இவ்விடத்தில் "நாகுதா மித்கால்" என்ற ஒரு முஸ்லிம் தனவந்தர் இருந்தார். அநேகக் கப்பல்களுக்குச் சொந்தக்காரராகவும் இருந்தார். இவருடைய கப்பல் இந்துஸ்தான், சீனு, யமன், பாரசீகம் ஆகியதேசங்களிலிருந்து வியாபாரச் சாமான்களை இங்கு கொண்டுவந்து இறக்குமதி செய்வது, இங்கிருந்து அன்னியதேசங்களுக்குச் சாமான்களைக் கொண்டு போவதுமாக இருந்தன. இவ்விடத்தில் பல பெரிய முஸ்லிம் வர்த்தகர்கள் இருந்தார்கள்.

"இப்னுபத்தூத்தா" என்ற சரித்திரக்காரர் இத்தேசத்திற் பிரயாணஞ் செய்த விவரத்திற் கடைசீ விபரங்கள் இவைகள்தாம். இதற்குப் பின்புதான் பஹமினி அரசாங்கமும், விஜய நகரத்தின் ஹிந்து அரசாங்கமும் உண்டாயின. இவைகள் கிட்டத்தட்ட நூற்றைம்பது வருஷங்கள் வரை இருந்தன.

எவ்வாறாயினும் சென்னை மாகாணத்தில் இஸ்லாம் அமைதியாகப் பரவின விபரத்தை உங்களுக்குக் கூறிவிட்டோம். இங்கு முஸ்லிம் அரசாங்கத்தின் சிப்பாய் ஒருவன் கூடவராமலிருந்த காலத்திலுங் கூட, எல்லா இடங்களிலும் இஸ்லாமிய குடிகள் இருந்திருக்கின்றன. மஸ்ஜிதுகள் இருந்தன. இங்கு முஸ்லிம் மாலுமிகள் சமுத்திரத்திற் கரசராக இருந்திருக்கின்றனர். துறைமுகங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருந்தனர். அத்துறைமுகங்கள் மேனாட்டுக்கும், கீழ்நாட்டுக்கும் இடையில் வியாபார மண்டிகளாக இருந்தன. இவர்களின் நன்னடத்தை, உண்மை ஆகியவைகள் ஹிந்து பொது ஜனங்களை மாத்திரமல்லாது, இராஜாக்களையுங்கூட இஸ்லாம் மதத்தைத் தழுவும்படிச் செய்தன. இச்சம்பவங்கள் இஸ்லாம் மதத்தின் சத்தியத்தையும், இஸ்லாம் மதப்பிரசாரத்தின் சரியான முறையையும் உங்களுக்குச் சமர்ப்பித்துக் கொண்டிருக்கின்றன.

கன்வான்களே! இவ்வேழுரை நூற்றுண்டுகளுக்குப் பின் பாமினி அரசாங்கங்கள் ஏற்படுகிற காலம் வந்தது. ஜெயக்கொடி நாட்டுகிற முஸ்லிம் அரசர்களைத் தடுப்பதற்காக எல்லைப்புறத்தில் விஜயநகரம் என்னும் பட்டணத்தை உற்பத்திசெய்யப் படுங்காலமும் வந்தது. இவ்விஜயநகர அரசாங்கத்திற்குள் கிட்டத்தட்ட சென்னை மாகாணம் முழுதும் சேர்ந்திருந்தது. மேலும், அதற்கு அதிகமாகவே சேர்ந்ததாகவும் கூறவேண்டும். இவ்விராஜ்யத்தின் விஸ்தீரணம் "இலங்கையின் எல்லைப்புறத்திலிருந்து, தக்ஷணம் வரையிலும், மலபார் கடைசியிலிருந்து வங்கநாட்டின் எல்லைப்புறம் வரை இருந்தது" என முஸ்லிம் சரித்திரக்காரர்கள் கூறியிருக்கிறார்கள்.

சென்னை மாகாணப் பிரதேசத்தின் மீது முஸ்லிம் அரசர்களின் ஆதிக்கம் சட்டமுறைப்படி எப்பொழுதும் ஏற்பட்டதேயில்லையென்பது உண்மை. ஹிஜ்ரி 750 முதல் 895 வரை பாமினி அரசாங்கம் இருந்தது. இந்நூற்றைம்பது வருஷக்காலத்தில் இவ்விரு அண்டை அரசாங்கங்களும், பலம் பெறும்போதெல்லாம் ஒன்றை மற்றொன்று தாக்கிக்கொண்டே இருந்தன. விஜயநகர அரசாங்கம் தோல்வியுற்றபோது, யுத்த நஷ்ட ஈடும் கப்பமும் கொடுத்தது. ஆனாலும், இக்காலத்தில் "பட்கல்வா"வுக்கும், ராயச்சூருக்கும் அப்புறம் பாமினி அரசர்களுக்கு நேரான ஆதிக்கம் ஏற்படவில்லை. ஒன்பதாவது நூற்றுண்டின் இறுதியில் பாமினி அரசாங்கம் துண்டு துண்டாகப் பிரிந்துவிட்டது. அவைகளிலிருந்து பீஜப்பூரிலுள்ள "ஆதில்ஷாஹ்" அரசர்களுக்குச் சென்னையை சுற்றிய பாகம் கிடைத்தது. ஹிஜ்ரி 895-லிருந்து 971-வரை விஜய நகர அரசாங்கமானது, சில சமயத்தில் இவ்வரசாங்கத்தை வென்று அடக்கிற்று. வேறு சில சமயத்தில் முஸ்லிம்களின் அரசாங்கங்களால் நஷ்டமேற்பட்டுப் பலங்குன்றிற்று. கடைசியாக விஜய நகர சிப்பாய்கள் மஸ்ஜிதுகளை இடித்தனர். மின்பர்களைத் தகர்த்தனர். திருக்குர்ஆனைக் கிழித்தனர். முஸ்லிம்களைக் கொலை செய்தனர். இவ்வாறு அவ்வரசாங்கம்செய்ததானது முஸ்லிம்களை கண் விழிக்கச் செய்தது. முஸ்லிம்களின் எல்லாச் சிற்றரசாங்கங்களும் தங்களுக்குள் உள்ள வேற்றுமைகளைக் களைந்து ஒன்று சேர்ந்தன. 873-ம் வருஷத்தில் விஜய நகரத்தை எதிர்த்துத் தாக்கி, அதன் மத்திய சக்தியை நாசஞ்செய்தன. ஆயினும், தேசத்தின் பாகம் இம் முஸ்லிம் அரசாங்கங்களுக்குக் கிடைக்கவில்லை. விஜய நகர அரசாங்கத்தின் கீழிருந்த பெரிய பெரிய ராஜாக்கள், தங்களிடத்தில் தனித்தனியே சுயேச்சையான அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். இதற்கு இருபத்து ஐந்து அல்லது முப்பது வருஷங்களுக்

குப்பின் டில்லி தேசத்து தைமூர் அரசர்களின் கையில் இவ்வரசாங்கங்கள் வந்தடைந்து, புதிய நூற்றுண்டின் ஆரம்பத்திலிருந்து புதிய அரசாங்கங்கள் உண்டாகவாரம்பித்தன.

இவைகள் இம்மாகாணத்தில் இஸ்லாத்தின் இரண்டாவது காலத்திய விபரமாகும். ஹிஜ்ரி 750 முதல் 1000 வரை நடந்த இவ்விருநூற்றைம்பது வருஷகாலத்திலும் முஸ்லிம்கள் எந்த அரசாங்கத்தையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. ஆயினும் விஜய நகரத்தின் அரசாங்க எல்லைக்குள் முஸ்லிம்களின் ஜனத்தொகை பெருகிக்கொண்டே இருந்தது. ஒரு காலத்தில் அவ்வரசாங்கத்தின் சைனியத்தில் பதினுயிரம் முஸ்லிம்கள் வேலைக்கமர்ந்திருந்தனர்.

தைமூர் அரசர்களின் கைவசத்திலுங்கூட இத்தேச முழுவதும் பூரணமாக வந்துவிடவில்லை. தைமூரிகளின் கீழ் இருந்த தக்கணப் பிரதேசத்திற்கு இம்மாகாணம் உட்பட்டிருந்ததாகவே கருதப்பட்டிருந்தது. ஆற்காடு என்ற மாகாணம் உண்டாயிற்று. கடைசியாக கர்னுடகத்தில் தக்கணமாகாணுதிபதியின் ஆதிக்கத்தின் கீழ் இது ஒரு இஸ்லாமிய அரசாங்கமாயிற்று. மற்றொரு பக்கத்தில் சீரங்கப்பட்டணத்தில் ஹைதர் அலியும், திப்புசுல்தானும் தோன்றினூர்கள். ஆற்காட்டு அரசாங்கமும், ஸ்ரீரங்கபட்டணத்து அரசாங்கமும் ஒன்றுக்கொன்று செய்துகொண்ட யுத்தங்களும், அவைகளின் குறைகளும் உங்கள் முன் இருக்கின்றன. இவைகள் எல்லாம் சில வருஷகாலங்களிற் பூர்த்தியாகிவிட்டன. ஆற்காட்டு அரசாங்கமும் இருக்கவில்லை. ஸ்ரீரங்கப்பட்டணத்து அரசாங்கமும் நிலைநிற்கவில்லை. பிரஞ்சுக்காரர்களின் நண்பருமுயிரோடிருக்கவில்லை. ஆங்கிலேயரின் நன்றிக்காரர் ஆற்காட்டு நவாபும் உயிரோடிருக்கவுமில்லை. இம்மூன்ருவது காலத்தில் இத்தேசத்திற்குள் இஸ்லாம் மதத்திய சரித்திரம் விரோதி, நண்பன் ஆகிய எல்லோருக்கும் முன்னிலையிலிருக்கின்றன. சுல்தான் ஹைதர் அலியும், சுல்தான் ஷஹீது (திப்புசுல்தான்)ம் இப்பக்கங்களிலுள்ள ஜனங்களைப் பலவந்தமாக இஸ்லாம் மதத்திற் சேர்த்தார்கள் என்று பொதுவாக எங்குங் கூறப்படுகிறது. அவர்கள் அவ்வாறு செய்திருந்தால், இப்பொழுது மைசூர் இலாகாவில் முஸ்லிம்களின் ஜனத்தொகை நூற்றுக்கு இருபதுவீதம் இருப்பதற்குப் பதிலாக, குறைந்த பக்ஷம் நூற்றுக்கு50 ஆகிலும் இருந்திருக்கும். டாக்டர் ஆர்னுல்டு என்பவர் "பம்பாய் கேஜட்" 22 வது பிரதியில் 222ம் பக்கத்தையும், 23ம் பிரதியில் 282ம் பக்கத்தையும் குறிப்பிட்டு இஸ்லாம் மதப்பிரசாரத்தைப்பற்றிப் பின் வருமாறு எழுதி இருக்கிறுர்.

"சமீப காலத்திற் பிரபல அரசர்களாக இருந்த இந்த ஹைதர் அலியும், டிப்புசுல்தானும் அநேகம் ஹிந்துக் குடும்பங்களையும், இந் பாகத்திலுள்ள ஹிந்துப் பிரஜைகளையும் கட்டாயப்படுத்தி இஸ்லாம் மதத்திற் சேர்த்தார்களென்று பெயர் பெற்றிருக்கிறார்கள். வாஸ்தவத்தில் அந்தஹிந்துக்கள் இவ்விரு அரசர்களுடைய ஆட்சிக்கு வெகு காலத்திற்கு முன்பே இஸ்லாம் மதத்தைத்தழுவி இருக்கிறார்கள். அவர்கள் எப்பொழுது இஸ்லாம் மதம் தழுவினார்கள் என்பதைப் பற்றிய சரித்திர விபரம் நமக்குக் கிடைக்கவில்லை".

இவ்விரு அரசர்களின் காலமானது கி. பி. 1767 முதல் 1799-க்கு மேல் இல்லை. அதாவது நாற்பத்திரண்டு வருஷங்களுக்கு அதிகமாக இல்லை. இக்கால முழுவதும் யுத்தத்திலும் கலகத்திலுமே கழிந்தது. இவ்வித நிலைமையில் அவர்களுக்கு இஸ்லாம் மதப் பிரசாரஞ் செய்யவேண்டுமென்ற எண்ணம் உண்டாவதற்குக் கூடச் சாவகாசம் இருக்கவில்லை.

(சில பொய்க் கட்டுரை சரித்திரங்களை வாசித்து, முஸ்லிம் அரசர்களாகவும், ஹிந்துக்களுக்கு உதவியாகவுமிருந்த ஹைதர், திப்பு ஆகியவர்களின்மீது அடாதப்பழி சுமத்துகின்ற ஹிந்துநண்பர்கள், கீழ்கூறப்பட்டிருப்பதை ஊணிப்படிபார்களாக! ப. ர்.)

ஸ்ரீநகர மடமும், டிப்பு சுல்தானும்.

இது சம்பந்தமாக நாம் கூறுவதற்குப் பதிலாகச் சென்னை சங்கராச்சாரியாருக்கு, ஸ்ரீநகர மடத்திலிருந்து சில வருஷங்களுக்கு முன்னால் கிடைத்த சில கடிதங்களைக் குறிப்பிடுகிறோம். அவைகள் சுல்தான் ஷஹீது (டிப்பு) அவர்கள் இவ்விடத்திய குருக்களுடன் மிகவும் நல்லவிதமான சம்பந்தம் வைத்திருந்தார் என்பதற்கு ஆதாரமாகயிருக்கிறது. மராட்டியர்கள் இடித்துத் தள்ளிய ஹிந்து மடத்தை மறுபடியும் புதிதாக கட்டிவிக்கும்படிக்கு "விக்கிரகங்களை உடைக்கிற முஸ்லிம் சுல்தான்" என்று பழிசுமத்தப்பட்டவர், தன்னுடைய உத்தியோகஸ்தர்களுக்குக் கட்டளை பிறப்பித்திருக்கிறார். இக்கடிதங்களைப்பற்றி அம்மடத்திலிருக்கிற தற்கால ஜகத்குரு பல தடவைகளிலும் பிரஸ்தாபித்திருக்கிறார். அவைகளின் மூலமாக ஹிந்து முஸ்லிம் சம்பந்தத்தைச் சீர்திருத்த முயற்சி செய்திருக்கிறார். சென்ற 1917ம் வருஷம் டிசம்பர் மாதக் கடைசியிலோ, அல்லது 1918ம் வருஷம் ஜனவரி மாதம் ஆரம்பத்திலோ "பம்பாய் கிரானிக்கல்" பத்திரிகையும் 1918ம் வருஷம் ஜனவரி மாதம் 4

தேதி அலஹாபாத்தில் பிரசுரமாகிற ஹிந்து பத்திரிகையான "லீடர்" பத்திரிகையும் பின்வருமாறு எழுதி இருக்கின்றன.

"டிப்புசுல்தான் மத துவேஷமுள்ள எதேச்சாதிகாரமுள்ள அரசராக இருந்தார். முஸ்லிம் அல்லாதார் ஒருவரைக் கொலை செய்வதால் அவருக்கு ஏற்படுகிற சந்தோஷத்தைப்போல, வேறு எந்த வஸ்தும் அவரைச் சந்தோஷப்படுத்துவதில்லை. அவரால் இயலுமாக இருந்தால், ஹிந்து மதத்தைத் தென்னிந்தியாவில் இல்லாமலாக்கி இருப்பார் என, அவரைப்பற்றி நமக்குக்கூறப்பட்டது. இப்பொழுது நமக்குக் சில ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. அவைகள் ஸ்ரீநகர மடத்துக்குச் சம்பந்தபட்டவை. அவைகள் இதற்கு முந்திய நூலாசிரியர்கள் நமது மாணுக்கர்களுக்கு இது சம்பந்தமாகப் போதிக்கப்பட்டு வருபவைகளை மறுக்கின்றன. இக்கடிதங்கள் சங்கராசாரியாருடைய மதக்காரியாலயத்திற்கும், ஹைதர் அலிக்கும், திப்புசுல்தானுக்கும் இடையில் நடந்தவைகள். இவைகளைத் தனியே பதிப்பித்துப் பிரசுரஞ்செய்யத்தகுந்தவைகள். முஸ்லிம் அரசர்களுக்கும், ஹிந்துத் தலைவர்களுக்கும் இடையிலிருந்த சம்பந்தங்கள் எவ்வாறிருந்தன, வென்பதைப்பற்றிச் சரியான தீர்மானஞ்செய்யத் தகுந்ததாக அக்கடிதங்கள் இருக்கின்றன. திப்புசுல்தானின் 28 கடிதங்களையும் பரிசீலனை செய்து பார்க்கவும், அதை மொழி பெயர்க்கவும் அனுமதி கொடுத்த ஹிந்துமதத் தலைவர்களுக்கு நாம் நன்றி செலுத்துகிறோம். அக்கடிதங்கள் ஒவ்வொன்றும் "எதேச்சாதிகாரமுள்ள" முஸ்லிம் அரசரிடத்தில் ஹிந்துத் தலைவர்களுக்கு எவ்வளவு கௌரவமும் மதிப்புமிருந்த தென்பதைச் சாக்ஷியங் கூறுகின்றன. சில கடிதங்களில் இம்முஸ்லிம் அரசர்கள் தங்களுக்காகவும், தங்களின் அரசாங்கத்திற்காகவும் கடவுளிடத்திற் பிரார்த்தனை செய்யும்படியும், இவ்வரசாங்கத்தில் விருத்தி ஏற்படப் பிரார்த்தனை செய்யும்படியும் ஹிந்து புரோகிதர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவ்வெழுத்துக் குறிப்புகள் மற்றொரு விஷயத்தைக் கவனிக்கையில் மிகவும் முக்கியமானதாகவும் இருக்கின்றன. இந்தியாவில் இவ்விரு (ஹிந்து முஸ்லிம்) மதஸ்தர்களின் சம்பந்தம் மிக நல்லவிதமாக இருந்தன வென்பதற்குப் பலமான ஆதாரமாக இருப்பது மல்லாமல், இவ்விருவர்களுக்குமிடையில் இருந்த சிநேகத்தை பங்கப்படுத்துவதற்கு மதசம்பந்தமல்லாத வேறு காரணமிருந்த தென்றும்அறிவிக்கிறது. ஒரு ஹிந்து ஒரு முஸ்லிம் உடன் ஒற்றுமையாக இருக்கவில்லையென்றால், அவன் தன்னுடைய சுயமதஸ்தனுடன் எக்காரணத்திற்காக ஒற்றுமைப்பட வில்லையோ, அதுவே காரணமாக இருந்திருக்கிறது. மராட்டியர் மஸ்ஜிதுகளைச் சேதப்படுத்தினார்கள்

என்றால், அவைகள் முஸ்லிம்களின் மத சம்பந்தமான இடங்கள் என்பதற்காக சேதப்படுத்தப் படவில்லை. ஆனால், அவைகளைப் பகைவர்கள் பிரியமாகக் கொண்டாடுகிறார்கள் என்பதற்காகவே அவ்வாறு இடித்திருக்கிறார்கள். முஸ்லிம்களின் பரிசுத்த ஸ்தலங்களை நாசம் படுத்தியதுபோலவே, ஹிந்துக்களின் கோவில்களையும் மராட்டியர்கள் நாசப்படுத்தியிருக்கிறார்கள். ஸ்ரீ நகரமடத்தை மராட்டியர்கள் உடைத்தபோது அவர்கள் காட்டிய மிருகத்தனத்தைப்பற்றி, அம்மடத்துச்சாமி, டிப்பு சுல்தானிடம் முறையிட்டு, அத்தேவதையை மறுபடியும் புதுப்பிப்பதற்காக முஸ்லிம் அரசரிடமிருந்து அவர் பணமும், சாமானும் வாங்கியிருக்கிறார். திப்புசுல்தான் மடத்துச் சாமியின் இவ்வேண்டுகோளை நிராகரித்துத் தள்ளவுமில்லை. காபிர்களின் மதச்சண்டையைப்பற்றித் தம்முடைய சந்தோஷத்தை வெளியிடவுமில்லை. ஆனால், அவர் தம்முடைய முஸ்லிம் உத்தியோகஸ்தர்களுக்கு மடத்தை மராமத்துச்செய்து, மறுபடியுங் கட்டவும், அங்கு மறுபடியும் பூஜைகளைச் செய்வதற்கு ரூபாயும், சாமான்களுங் கொடுக்கும்படி கட்டளையிட்டிருக்கிறார்."

கனவான்களே! நூற்றாண்டுகளாகச் செய்து வரப்படுகிற பொய்ப் பிரசாரத்தின் பொய் வெளிப்பட வேண்டும் என்பதற்காகவே, நம் சரித்திர சம்பந்தமான இச்சம்பவங்களை நான் இவ்வளவு அதிகமாகக் கூறினேன். துர் அதிர்ஷ்டவசமாக இப்பொழுது சென்னை மாகாணமும் இதிலகப்பட்டுக் கொண்டது. "காமவேளையிலும், யுத்தகாலத்திலும் எல்லாக்காரியத்தையும் செய்யலாம்" என்ற ஐரோப்பாவின் பழமொழியின்படி காரியம் நடந்து வருகிறது என்பதை யார்தான் அறியவில்லை? இதற்கு வட இந்தியாவில் ஔரங்கசீப்பும், தென்னிந்தியாவில் திப்பு சுல்தானும் இவ்விஷமப் பிரசாரத்திற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். நமது மகாராஷ்டிர நண்பர்களிடமிருந்து வாளாயுதத்தை (அரசாங்கத்தை)ப் பிடுங்கிக்கொண்ட பின்பு அவர்கள் பேனாவைக் கையிலெடுத்துக் கொண்டார்கள். பொய்ச் சரித்திரங்கள், கட்டுக்கதைகள், நாடகங்களின் மூலமாக இஸ்லாம் மதத்தின்மீதும், முஸ்லிம் சுல்தான்களின்மீதுங் கெட்டபெயர் உண்டாக்குவதற்காக வெட்கக்கேடானதும், கேவலமானதுமான முயற்சியைச் செய்து வருகிறார்கள். எனவே, இதே செப்டம்பர் மாத ஆரம்பத்தில் ஆந்திரதேசத்து முஸ்லிம்கள் இவர்களைக் கண்டித்துத் தங்களின் வெறுப்பைக் காண்பித்திருக்கிறார்கள்.

இறந்துபோன பாத்ஷாக்களேயும், சென்றுபோன சம்பவங்களே யும் இப்பொழுது கூறி ஜனங்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்குவதுல், தேசத்துக்கும், சமூகத்துக்கும் தற்கால நிலைமைக்குப்பரிகாரம் ஏற்படுமோவென்பதை, இந்தியாவிலுள்ள ஒவ்வொரு புத்திசாலியும் யும் நன்கு தெரிந்துக்கொள்ளமுடியும். இப்பொழுது அந்த பாத்ஷாக் களோ, சுல்தான்களோ, ரத்தம் ஓட்டியவர்களோ, அநியாயக்காரர் களோ உயிருடன் இல்லை. இவர்களைப்பற்றி சுட்டிக் காட்டுவதனுல் இந்தியாவின் தற்கால அடிமை வளையத்தை எங்ஙனம் உடைத்துத் தள்ளமுடியும்? முஸ்லிம்களோடு தங்களின் மதத்தினரைச் சேர வொட்டாமல் தடுக்கவேண்டுமென்பதையும்; மறந்துபோன கதையை மடக்கி மடக்கிக் கூறி இரு சமுகத்தினர்களுக்கும் ஒற்றுமை யுண்டாக விடக்கூடாதென்பதையும் தவிர, அவர்களுக்கு வேறு நோக்கமிருக்க முடியாது.

இருநூறு வருஷகாலமாக இந்தியாவைத் தங்களது தாய் நாடாகக் கொண்ட முஸ்லிம்களின், டைமூரிய அரசாங்கத்தை இந்தி யாவை விட்டுத் துரத்திவிடவேண்டும் என விரும்பியதற்காக, சிவாஜி ஜயந்தியைக் கொண்டாடுகிறவர்கள் இருநூறு வருஷங்களுக்கு அதிக மாக இருந்தும், இந்தியாவைத் தங்களது தாய் நாடாக்கிக் கொள்ளாத இந்த அன்னிய அரசாங்கத்தை வெளியேற்ற விரும்பிய "**சுல்தான் ஷஹீது**" (திப்பு) அவர்களின் ஜயந்தியைக் கொண்டாடுவார்களென நாம் எதிர்பார்க்கலாமா? இந்தியாவின் பிற்காலச் சரித்திரத்தில் திப்பு சுல்தானைவிடப் பெரிய வீரர் யாரும் உண்டாகவில்லையென்பது யாவரும் அறிந்த உண்மை.

இஸ்லாமிய ஒற்றுமை.

கனவான்களே ! ஸ்ரீரங்கப்பட்டணத்தில் தூங்கிக் கொண்டிருக் கிற, "**சுல்தான் ஷஹீது**" (திப்பு) அவர்களின் மஜாரை (கோரியை) ஜியாரத்துக்குச் சந்தர்ப்பம் கிடைத்தவர்கள், அம்மஜாரின் மீது தங்களுடைய கண்ணீரின் சில துளிகளை விடாமல் இருக்கமுடியாது. ஐரோப்பாவின் நாடு பிடிக்கும் ஆசைக்கு விரோதமாக இஸ்லாமிய ஒற்றுமையைக்கண்டுகொண்டிருந்தவரும், அதற்காக கிரியாம்சையில் முயற்சி செய்தவரும் "சுல்தான் ஷஹீது" (திப்பு) றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தான் இந்தியாவில் முதல் மனிதர். அவர் பற்பல சுல்தான்களுக்கு இது விஷயமாக எழுதிய பல கடிதங்கள் சரித்திரப் புத்தகங்களிற் காணலாம். அரசாங்கத்தின் (ஸ்ரீரங்க பட்டணத்தின்) **தரியா பாக்** சுவரில் சில அரபி வாக்கியங்கள் இன்றுமிருக்கின்றன,

நெப்போலியன் எகிப்தை இஸ்லாமிய அரசாங்கத்தின் ஆதிக்கத்தைவிட்டு வெளியேற்றியதும், இந்தியாவில் ஸ்ரீரங்கப்பட்டணம் சுல்தான் ஷஹீது அவர்களின் ஆதிக்கத்திலிருந்து இங்கிலீஷ்காரர்களின் கைவசமானதும் ஒரே வருஷத்தில் நிகழ்ந்ததால், இவ்விரு சம்பவத்தையுங் கூறி அவ்வரபி வாக்கியத்தில் ஓர் புலவர் கண்ணீர் வடித்திருக்கிறார்.

கனவான்களே ! நம்முடைய ராஜீயவாதிகளும், மதவாதிகளும் தங்களுடைய இஷ்டத்தைச் சொல்லிக் கொள்ளட்டும். கி. பி. 1908 முதல் 1924-வரையில் செய்யப்பட்ட முயற்சிகளெல்லாம் இதே இஸ்லாமிய ஒற்றுமைக்காகவே நடைபெற்றன. முஸ்லிம் உலகத்தின் ஜீவியமானது இந்த ஒரே சம்பந்தத்தின் வாழ்க்கையையே பொறுத்திருக்கிறது. ஐரோப்பாவிலிருந்து ஆசியாவுக்கு வந்து கொண்டிருக்கிற தேசாபிமானம் என்ற வெள்ளமானது, இவ்வொற்றுமைக்கு மற்றொரு பெயராகவே இருக்கிறது. நம்முடைய முயற்சி ஓரளவு சித்தியாகவில்லையானாலும், ஒவ்வொரு சமுகமுந் தங்களை காப்பாற்றிக்கொள்வதற்கு யுக்தமான எல்லா முயற்சிகளையுஞ் செய்ய உரிமைப் பெற்றிருக்கின்றன. இந்தியாவின் இஸ்லாமானது இஸ்லாமிய உலகத்தின் ஓர் நதியாக இருக்கிறது. இந்நதியானது தன்னுடைய உற்பத்தி ஸ்தானத்தை விட்டுப் பிரிந்து, அதனுடைய அழிவுக்குத் தகுந்த சாமானைச் செய்யும் நாள் வராமல் இறைவன் காப்பாற்றவேண்டும். ஜனத்தொகையில் குறைவாக இருக்குந் தேசத்தின் முஸ்லிம்கள், தங்களுடைய சகோதர தேசத்தினர்களைப் பார்க்கிலும் இஸ்லாமிய மதத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, வேறு இஸ்லாமிய "கான்தான்" களுடன் தங்களுடைய சம்பந்தத்தைப் பலப்படுத்திக் கொள்வது கடமையாகும். இவ்வாறு செய்வது ராஜீய விஷயங்களுக்காகவல்ல. மேலும், தங்களுடைய மதம், தங்களுடைய நாகரீகம், தங்களுடைய இஸ்லாமியத்துவம் ஆகியவற்றைக் காப்பாற்றிக் கொள்வதற்கேயாகும்.

இந்திய முஸ்லிம்களின் புனருத்தாரணம்.

ஆனால், கனவான்களே ! நாம் நாமாகவே சீர்திருத்திக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானது. சென்ற காலத்தில் நமக்குள் ஏற்பட்ட புனருத்தாரணச் சீர் திருத்தமானது வேறொரு சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது. அதில் ஸ்திரமும், உறுதியும் இருக்கவில்லை. அது துக்கம், கோபம், உணர்ச்சி, ஆவேசம் முதலியவைகளின் பலனாக ஏற்பட்டது. ஆனால், இப்பொழுது அமைதி, சாந்தம், பொறுமை, உறுதி, தன்னம்பிக்கை முதலிய விதிகளின் மீது

ஸ்தாபிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. புனருத்தாரணம் செய்வதின் கருத்தென்னவெனில், ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள முஸ்லிம்களும், பின்பு எல்லா மாகாண முஸ்லிம்களும் ஒரு திட்டத்திற்குள் அடங்கிய ஒரு சங்கிலியின் ஒரு முனையைப் பிடித்தாட்டினால், அச்சங்கிலி முழுவதும் ஆடுவதுபோல் ஒற்றுமையாகிவிடவேண்டும். பொதுக் கல்வி, மதக் கல்வி, தொழில், வித்தை, வியாபாரம் ஆகியவைகளில் முஸ்லிம்களைக் கிரியாம்சையில் ஈடுபடச் செய்யவேண்டும். எல்லாக் கிராமங்களிலும் முஸ்லிம் குழந்தைகளுக்காக மத்ரசாக் (பள்ளிக்கூடம்) களும், மக்தபுகளும் ஏற்படுத்தவேண்டும். பெரியவர்களின் கல்விக்காக இராப்பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்க வேண்டும். முஸ்லிம்களை வீண்செலவு செய்வதிலிருந்து தடுக்கவேண்டும். மிதமான செலவு செய்யும்படிப் போதிக்கவேண்டும். வீண்செலவுகளும், மத சம்பந்த மற்றவைகளுமான சடங்குகளை ஒரே அடியாக நிறுத்த வேண்டும். விவாகம், துக்கம் முதலிய காலத்திய சடங்குகளில் சீர்திருத்தஞ் செய்யவேண்டும். இச்சபையின் நோக்கங்களில் இவைகள் எல்லாம் சேர்க்கப்பட்டிருக்கின்றன வென்பதற்காகவும், இவைகளெல்லாம் உங்களுடைய வேலைத்திட்டத்தில் இருக்கிறதென்ன வென்பதற்காகவும் நான் சந்தோஷ மடைகின்றேன்.

ஆரம்பக் கல்வியின் அவசியம்.

கனவான்களே! தற்சமயம் தேசம் முழுவதும் உயர்தரக் கல்வியைப் போதிப்பதிலும், "தப்லீக்," (இஸ்லாம் மதப்பிரசாரம்) "தன்ஜீம்," (முஸ்லிம்களைப் புனருத்தாரணஞ் செய்தல்) ராஜீய விஷயங்கள், சீர்திருத்த விஷயங்கள், முதலியவைகளைப்பற்றி எங்குங் கூக்குரலாக இருக்கிறது. ஆனால், முஸ்லிம்களில் ஆரம்பக்கல்வியை விருத்தி செய்து பரப்புவது என்ற ஒரே காரியத்தில் இஸ்லாம்மதப் பாதுகாவல், இஸ்லாம் மதப் பிரசாரம், கல்வி அபிவிருத்தி, ராஜீயச் சீர்திருத்தம் பொருளாதாரம் ஆகியவைகள் எல்லாம் அடங்கி இருக்கின்றன வென்பது என்னுடைய அபிப்பிராயம். அதன் போதனா முறைத் திட்டத்தின்படி மதக்கல்வியும், நல்லொழுக்கமும் முதன்மையான ஸ்தானத்தைப் பெறவேண்டும். அதன் பிறகு இஸ்லாமியச் சரித்திரம் சுருக்கமாகவும் அத்துடன் கணிதம், பூகோளம், இந்தியச் சரித்திரம், தொழிற்கல்வி முதலியவைகளும் போதிக்க வேண்டும். இப்பொழுது நீங்கள் பொதுவான ஒரு திட்டத்தைத் தயார் செய்ய வேண்டும். எல்லாக் குக் கிராமங்களிலும், கஸ்பாக்களிலும், பட்டணங்களிலும் இத்தகைய மக்தபுகளையும், இராப்பள்ளிக்கூடங்களையும் ஸ்தாபிக்க வேண்டியதவசியம்.

பாஷையின் இக்கட்டு.

கனவான்களே! இத்தகைய மக்தபுகள், பாடசாலைகளுக்கு வேண்டியபாடப் புத்தகங்களை ஒவ்வொரு மாகாணங்களிலும் தயாரிப்பது ஓர் பெரிய காரியமாகும். ஆனால், உங்கள் மாகாணத்திலேயோ வெனில், மிகவும் அத்தியாவசியம். சென்னை மாகாணமாகிறது முரண்பட்ட பல பாஷைகளைக் கொண்டிருக்கிறதென்னும் குறையை மறக்க முடியாது. சமூக ஒற்றுமைக்கும், ஒரேவிதமான அபிப்பிராயங்கள் எற்படுவதற்கும் ஒரே பாஷையுமிருப்பது அத்தியாவசியமாகும். சென்னையின் நிலைமையானது ஒவ்வொரு நூறுமைல்களுக்கிடையே பாஷைகள் மாறிவிடுகின்றன. உரியா, தெலுங்கு, மராட்டி, கன்னடம், தமிழுமாக இங்கு எத்தனை பாஷைகள் வழங்கப்படுகிறதோ! ஆண்டவன் தான் அறிவான். அவ்வெல்லாப் பாஷைகளிலும் இப்புத்தகங்களைத் தயாரித்து அவைகளின் மூலமாகக் கல்விபோதிப்பது மிகவும் கஷ்டமாகும். இத்தேசத்தைச் சீர்திருத்துவோர்கள் இதற்கு என்ன வழிகள் யோசித்திருக்கின்றனரோ தெரிகிலேன். எவ்விதத்தாலாயினும் உர்துபாஷையை முக்கியமாய் இம்மாகாணத்தில், லௌகிக வைதீக பாஷை என்ற ஹோதாவில் பரப்பவேண்டியது மிகவும் அத்யாவசியம். பெரும்பாலும் இம்மாகாணத்தில் ஹிந்தியை நிலைநாட்டவென்று சில ஆண்டுகளாகச் செய்யப்பட்டு வரும் முயற்சியைப் பற்றி நீங்களறியாமலிருக்கமாட்டீர்கள். நமக்கு ஹிந்தியைப்பற்றி விரோதமொன்றுமில்லை. மேலும், நாம் அதை ஆதரிக்கவே செய்கிறோம். ஏனென்றால், கிரியாம்சையில் அது உர்துவாகவே இருக்கிறது. என்றாலும், நாம் உர்து ஹிந்தி என்ற தர்க்கத்தை நிறுத்திவிட்டு 'ஹிந்துஸ்தானீ' என்பதில் ஒற்றுமையாகிவிடுவதே சிலாக்கியமானது என்று நினைக்கிறோம்.

உர்துபாஷை.

உர்தூவாகிறது இந்தியாவிலுள்ள எல்லாப் பாஷைகளிலும் மிகவும் குறைந்த வயதுடையதாகும். இது பல ஜாதியினரும் அநேக பாஷைகளுமுள்ள இப்பூமிக்கெனப் பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்டது. அல்லது, ஏற்பட்டிருக்கிறது. ஆகையால், இதற்கு எம்மட்டும் எதிர்ப்புகள் ஏற்படினும் அதன் முன்னேற்றமும், விருத்தியும் குன்றாது. இந்தியாவானது எப்போதாகிலும் ஓரே சமூகம் என ஆகவேண்டுமானால், இந்த ஹிந்துஸ்தானியின் வழியால் மட்டிலுமே சாத்தியமாகும். கற்பித்தல், முயற்சித்தல் முதலிய தில்லாமல் இப்பாஷை தானாகவே விருத்தியடைந்து, பரவியிருப்பது ஆச்சரியமான

தல்லவா? இப்பாஷையைத் தெரியாதவர்களும், பேசவியலாதவர்களும் இத்தேசத்தில் எங்கேனும் ஓர் மூலையில் அகப்படுவது அரிது. மிகவும் தூரத்திலுள்ள இதே சென்னையில் இப்பாஷையைத் திருத்தமாகப் பேசுபவர்களும், இப்பாஷையில் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், புத்தகங்களும் பிரசுரமாகிக் கொண்டிருக்கின்றன. மேலும், இப்பாஷையைத் திருத்தமாகப் பேசுபவர்களும், இப்பாஷையில் வசனங்களும், காவியங்களும் எழுதக்கூடியவர்கள் பலர் இருக்கின்றனர். இது பொதுவாக எவ்வித முயற்சியுமின்றி எங்கும் வியாபித்திருப்பதானது, இப்பாஷை வளர்ச்சி பெறுவதற்கும், பரவுவதற்கும் இதில் எவ்வளவு தூரம் வசதி யிருக்கிறது என்பதற்கு அத்தாக்ஷியாகும்.

ஆனால், கனவான்களே! இந்தியாவின் எல்லா மாகாண முஸ்லிம்களையும் ஒரே சமூகத்தினராக்க, இப்பாஷையின் முன்னேற்றத்துக்கு வேண்டிய பிரசாரத்தில் நீங்கள் விசேஷ முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். இங்குள்ள சில ஆரம்ப பாடசாலைகளை நான் பார்த்திருக்கின்றேன். அவைகளில் மாணுக்கர்கள் உருதுவை விசேஷமாகக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். சென்ற 1925-ம் வருஷத்தில் திருப்பத்தூர் உதுமானிய்யாமத்ரசாவைப்பார்த்து மிகச்சந்தோஷமடைந்தேன்.

பத்திரிகைகளும், மொழிபெயர்ப்புகளும்.

ஒரு பாஷையில் எதுவரை போதிய அளவு பிரயோஜனமுள்ள புத்தகங்களும் நூல்களும் இல்லையோ, அதுவரை அப்பாஷை பேசுவோருக்கு உண்மையான சீர்திருத்தமும், முன்னேற்றமும் ஏற்படாது. இவ்விடத்திய முஸ்லிம்கள் பேசுகிற எல்லாப் பாஷைகளிலும், உங்களுடைய நூற்பிரசுர இலாக்காவானது மதத்தில் முக்கியமானவைகளை அறிந்துகொள்ளவும், தன்னைத்தான் அறிந்துகொள்ளவும் உண்மையான மதக்கொள்கையையும், சரியான போதனைகளையும், நல்லொழுக்கங்களையும் அறிந்துகொள்ளுவதற்காக திருக்குர் ஆன், நாயகத் திருவாக்கியச் சுருக்கம் ஆகியவைகளை மொழிபெயர்க்கவும், அவசியமான பிக்ஹு மசாயில்கள், நபிகள் நாயக ஜீவிய சரித்திரம் கிலாபத் தோராஷிதாவின் சரிதை இஸ்லாமியச் சரித்திரசாரம் ஆகியவைகளைப்பற்றிய நூல்களை எழுதவும் வேண்டுமென நான் ஆலோசனை கூறுகிறேன். இதற்குமுன் நம்மிடத்திலிருந்த இவைகளை மறுபடியும் நாம் அடைவதற்குத் தகுந்த முயற்சி செய்யவேண்டும். இது சம்பந்தமாக நாம் கிறிஸ்துவர்களிடத்தில் இருந்து பாடங்கற்றுக்

கொள்ளவேண்டும். ஏனெனில், அவர்கள் தங்கள் மதத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவருமில்லாத பிற பாஷைகளிலுங்கூட, தங்கள் இஞ்ஜீல் வேதத்தை மொழி பெயர்த்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மதத்தைத் தழுவுபவர்கள் ஆயிரக் கணக்காக இருந்தாலுங்கூட, அவர்கள் அறிந்துகொள்வதற்காக அவர்களின் தாய்ப்பாஷையில் நம்மத விஷயங்களை எழுத நாம் தயாராக இருக்கவில்லை. பரிசுத்த குர் ஆன் உலகத்திலுள்ள எல்லாச் சமுகத்தினருக்காகவும் வந்திருக்கிறது என்பதையும், இஸ்லாம் மதத்தை உலகத்திலுள்ள எல்லா சமுகத்தினரிடம் கூற நாம் கடமைப்பட்டிருக்கிறோமாதலால், நாம் இஸ்லாம் மதத்தை ஒவ்வொரு பாஷையிலும் எடுத்தோதவேண்டிய தவசியமாகும்.

இஸ்லாம் மதப்பிரசாரம்.

முஸ்லிம் சகோதரர்களே! இப்பொழுது சுத்தி இயக்கமானது முஸ்லிம்களைத் தட்டி எழுப்பிவிட்டது. ஆயினும், அவர்கள் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றத் தயாராக இருக்கின்றார்களென்பதை வெளிப்படுத்த விரும்புகிறார்கள். ஆனால், அவர்கள் தங்களுடைய இப்பிரயாணத்தைத் தவறான வழியிற் செல்ல விரும்புகிறார்கள், தப்லீக், என்பதன் அர்த்தம் என்னவென அவர்கள் முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். சத்தியத்தை மற்றவருக்குக் கூறிவிடுவதுதான் முஸ்லிம்களின்மீது கடமையாகும். தூதர் தமது தூதை ஜனங்களுக்குக் கூறிவிடுவது தான் அவர்மீதுகடமை. அவர்கள் அதை ஒப்புக்கொள்ளும்படிச் செய்வது தூதருடைய வேலையல்லவெனத் திருக்குர் ஆன் பற் பல தடவைகளிலும் கூறியிருக்கிறது. "நீங்கள் ஜனங்களை முஸ்லிம்களாகும்படி நிர்ப்பந்திக்கிறீரா?" என நாயகமவர்களை வினவுகிறது. மதத்தில் நிர்ப்பந்த மில்லையென ஓரிடத்தில் கூறியிருக்கிறது. ஏனெனில், மதம் என்பது நம்பிக்கையின் மற்றொரு பெயர். வாளாயுதத்தின் வலிமையினால் யாருடைய இருதயத்திலும், நம்பிக்கையைப் புகுத்த முடியாது. ஆதலால், மதத்தை வாளின் வலிமையால் பரப்பவேண்டுமென இஸ்லாம் போதிக்கவில்லை. கிறிஸ்தவப் பாதிரிகளைத் தவறாகப் பின்பற்றவும் கூடாது. அவர்கள் மதத்தில் ஆசையையும், கோரியவஸ்துக்களையும் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். நாம் இந்தியாவில் உயிருடனிருப்பதற்காகப் பெரும்பான்மையினராக இருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன், ஹிந்துக்களைப் போல் மதப்பிரசாரஞ் செய்யலாகாது. நம்முன்னிலையில் நமது நபிகள் பிரான், நமது உலமாக்கள், நமது சூபிகள், நமது சஞ்சாரிகள், நமது வியாபாரிகள் ஆகியவர்களின் அரிய ஊழியங்கள் இருக்கின்றன.

உலகசம்பந்தமான எண்ணமில்லாது ஜனங்களின் நன்மை, மனிதனின் விடுதலை, முக்தி ஆகிய வைகளுக்காகவே இப்புனித காரியத்தைச் செய்திருக்கிறார்கள். முக்திபெற ஒருவன் விரும்புவதை அவர்கள் கண்டால், உடனே அவனுக்கு அவ்வழியைக் காட்டுகின்றார்கள். அவர்களின் பழக்க வழக்கம், நற்குணம், நல்நடத்தை ஆகியவைகள் அவர்களின் இப்புனித வேலைக்கு வழியாகவிருந்தன. இக்காலத்தைப்போல் மததர்க்கங்கள் இருக்கவில்லை. பத்திரிகையில் வியாசங்கள் எழுதிக் கொண்டுமிருக்கவில்லை. தென்னிந்தியாவிலும், மற்றதீவுகளிலும் இஸ்லாம் மதம் சிப்பாய்களின் பலத்தினால் பரவவில்லை. வியாபாரிகளினாலேயே பரவிற்று. சென்னை மாகாண முஸ்லிம்களே! முயற்சி செய்யுங்கள். இஸ்லாத்தின் சரித்திரத்தில் உங்கள் சரித்திரத்தை மறுபடியுந் திருப்புங்கள்.

தாருல் இஸ்லாம்.

முற்காலத்தில் ஒருவன், மற்றொருவன் மூலமாக இஸ்லாம் மதத்தைத்தழுவினால், அவன் அவருடைய குடும்பத்தில் ஒரு அங்கத்தினனாகி விடுகிறான். மேலும், இஸ்லாம் மதத்தைத் தழுவியவுடன் அவனுடைய கபீலா, குலம், வங்கிஷம் ஆகியவைகளில் அவனையும் ஒருவனாகக் கருதப்பட்டு வந்தது. இதன் பலனாக அவன் இஸ்லாம் மதந்தழுவித் தன்னைத் திக்கற்றவனாகவும், வீடு வாசலில்லாதவனாகவும், யாதொரு கதியுமில்லாதவனாகவும் அவன் கருதுவதில்லை. தான் ஒரு குடும்பத்தைச்சேர்ந்தவனாகவும், ஒரு பந்துத்துவத்திற் சேர்ந்திருப்பவனாகவுமே தன்னைக் கருதிக்கொண்டிருந்தான். ஆனால், இக்காலத்தில் ஒருவன் முஸ்லிமாகப் பெற்றால், உடனே அவன் வீடு வீடாக அலைந்து, பிச்சை எடுத்துத் தன் வயிற்றை வளர்க்கின்றான். இதனால் பிச்சைக்காரன், இரந்துண்ணி என்ற பெயர் இவனுக்குக் கொடுக்கப்படுகிறது. இது மிகவும் வருந்தத்தக்க நிலைமையாகும். இஸ்லாத்திற்கு இது இழிவைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. இஸ்லாம் மதத்தைத் தழுவி, முஸ்லிமான உடன் அவன் தன்னைத் திக்கற்றவனாகவும், உதவியற்றவனாகவும் இருக்கக் காண்கிறான். அவனுக்கு மதக்கல்வி ஒன்றும் சொல்லிக் கொடுப்பதில்லை. அவன் சந்ததியினருக்குக் கல்வி போதிப்பதற்குத் தகுந்த வசதி எதுவுமிருப்பதில்லை. ஆதலால், ஒவ்வொரு மாகாணத்திலும் குறைந்த பக்ஷம் ஒரு தாருல் இஸ்லாம் இருக்கவேண்டும். அதிற் புதிய முஸ்லிம்கள் இருப்பதற்கு இடங்கொடுக்க வேண்டும். அவர்கள் அதில் சொற்பகாலம் தங்கியிருந்து மதக்கல்வியையும், ஒழுக்கத்தையும் கற்றுக்கொள்ள வேண்

டும். ஏதேனுமோர் தொழிலேயும் கற்றுக்கொள்ளவேண்டும். அவர்களின் நிலைமை திருப்திகரமானதாக ஆகும்வரை, அவர்களை அவ்விடத்தை விட்டுப் பிரிக்கக்கூடாது. சிறிய பிள்ளைகளாக இருப்பவர்களுக்கு பாடசாலைகளிலும், மத்ரஸாக்களிலும் கல்வியயிற்றுவிப்பதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும்.

உங்களுடைய நோக்கங்களில் இதுவும் ஒன்ருக இருக்கிறதை நான் பார்க்கிறேன். ஆனுல், இது எவ்வளவு தூரம் உங்களுக்கு வெற்றியாகி இருக்கிறதென்பது எனக்குத் தெரியாது.

லௌகீகப் பாடசாலையில் வைதீகக்கல்வியும், வைதீகப் பாடசாலையில் லௌகீக் கல்வியும் போதித்தல்.

என்னுடைய சகோதரர்களே! "தீன்" என்றும் "துன்யா" என்றும் (லௌகீகம் வைதீகம் என்று) வித்தியாசம் ஏற்பட்டிருப்பதுதான், இக்காலத்தில் முஸ்லிம்களுக்கு இருக்கிற கஷ்டங்களிலெல்லாம் மிகப் பெரியதாக இருக்கிறது. இஸ்லாம் மதம் பாகுபாட்டை அழித்துவிட்டது. ஆயினும், இப்பொழுது அது எவ்விதமாகவோ இதற்குள் வந்து புகுந்து கொண்டது. இதன் பலனாகக் கல்விகளும், பாடசாலைகளுங்கூட லௌகீகம் வைதீகம் என இரண்டு விதமாகப் பிரிந்துவிட்டன. ஆனுல், வைதீகம் (மதம்) என்ற ஒரே வகைதான் இருக்கிறது. எவ்வாருயினும் நாம் இப்பொழுது இக்கஷ்டத்திற்குள் அகப்பட்டிருக்கிறும். இயன்றவரை இதிலிருந்து நாம் விடுதலைபெற முயற்சி செய்ய வேண்டும். அதற்கு வழியென்னவென்ருல், நமது உலமாக்கள் தற்காலத்தில் இஸ்லாமிய ஊழியங்களைச்செவ்வனே செய்வதற்குத்தகுந்தவிதமான லௌகீகக் கல்வியை, நம்முடைய மதப்பாடசாலைகளில் போதிக்க வேண்டும். நமது முஸ்லிம் மாணவர்கள் தங்கள் மததர்மங்களை அறிந்தவர்களாக இருப்பதற்காக லௌகீகப் பள்ளிக்கூடங்களில் மதக் கல்விகளையும் போதிக்க வேண்டும். அரசாங்கப் பள்ளிக்கூடத்தில் பாடம் போதிக்குங்காலத்தில் முதலாவது பீரியடை (Period-மணி)யாவது, அல்லது கடைசிப் பீரியடையாவது மதக்கல்விக்காக ஒதுக்கி வைக்கவேண்டுமென முயற்சி செய்வது ஒன்று. பல கல்லூரிகளும், பள்ளிக் கூடங்களும் உள்ள பெரிய நகரங்களில் ஞாயிற்றுக்கிழமையன்று, எல்லா மாணவர்களேயும் ஒன்று கூட்டி இஸ்லாம் மதக்கொள்கை, இஸ்லாமிய சரித்திரம், நபிகள் நாயகமவர்களின் நற்குணங்கள், இஸ்லாமிய போதனை ஆகியவைகளைப் பற்றித் தொடர்ச்சியாகப் பிரசங்கம் செய்யவேண்டும். அவர்களுக்கு அவர்களின் மனதில் நன்கு பதியவும், அவ

களிடம் மத ஒழுக்கங்கள் விருத்தியாவதற்குத் திருக்குர் ஆன், நபி கள் நாயகமவர்களின் ஹதீதுக்கள் அடங்கிய முக்கிய கிரந்தங்கள், ஆகியவைகளை மொழிபெயர்த்துக் கூறவேண்டும். இது இரண்டாவது வழி.

ஒழுக்கம்.

நம்முடைய மத்ரசாக்களிலும் மக்தபுகளிலும் இரண்டு விஷயங்கள் மிகக்குறைவாக இருக்கின்றன. முதலாவ தென்னவெனில், இம் மத்ரசாக்களும், மக்தபுகளும் எழுதப்படிக்கக் கற்றுக்கொடுக்கும் காரியாலாயங்களாகவே இருக்கின்றன. ஆனால், அவைகள் ஒழுக்கங்களையும், பழக்கங்களையும், நல்லாசாரங்களையும் உண்டாக்கக்கூடியவைகளாக இருக்கவேண்டியதாக இருக்கின்றன. ஒரு பையன் கஷ்டப்பட்டு உழைக்கூடியவனாகவும், எழுதுவதிலும், படிப்பதிலும் கெட்டிகாரனாகவும் இருந்தால், இவைகள் அவனுடைய நன்மைகளுக்குப் போதிய ஜாமீனாக இருக்கின்றன. ஆனால், இதைப்பார்க்கிலும் அதிகமானதும் முக்கிய நன்மையானதுமாகியது, அவனுடைய ஒழுக்கம் நல்லதாகவும், பலமுள்ளதாகவும் இருக்கவேண்டும். அவன் பொய் சொல்லாதவனாக இருக்கவேண்டும். காலத்தை வீணே கழிக்காதவனாக இருக்கவேண்டும். அவனுடைய நடையுடைபாவனை சரியானதாக இருக்கவேண்டும்.

அம்மாணவன் பரிக்ஷையில் தேறுவதற்காக அவனுடைய உபாத்தியாயர்கள் எவ்வளவு சிரமமெடுத்துக் கொள்ளுகிறார்களோ, அவ்வளவு சிரமும் முயற்சியும் இவைகளுக்காகவும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

நண்பர்களே ! எழுதப்படிக்கத் தெரிந்துகொள்வதனால் ஒருசமூகம் விருத்தியடைந்து விடுவதில்லை. மேலும், ஒழுக்கம், நற்பழக்க வழக்கங்களிலும் மாத்திரமே வளர்ச்சியடைகிறது. திருக்குர் ஆன் சென்றுபோன எல்லாச்சமூகத்தினர்களின் விபரங்களையும், அவர்கள் தீய ஒழுக்கங்களைச் செய்து அழிந்து நாசமாயின சம்பவங்களையுங் கூறி இருக்கிறது. அவைகளில் இவ்வொழுக்கத்தை முக்கியமாகக் காட்டி இருக்கிறது. முஸ்லிம்கள் பாரசீக தேசத்தை ஜெயித்தபோதும், ரோமர்களைத் தோற்கடித்து எகிப்து, ஷாம் ஆகிய தேசங்களைக் கைபற்றியபோதும், முஸ்லிம்கள் புறக்கல்விகளிலும், வித்தைகளிலும், எழுதப்படிப்பதிலும் ரோமர்களைப்பார்க்கிலும் இன்னும், பாரசீகர்களைப் பார்க்கிலும் சிறந்தவர்களாக இருக்கவில்லை. அவ்வாறிருந்தும் அவர்களின் வெற்றிற்குநல்லொழுக்கமும், நன்னடத்தையுமே காரணமாக இருந்தது. இக்காலத்திலுங்கூட சமூகத்தை இந்தக்ஷீண திசையி

விருந்து விடுவிக்கக் கூடியது நல்லொழுக்கமும், நல்நடத்தையுமே யாம். எந்த ஜனங்கள் ஈமான் (தெய்வபக்தி, விஸ்வாசம், நன்னம்பிக்கை) நற்காரியங்கள் ஆகியவைகளில் சிறந்திருக்கிறார்களோ, அவர்களுக்குத் தன்னுடைய பிரதிநிதித்துவத்தையும் கருணையையும் அளிப்பதாக, அல்லாஹுத்தஆலா வாக்களித்திருக்கிறார். "உங்களில் எவன் விசுவாசங்கொண்டு, நல்ல காரியங்களை உண்மையாகச் செய்கிறானோ, அவனை நிச்சயமாக அல்லா பூமிக்குத் தன்னுடைய கலீபாவாக நியமிக்கிறான் என அவன் வாக்களித்திருக்கிறான்" (திருக்குர்ஆன்) இத்தகைய நல்லோருக்குமறுமையின்நன்மைகளையும் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறான்:—"அவர்களில் எவர்கள் விஸ்வாசங்கொண்டு, நற்காரியங்களைச் செய்கின்றார்களோ, அவர்களுக்கு அல்லா, (மருமையில்) பிழைபொறுத்தும், மிகப்பெரிய கூலியையும் கொடுப்பதாக வாக்களிக்கிறான்" (திருக் குர்ஆன்).

திரேகப் பயிற்சி.

கனவான்களே! நம்முடைய மத்ரசாக்களிலும், மக்தபுகளிலும் கொஞ்சங்கூடக் கவனிக்கப்படாத மற்றோர் விஷயம் என்னவென்றால், திரேகப்பயிற்சியே. திரேக சுகத்திற்குத் தேகப்பயிற்சி அத்தியாவசியமாக இருப்பதுபோல், மாணுக்கர்களின் ஞாபக சக்திக்கும், தீவிர விளக்கத்திற்கும், நுட்ப புத்திக்கும் திரேகபயிற்சி அவசியமானது என நவீன தத்துவ சாஸ்திரம் நிருபித்திருக்கிறது. நமது மாணவர்களுக்கு உன்னத நோக்கம், வேலை செய்வதில் உற்சாகம், கல்வி பயிலும் வேளைகளில் ஊக்கமெடுத்துக்கொள்ளப் பிரியம், கஷ்டகாலத்தில் உறுதி ஆகிய இவைகள் உண்டாவதில்லை. சிறப்பாக அரபிக்கல்லூரிகளின் மாணவர்களில் இது சிறிதும் இல்லை. திரேகப் பயிற்சியானது பொதுவாக உல்மாக்களின் கௌரவத்திற்கும், அந்தஸ்திற்கும் விரோதமானது என்றும், மதக் கல்வி படிக்கும் மாணவர்களின் தூய்மைக்கு விரோதமானதென்றும் கருதப்படுகிறது. ஆனால், இது மிகப் பெரிய தவறு. கண்ணியவான்களான அஸ்ஹாபிமார்களும், முற்காலத்திய உலமாக்களும் ஆகிய இவர்களின் ஜீவிய சரித்திரங்களைப் படித்துப் பார்த்தீர்களானால், இப்பெரியோர்கள் இதை எவ்வளவுதூரம் கிரியாம்சையிற் செய்துகொண்டிருந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் காலத்தில் குதிரை ஏற்றம் மிக்கவிசேஷமாகச் செய்யப்பட்டு வந்தது. ஸஹாபிகளில் அப்துல்லாஹிப்னு உமர் (றலி) போன்ற துறவிகள் இதை மேற்பார்வை செய்பவர்களாக

இருந்தார்கள். வில் வித்தை கற்றுக்கொடுக்கப் பெற்றுவந்தது. நபிகள் நாயகமவர்களே இதில் உற்சாகப்படுத்திவந்தார்கள். வெறுங்காலில் ஓடும் போட்டிப் பந்தயங்களும் ஸஹாபிகளில் நடைபெற்று வந்தன. ஹஜ்ரத் "ஸல்மப்னு அக்வஹ்" என்பவர் போட்டியில் எல்லோரையும் வெல்பவராக இருந்தார்கள். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களே இதில் போட்டிக்கு ஓடியிருக்கிறார்கள். "அபூதாவுத்" என்றநூலில் இந்த ஹதீது இருக்கிறது. "இமாம்புகாரி" யைப் பார்க்கிலும் மேம்பட்ட (சிறந்த) ஆலிம் இக்காலத்தில் எவருமில்லை. அவர் இவ் வில்வித்தையில் மிகத் தீரராக இருந்தார், அவருடைய வாழ்நாள் முழுவதிலும் ஒரே ஒரு தரந்தான் அவருடைய அம்புக் குறி தவறி இருக்கிறது. ஹஜ்ரத் "அப்துல்லாஹிப்னு முபராக்" ஒருவருஷத்தில் பண்ணிரண்டு மாதங்களையும் பல விரிவாகப்பிரித்து வைத்திருந்தார். சிலமாதங்களில் அவர் ஹதீதுகளைப்போதிப்பார். வேறு சில மாதங்களை வர்த்தகத்தில் கழிப்பார். மற்றுஞ்சில மாதங்கள் ஹஜ்ஜுப் பிரயாணத்திற்குப் போகுவார். இன்னும் சில மாதங்களில் இஸ்லாமியச் சைனியங்களுடன் சேர்ந்து, எல்லைப் புறங்களில் "ஜிஹாதில்" (யுத்தத்தில்) இருப்பார். வாலிபப் பருவமுள்ள ஸஹாபிகள் குஸ்தி (மல்யுத்தம்) செய்திருக்கிறார்கள். "பத்ரு" யுத்த சமயத்திலோ, அல்லது "உஹத்" யுத்தச் சமயத்திலோ அப்துல்லாஹிப்னு உமரும், இன்னுஞ்சிலஸஹாபிகளும் முஸ்லிம் சைனியங்களிற் சேருவதற்காக மல்யுத்தஞ்செய்து, தங்கள் திறமையைக் காட்டியிருக்கிறார்கள். திரேகப்பயிற்சியும், திரேகத்துக்குப் பலங்கொடுக்கக்கூடிய விளையாட்டும் மத உணர்ச்சிக்கும், தூய்மைக்கும் விரோதமானவையல்லவென்று இவ்விரு சம்பவங்களும் நன்கு அறிவிக்கின்றன. மேலும், அந்தரங்க சுத்தியான நல்ல எண்ணம் இருக்கும்பக்ஷத்தில், இவைகள் வணக்கமாகவும், நன்மைக்குக் காரணமாகவும்இருக்கின்றன.

அரபி மத்ரசாக்களின் சீர்திருத்தம்.

சென்னை மாகாண உலமாக்களே! நம்முடைய அரபிமத்ரசாக்களைத் தற்கால நிலைமைக்குத் தக்கபடி, அதிக சீர்திருத்தஞ் செய்ய வேண்டிய திருக்கிறதென்பதை, நீங்கள் உணர்ந்திருப்பது சந்தோஷத்திற்குரிய விஷயமாகும். இவ்வுணர்ச்சியின் பலனுகவே ஓர் மத்ரசா பாக்கியாத் ஸாலிஹாத்திலும், கர்நூல் மத்ரஸாயே இஸ்லாமிய்யாவிலும் புதிய சீர்திருத்தத்தின் அறிகுறிகளைக் காண்கிறோம். கீழ் கூறும் திருத்தங்களுக்கான ஆதாரங்களையும், சான்றுகளையும் மேற்கோள்களையும் நீண்ட வாக்கியங்களால் கூறுவதை விடுத்துச் சுருக்கமாகக் கூறியுள்ள விஷயங்களில் கவனம் செலுத்தவேண்டும்.

1. அரபி மத்ரசாக்களின் மாணவர்களிருதயத்தில் மத பக்தியும், தக்வாவும், நற்குணங்களும் உண்டாக்க வேண்டும்.

2. அவர்களுக்கு தூய்மை, பரிசுத்தம் முதலிய நற்பழக்கங்களை உண்டுபண்ணவேண்டும்.

3. அவர்களின் சிந்தைகளில் உன்னதநோக்கங்கள், பொறுமை, உறுதி, கஷ்டப்பட்டுழைத்தல், கஷ்டத்தைச் சகித்தல் ஆகியவைகள் உண்டாக்கவேண்டும்.

4. வாசித்தல், இருத்தல், சாப்பிடுதல், பருகுதல் முதலியவைகளில் ஆடம்பரமின்றிச் சாதாரணமாக இருப்பதும், இருப்பதைக் கொண்டு திருப்தியடைதலும் ஆகியதைகளையும் பழக்கவேண்டும்.

இவைகள் அவர்கள் அப்பியாசப்படுத்துவதைப் பொறுத்தவைகள். போதிக்கவேண்டியவைகள் வருமாறு:—

1. நாம் அவசியமில்லாமலே நம்முடைய கல்வித்திட்டத்தில் சேர்த்திருக்கிற, கிரேக்கதத்துவ சாஸ்திரங்களை நாம் எடுத்துவிடவேண்டும். அதற்குப்பதிலாக நவீனக்கல்விகளில், கணிதசாஸ்திரம், பூகோள சாஸ்திரம், சரித்திரம் போன்ற பிரயோஜனமுள்ளவைகளை நாம் சேர்க்கவேண்டும்.

2. பிற்காலத்திய உலமாக்களால் எழுதப்பெற்ற கரடுமுரடானதும், விளங்கமுடியாததுமான வாக்கியங்களிலுள்ள கித்தாபுகளையும் நீக்கிவிட்டு, முற்காலத்தில் உலமாக்களின் சாதாரணமானதும், எல்லோருக்கும் தெரியும்வண்ணமாக எளிய நடையில் எழுதப்பெற்றதுமான கித்தாபுகளைச் சேர்க்கவேண்டும்.

3. அரபிப்பாஷா ஞானம், அரபியில் பிரசங்கம் செய்தல் ஆகியவைகளில் சக்தியை உண்டாக்கவேண்டும். எதுகை, மோனை இன்னின்னதெனக்கூறுகிற காபியா, ஸஜஹ் ஆகிய கித்தாபுகளை எடுவிட்டுத் தற்காலக் கல்விசபைகளிலும், சமூகச் சபைகளிலும் பிரசங்கஞ்செய்ய உதவியாகவிருக்கிற நாகரீகமான அரபி வாக்கியங்களுள்ள புத்தகங்களைப் பார்த்துக் கொடுக்கவேண்டும். உதாரணமாக ஜாஹில்இப்னுகைத்தபா, இப்னுமகனஹ், அபூஹிலால் அஸ்கரீ, தப்துல்காஹிர் ஜுர்ஜானி, இப்னுகல்தூன் முதலியவர்களின் நூல்களைப் படித்துக்கொடுக்கலாம்.

4. பிக்ஹுவில் பூர்வீககாலத்து விஷயங்களுடன், புதிதாக ஏற்பட்ட பிரசினைகளுக்கும், பதில் கூறுவதற்கும் அவர்களைத் தயார் செய்ய வேண்டும்.

5. தொழுகையில் சூரயேபாத்திஹாவின் இறுதியில் 'ஆமீன்' என்ற பதத்தை உறக்க ஓதவேண்டும் என்றும், தொழுகையில் ருக்

கூஃ, ஸுஜுதுக்குப் போகும்போது கைகளை உயர்த்தவேண்டும் என்றும் நாயக வாக்கியத்திற் கூறப்பட்டிருக்கிறது. இத்தகைய பிரச்சினைகளை வற்புறுத்துவதற்குப் பதிலாக நற்குணம், சுத்தம் பய பக்தி, நாயக வாக்கியங்களில் கூறப்பெற்றிருக்கிற உபதேசங்கள் ஆகியவைகளில் தங்களுடைய பலத்தைச் செலுத்தவேண்டும். தனிப்பட்ட முறைகளின் விபரங்களுடன், சமூகத்தின் நிலைமையையும் சேர்த்துப்பார்க்க முயற்சி செய்யவேண்டும்.

6. பரிசுத்த குர்ஆன் முழுவதையும் போதனுமுறைத் திட்டத்திற் சேர்க்கவேண்டும். குர்ஆனிற் கூறப்பெற்றிருக்கிற பிக்ஹு ஒழுக்கம், மதக்கொள்கை, சரித்திரம் ஆகிய பற்பல விஷயங்களைப் பற்றியும் உபதேசங்கள் செய்யவேண்டும். ஒவ்வொரு விடயங்கள் சம்பந்தமாகவும், இஸ்லாத்தின் போதனை என்னவென்றும், மனிதர்களுடையவும் சமூகங்களுடையவும்முன்னேற்றத்திற்கும், தாழ்வுக்குங் காரணமாக இருக்கிற விதிகள் என்ன கூறப்பெற்றிருக்கிறன்னவென்பதையும், மாணக்கர்கள் தெரிந்து கொள்வதற்காக ஒவ்வொரு பிரச்சினை சம்பந்தமான ஆயத்துகளையுந் தனித்தனியே பிரித்து அவர்களுக்குக் கூறவேண்டும்.

7. அக்காயித் கித்தாபுகளிற் சென்ற காலத்திலிருந்த பிரிவினரைப்பற்றிக் கூறப்பட்டிருப்பவைகளைப் பிரித்தோ, அல்லது குறைத்தோ தற்கால மிருக்கிற பிரிவினரைப்பற்றிய மறுப்பும், விவாதமும் கற்றுக்கொடுக்கவேண்டும். இப்போது இஸ்லாமதத்தின் மீது செய்யப்படுகிற ஆக்ஷேபனைகளுக்குப்பதில்களையும் அவர்களுக்குக் கற்று கொடுக்கவேண்டும்.

8. நபிகள் நாயகமவர்களின் ஜீவிய சரித்திரம், குலபாயே ராஷிதீன்களின் சரித்திரம், இஸ்லாமிய சரித்திரத்தின் சுருக்கம் ஆகியவைகளை கல்வித் திட்டத்திற் சேர்க்கவேண்டும்.

9, தற்காலத்திய ஜாதியினர்களைப்பற்றியும், இஸ்லாமிய உலகத்தின் நிலைமையையும், ராஜிய விஷயங்களையும் அவர்களுக்குப் போதிக்கவேண்டும்.

10. ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய பாஷைகளில், இஸ்லாம் மத சம்பந்தமாகக் கூறப்பெற்றிருக்கும் அரும்பெரும் புதையல்களை அறிந்து கொள்வதற்க்காகவும், சத்யமதப் பிரசாரங்களை அப்பாஷைகளின் மூலமாகச் செய்வதற்கும், ஆக்ஷேபனைகளுக்கு பதில் கூறுவதற்கும், ஏற்றவிதமாக அப் பாஷைகளைச் சில மாணவர்கள் அறிந்திருக்கவேண்டும்.

முஸ்லிம்களும், பொருளாதாரமும்.

சகோதரர்களே! உங்கள் மீது மத சம்பந்தமான இக்கடமைகள் இருப்பதுடன், உலக சம்பந்தமான கடமைகளையும் நீங்கள் மறந்து விடாதீர்கள். அந்தரங்க சுத்தியுடனும், நல்லெண்ணத்துடனும் அவைகளை நீங்கள் செய்தால், அவைகள் மதக்கடமைகளாகவே ஆகிவிடுகின்றன. இந்தியாவில் சமீப காலமாக வகுப்புச் சச்சரவுகள் தலைகாட்டி இருக்கின்றன. இதிலிருந்து இத்தேசத்தில் முஸ்லிம்களின் வாழ்க்கைக்கு அவர்களின் பொருளாதார நிலைமையும், செல்வ நிலைமையும் மிகவும் நல்லவிதமாகவும், பலமுள்ளதாகவும் இருக்கவேண்டுமென்பது நன்கு தெரிந்துவிட்டது. தங்களின் செல்வ நிலைமையைப் பலப்படுத்திக் கொள்ளத்தகுந்த முறைகளைத் தெரிந்திருக்கிற ஜனங்களுக்குள் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். அவர்கள் தங்களின் பலத்தைப்பற்றி அளவில்லாப் பெருமை கொள்கிறார்கள். இப்பலத்தின் மீது நம்பிக்கை வைத்து இஸ்லாம் மதத்தை இத்தேசத்தில் ஒழித்துவிட முற்பட்டிருக்கிறார்கள். ஆதலால், முஸ்லிம்கள் தங்களின் நிலைமையை என்னவென்று நன்கு கவனித்துப் பார்க்க வேண்டும். மதராஸில் வியாபாரம் நன்றாய் விருத்தியடைந்திருக்கின்றது. இதில் முஸ்லிம்களுக்குக் கொஞ்ச பாகம் கிடைத்திருக்கிறது. ஆயினும், கவனித்துப்பார்த்தால் இம்மாகாணத்திலும் முஸ்லிம்களின் வியாபாரம் வரையறுக்கப் பெற்றதாகவே இருப்பதை நீங்கள் அறிவீர்கள். தோல் வியாபாரம், அல்லது இதர வியாபாரங்களிற் சிறிது வியாபாரம் உங்களுக்கு இருக்கிறது. ஆதலால், நீங்கள் இன்னும் முன்னேறவேண்டும். எல்லாவிதமான சகல வியாபாரங்களிலும் பிரவேசிக்கவேண்டும். நீங்கள் பட்டணத்திலிருந்தாலுஞ் சரி, பட்டிக்காட்டில் இருந்தாலுஞ்சரி, உங்களுடைய சகவாசிகளுடன் தோளோடு தோள் சேர்ந்து ஜனங்களுக்கு வேண்டியவைகளைச் சேகரிக்க முயற்சி செய்ய வேண்டும்.

சென்னைமாகாணத்து முஸ்லிம்கள் பொதுவாக ஆடம்பரமற்ற வாழ்க்கையை நடத்துகிறார்கள், என்பதைக் கூற எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது. அவ்வாறாயினும், அவர்களும் தங்களுடைய வட இந்தியா முஸ்லிம் சகோதரர்களைப்போல், ஹிந்து சௌகார்களிடமும் பிடிபடாமல் இருக்கவேண்டும். அவ்வாறில்லை! ஆனால், முஸ்லிம்கள் ஆபத்து வருமுன் எச்சரிக்கையாக இருந்துகொள்ளவேண்டும். வட இந்தியாவில் ஆரிய சமாஜக் கடன்காரர்களும், ஜமீன்தாரர்களும் கடன்பட்ட ஏழை முஸ்லிம்களையும், விவசாயிகளையும் மதம் மாறும்படி நிர்ப்பந்தித்து மிருக்கிறார்கள். இந்தப்பக்கத்தில் இவ்விதமான நிலைமை

ஏற்படமாட்டாது என்ற நம்பிக்கை இருந்தாலுங்கூட, இத்தேசத்தில் மற்ருெரு பாகத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டவைகளைப் பார்த்து, இவ்விடத்திய முஸ்லிம்கள் பாடங் கற்றுக்கொள்ள வேண்டும்.

முஸ்லிம்கள் பெரும்பாலும் விவாக காலங்களிலும், துக்ககாலங்களிலும் அனுவசியமாக கடன் வாங்குகின்ருர்கள். எந்தச்சடங்குகளுக்காக இக்கடன் வாங்கப்படுகிறதோ, அச்சடங்குகள் பொதுவாக மதத்திற்குப் புறம்பானதாகவே இருக்கின்றன. இவ்விதச் சடங்குகளைத் தவிர்ப்பது ஒவ்வொரு உண்மை முஸ்லிமுடைய கடமையாகும். பெண் மக்களுக்குப் பரிதனம் முதலியன மார்க்கத்திற்குப் புறம்பல்லாததாக இருந்தாலுங்கூட, தங்களது சக்திக்குத் தகுந்தவிதமாக இருக்கவேண்டும் என்ற தடையை மதம் ஏற்படுத்தியிருக்கிறது. இறைவன் தம்பதிகளின் பொருளாதார நிலையைப் பற்றி "(பெண்களாகிய) அவர்களுக்குக் கொஞ்சம் பொருள் கொடுங்கள். இவ்வாறு கொடுப்பதானது பணக்காரன்மீது அவனுடைய சக்திக்குத் தகுந்த விதமாகவும், ஏழையின் மீது அவனுடைய சக்திக்குத் தகுந்தவிதமான கடமையாகவும் இருக்கிறது" எனக் கூறியிருக்கிருன்.

ஹஜ்ரத் உமர்றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பெண்களை நோக்கி 'முஸ்லிம் பெண்மணிகளே! மகர் பணம் அதிகமாக இருப்பதனுல் உங்களுக்குக் கௌரவம் அகமாகிறது என்றிருந்தால், எல்லோரைப் பார்க்கிலும் அதிகமாக நபிகள் நாயகம் அவர்களின் மனைவிமார்களுக்கும், அவர்களின் புதல்விகளுக்கும் மகர்தொகை அதிகமாக ஏற்பட்டிருக்கும். ஆனுல், அவர்களில்யாருக்கும் முன்னூறு ரூபாய்க்கு அதிகமாக மகர்தொகை இருந்ததில்லை' எனக் கூறி இருக்கிருர்கள். துக்க காலங்களில் செலவாகுபவைகளையுஞ் செலவு செய்ய வேண்டியவைகளையும் பற்றி ஸ்தலத்திலுள்ள நம்பத் தகுந்தவரும், மத பக்தி யுள்ளவருமான ஆலிம்களிடம் நன்மைக்கான காரியங்கள் என்னவெனக் கேட்டுத் தெரிந்துகொள்வது நல்லது.

எவ்வாருயினும், இப்பொழுது ஒவ்வொரு முஸ்லிமும் தன்னுடைய செல்வநிலைமையைச் சரிப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். இதனுல், முஸ்லிம்களுக்கு மாத்திரமல்ல, இஸ்லாம் மதத்திற்கும் இத்தேசத்தில் அபாயங்கள் ஏற்படாமல் காப்பாற்ற முடியும். தீனுக்கும், மதத்திற்கும் அதிகமாகச் செலவு செய்ய முடியும். தங்களுடைய ஏழைச் சகோதரர்களுக்குச் சகல விதத்திலும் உதவிசெய்ய முடியும். அத்துடன்பொதுவாக எல்லா முஸ்லிம்களுக்கும், சிறப்பாக முஸ்லிம் குழந்தைகளுக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை விட்டு

ஒழிப்பது மிகவும் அவசிய மாகும். அவர்களைத் தொழிலிலும், வேலையிலும் ஈடுபடுத்த வேண்டும். "கொடுக்கிற கையானது வாங்கு கிற கையைப் பார்க்கிலும் சிறந்தது." என ஹதீது ஷரீபில் வந்திருக் கிறது. மிக்க ஏழையாக இருந்த சில ஸஹாபிகளுக்குக் காட்டிற்குச் சென்று விறகுகொண்டுவந்து, கடைத்தெருவில் விற்றுப்பிழைக்கும் படியாக நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் ஆலோசனை கூறி இருக்கிறார்கள். இதனால், சில நாட்களுக்குள் அல்லாஹுத ஆலா அவர்களுக்கு விருத்தியைக் கொடுத்திருக்கிறான். அவர்கள் தனவந்தர்களாகி விட்டார்கள்.

ஸஹாபிகளில் ஏழைகளும், வறுமையினர்களுமே இருந்தார்கள் எனப்பொதுவாகக் கூறப்படுகிறது. பெரிய பெரிய வர்த்தகர்களும், ஜமீன்தார்களும், தொழிற் சாலைக்காரர்களும் அவர்களில் இருந்திருக் கிறார்கள். ஹஜ்ரத் ஜுபைர், ஹஜ்ரத் அப்துர்ரஹ்மா னுப்னு ஔப், ஹஜ்ரத் உதுமான் தின்னூரைன் முதலிய சாஹாபிகள் லக்ஷாதி பதிகளாக இருந்தார்கள். அவர்களின் இச்சொத்து தூய்மை யான சம்பாதயத்தினால் கிடைத்தது. அந்தரங்கசுத்தியுடன், இறைவனின் பாதையில் அவைகள் செலவழிக்கப்பட்டன. கிறிஸ் தவ மதத்தைப்போல், இஸ்லாம் மதம் பணஞ் சம்பாதிப்பதைத் தடுக்கவில்லை. ஆனால், அதைத் தவறான வழியில் உபயோகிப் பதையே தடுக்கிறது. ஹஜ்ஜுச் செய்வது இஸ்லாம் மதத்திலுள்ள ஒருவணக்கம். இவ்வணக்கத்திலுங்கூட இஸ்லாம் மதம் வியாபாரஞ் செய்ய அனுமதி அளித்திருக்கிறது.

பற்பல பிரிவுகளின் ஒற்றுமை.

முஸ்லிம் சகோதரர்களே! தங்களின் நிலைமையைச் சீர் திருத்தி, உங்களைப் பலப்படுத்திக் கொள்வது கடன்மையாக இருப்பது போல், இஸ்லாம் மதத்திற்குள் இருக்கிற பல பிரிவினர்களும் ஒரு வரை ஒருவர் நெருங்கிப் பலப்படுத்திக் கொள்வது அவசியமாகும். வகுப்பு வேற்றுமைகள் முஸ்லிம்களைப் பலஹீனப்படுத்தி விட்டன. திருக்குர் ஆனில் அல்லாஹுத ஆலா முஸ்லிம்களுக்குள் வேற்று மையையும், பிளவுகளையும் விலக்கி இருக்கிறான். ஒற்றுமையைத் தன்னுடைய அநுக்கிரக மெனக்கூறி இருக்கிறான். 'ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்குச் சகோதரனாக இருக்கிறான், என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் கூறி இருக்கிறார்கள். ஆத லால், ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்வதை விடாதீர்கள். இரண்டு முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் சண்டைபிடித்துக்கொண்டி

ருந்தாலுங்கூட, அவ்விருவர்களையுஞ் சகோதரர்களென்றே அல்லாஹ் கூறி இருக்கிறான். "உங்களுடைய சகோதரர்களுக்குள் சமாதானத்தைச் செய்துவையுங்கள்" எனத் திருமறையில் கூறி இருக்கிறான்.

நாம் அற்ப விஷயங்களுக்காகவும், நம்முடைய முஸ்லிம் சகோதரர்களைக் காபிரிகள் என்றும், பாஸிக்குகள் என்றும் கூறுகிறோம். இது நமக்கு மிகப்பெரிய குறையாக இருக்கிறது. "ஒரு முஸ்லிமை ஒரு முஸ்லிம் காபிர் எனக்கூறி, அவன் வாஸ்தவத்தில் காபிராகஇருக்கவில்லையானல், அவனுடைய குப்ரு அவனைச் சாராமல் காபிர் எனக் கூறியவனையே சேருகிறது" என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறியிருக்கிறார்கள். நாயக மவர்களின் இவ்வெச்சரிக்கையிலிருந்து முஸ்லிம்கள் உஷாராக இருந்துகொள்ள வேண்டும். இவ்வியாதி நம் உலமாக்களுக்குள் அளவில்லாமல் பரவி விட்டதானது மிக வருந்தத்தக்க விஷயமாகும். இவர்களின் செல்வாக்கினால் இவர்களை ஒப்புக்கொள்ளும் முஸ்லிம்களும் இப்பெருங்குறையில் வந்துவிடுகிறார்கள். இதன் பலனாகவே, "இரண்டு ஆலிம்சாகிப்கள் ஒரு நகரத்தில் ஒன்று சேர்ந்திருக்க மாட்டார்கள்" எனப் பிரபல்யமாகி விட்டது. இவ்வாறு பாமரர்கள்கருதுவது உலமாக்களுக்கு இழிவல்லவா?

உலமாக்களே! நபிகள் நாயகத்தின் வாரிசுக்காரர்களே! உங்களுடைய பொறுப்பு மிகவும் கடுமையானது. முஸ்லிம்களின் நன்மைக்கும், தீமைக்கும் நீங்கள் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். முஸ்லிம்கள் சீர்திருந்துவதற்காக நீங்கள் உங்களைச் சீர்திருத்திக் கொள்ளுங்கள். நீங்கள் சகிப்புத்தன்மையையும், துவேஷமின்மையையும் கற்றுக்கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்காகவே சினேகம் வைத்தலையும், அல்லாஹ்வுக்காகவே விரோதித்தலையும் நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இன்று இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் ஐக்கியமாக இருக்க வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. திருக்கலிமாவை ஓதுபவர் எல்லோரும் இஸ்லாத்தைக் காப்பாற்றுவதற்காக ஒன்று சேரவில்லையானல், தங்களுக்குள்ளிருக்கும் வேற்றுமைகளை ஒழிக்கவில்லையானல், பகைவர்களின் பெருக்கை எதிர்ப்பதற்குத் தகுந்த சக்தி இவர்களிடம் எங்ஙனம் உண்டாகும்? ஹனபி, ஷாபிஈ, முகல்லித், க்கைரமுகல்லித் ஆகியவர்கள் எல்லோரும் இன்று ஒரு மேடையில் ஒன்று கூடவேண்டும். இப்பொழுது ஹனபி மதம், ஷாபிஈமதம், தக்லீத், தக்லீதல்லாதது ஆகியவைகளுக்குள் சண்டையில்லை. மேலும், இஸ்லாம்மதம், இஸ்லாத்தின் இறைவன், இஸ்லாத்தின் தூதர், இஸ்லாத்தின் நபிகள் ஆகியவர்களுக்கு விரோதமாக இருக்கிற

பகைவர்களுடனே சண்டை இருந்து வருகிறது. நபிகள் நாயகமவர்கள் தங்கள் உம்மத்திலுள்ள ஒவ்வொருவரையும் நோக்கி, "நீங்கள் ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர்கள்; கோபங்கொள்ளாதீர்கள்; எல்லோரும் சகோதரர்களாகுங்கள்" என அறைகூவுகிறார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் உங்களுடைய இச்சபையின் அங்கத்தினர்களின் சமுகத்தில், உங்களுடைய வேலைத்திட்டம் தாராளமான நோக்கத்துடன் இருக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறேன். நீங்கள் சீர்திருத்தஞ் செய்யுங் கூட்டத்தினர்களாக இருக்கிறீர்கள். நீங்கள் குறுகிய நோக்கத்திற்குப் புறம்பாக இருக்கவேண்டும்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை.

கனவான்களே! முஸ்லிம் உட்பிரிவினர் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக வேண்டுமென நான் கூறுவது, முஸ்லிம் அல்லாதார்களைத் தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக நான் கூறவில்லை. ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை ஒன்றுதான் தேசத்தின் நன்மைக்கும், விடுதலைக்கும் ஏற்ற ஒரேவழியெனக் கருதுபவர்களில் நானும் ஒருவன் என்பதை உங்களில் அநேகம்பேர் அறிந்திருப்பீர்கள். இன்று பஞ்சாபிலிருந்து வங்காளம் வரை ஏற்பட்டிருக்கிற நிலைமையானது, ஒவ்வொரு இந்தியனும் அதிகமாக வருந்துவதற்குத் தக்கதாக இருக்கிறது. உங்களுடைய மாகாணம் இத்தொத்து வியாதியைவிட்டுச் சுத்தமாக இருக்கிற தற்காக நான் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். ஆதலால், உங்களுடைய கண்ணியமுள்ள மாகாணவாசியான ஸர். சங்கரன் நாயர், நாகபூர் ஹிந்து மகாசபையில் அக்கிராசனம் வகித்துச் செய்த பிரசங்கத்தைக்கேட்டு, எங்களுக்குப் பெரிதும் ஆச்சரியமுண்டாயிற்று. அதில் அவர் முஸ்லிம்களைப் பலமாகத் தாக்கி இருக்கிறார். பல சம்பவங்களைப்பற்றிய அறிவு எனக்கு இருக்கிறது. ஆயினும், இவ்விதமாக என்னுடைய தேகத்தினர்களான ஹிந்துக்களின் மீது நான் குறைகூறவில்லை. இந்தியாவிலுள்ள சிறந்த புத்திசாலிகள் குறுகிய புத்தி என்ற வியாதியால் பீடிக்கப்பெற்றால், இத்தேசத்தைச் சீர்திருத்துவதற்காக வானத்திலிருந்து அமரர்களா வருவார்கள் என்று நான் அவர்களைக் கேட்கிறேன். இப்பொழுதோ அல்லது பின்னாலோ என்றேனும் ஒரு நாள் இத்தேசத்தவர்களுக்குத் தேசத்தின் நன்மையைப் பற்றிய கவலை நிச்சயமாக வந்தே தீரும். அதற்கு ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைத் தவிர வேறுவழியில்லை.

நபிகள் நாயகமவர்கள்.

தேசத்தினர் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டதானது, ராஜீய விஷயங்களை விட்டுக்கடந்து செல்வநிலைமை வாழ்க்

கைத்தொழில், கொடுக்கல்வாங்கல், மதம் ஆகியவைகளிலுங்கூட வந்துவிட்டது. இப்பொழுது முற்காலத்திலிருந்த பெரியார்கள், நபிமார்கள் ஆகிய இவர்களின் அந்தஸ்தைக் குறைத்து, அவமதிப்பாகநடப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். மதம், சமூகம் என்ற வித்தியாசமில்லாமல் அவர்களைக் கௌரவிப்பது ஒவ்வொரு மனிதனின்மீதுங் கடமையாகும்.

எந்த மதத்தலைவரையும் கெட்டவராகக் கூறுமலிருப்பது முஸ்லிம்களின் கடமையாகும். ஏனெனில், நபிகள்நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு முன் இருந்த மதத்தலைவர்களைப்பற்றித் திருக்குர்ஆனில் "அச்சமூட்டி அறிவிக்கிர (நபி) வர் இல்லாத உம்மத்து, சமுகத்தினர் இல்லை" எனக்கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் நபிமார்களில் சேர்ந்திருக்கக்கூடும். ஆதலால், அவர்களைத்தூஷிப்பதிலிருந்துதவிர்ந்து கொள்ளுவது அவசியமாகும். நபிகள் நாயகமவர்களுக்குப் பின் உண்டான மதத்தலைவர்கள் விக்கிரஹங்களிலும் கேடானவர்களல்ல. காபிர்களின் விக்கிரங்களைக்கூட நீங்கள் தீங்காகக் கூறக்கூடாது எனக்கூறப்பட்டிக்கிறது. அவ்வாறு செய்தால் பழிவாங்கும் உணர்ச்சியுடன் உங்களுடைய இறைவனை அவர்கள் தூஷிக்க ஆரம்பித்து விடுவார்கள், என நாயகமவர்கள் திருவாய்மலர்ந் தருளியிருக்கின்றார்கள். அல்லாஹுத்த ஆலாவை இதரர்கள் தூஷிக்காமல் இருப்பதற்காகப் பொய்க் கடவுளை தூஷிக்கக்கூடாது என்றிருக்கும்போது, உண்மைத் தூதர்களின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகப் பொய்த் தீர்க்கதரிசிகளைத் தூஷிக்காமலிருப்பது மதத்தில் அனுமதிக்கப்படவில்லையா? இதுசம்பந்தமாக இந்தியாவில் முஸ்லிம்களின் நடத்தை போற்றத்தகுந்ததாக இருக்கிறது. இந்தியாவிலுள்ள பெரியோர்கள் எவரையும் அவர்கள் எப்பொழுதும் தூஷிக்கவில்லை. இனிமேலும், இம்மாதிரியே தங்கள் மதபோதனையைப்பின்பற்றி நடந்து இத்தேசத்தில் இஸ்லாத்தைச் சிறப்பிப்பார்களென்று நம்புகிறேன். உலகத்திலுள்ள எல்லா மதங்களினுடையவும், மதப்பெரியார்களினுடையவும், நபிமார்களினுடையவும் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகவும், ஒருசட்டம் இயற்றவேண்டுமென நாம் வற்புறுத்த வேண்டும். இதனால் இஸ்லாம்மதத்தின் தூதரான நபிகள் நாயகமவர்களின் கௌரவத்தைக் காப்பாற்றுவது மட்டுமல்ல, உலகத்திலுள்ள போற்றத்தக்க எல்லா மதத்தலைவர்களின் கௌரவத்தையும் காப்பாற்றலாம். ஆதலால், இப்பிரசினையில் இந்தியாவிலுள்ள எல்லா ஜனங்களும் ஒரே அபிப்பிராயமும், ஒற்றுமையுமுள்ளவர்களாகவிருப்பது மனிதத்தன்மையின் கடமையாகும். இது சம்பந்த

மாக இந்தியா சட்டசபையில் முடிவான சட்டம் நிறைவேறுமலிருக்கும்போதே, உங்களுடைய மாகாணத்திலுள்ள சட்ட நிபுணருடைய நாவிலிருந்து இவ்விதமான பேச்சுக்கள் வந்துவிட்டன. அவருடைய பேச்சு மிகவும் கடினமானது. நபிமார்களைப்பற்றி பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் நூல்களிலும் எழுதி இருப்பவைகளைப் பார்க்கிலுங் கடுமையானதா? இச்சட்ட சம்பந்தமாக பொறுப்பு வாய்ந்தவர்கள் இவ்விதமாக புறக்கணிக்கவும், உழலவும், இச்சட்டத்தை வீண் என்றும் கருதிவிடுவார்களா? இது விஷயத்தில் மௌலானு முஹம்மத் அலிசாகிப் அவர்கள் சமூகத்திற்குத் தக்க சமயத்தில் வழிகாட்டியதானது, எல்லாமுஸ்லிம்களும் அவருக்கு நன்றிசெலுத்தத் தகுந்ததாக இருக்கிறது.

சகோதரர்களே! கடைசியாக நான் உங்களுக்கு மற்றொரு முறை நன்றி செலுத்துகிறேன்.

வஆகிறு தஃவானு அனில் ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன். வஸல்லல்லாஹு தஆலா, அலா கைரி கல் கிஹி முகம்மதின், வஆலிஹி வஅஸ்ஹாபிஹி அஜ்மஈன்.

மஸ்ஜிதும், ராஜீயப் பிரசங்கமும்.

(மௌலானு அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் எழுதியது.)

(212-வது பக்கத்தொடர்ச்சி.)

நல்லதையேவி, கெடுதியையகற்றும் சத்தியப்பிரசாரகர் மேற்கூறப்பட்டுள்ள நிலைமைகளையுணர்ந்து, தம்சக்தியைக்கொண்டு வேலை செய்ய முற்படுவது அவசியமாகும். முஸ்லிம்கள் தங்களின்மீது கடமையாக்கப்பட்டுள்ள கண்காணிப்பைக் கைவிட்டதும், முஸ்லிம்களின் மறதியும் மஸ்ஜித்களின் காரியஸ்தர்களை அச்சமற்றவர்களாகச்செய்து விட்டன. ஆதலின், இக்காரியஸ்தர்கள் முஸ்லிம்களை யொதுக்கிவிட்டு வேலைசெய்யமுற்பட்டுவிட்டனர். தமதிஷ்டம்போலவும், ஏதேச்சாதிகாரமாயும், எக்காரியத்தையும் தங்களுக்குத் தோன்றியவாறு மஸ்ஜித்களின் காரியஸ்தர்கள் புரிவதைப்பார்க்கின்றோம். மஸ்ஜித்களின் தர்மசொத்துகளைத் தங்களிஷ்டம்போல் கையாண்டுவருவதையும், அவர்களுக்குத் தோன்றியவாறு எக்கட்டளையையும் மஸ்ஜித்

களுக்குட் பிறப்பிப்பதையும் நாம் பார்க்கலாம். இவர்களிஷ்டம்போல் மஸ்ஜித்களின் வாயலை சிலருக்குத் திறந்துவைக்கவும், மற்ற வருக்கு அடைத்துவிடவும் துணிந்திருக்கின்றனர். இவ்வடாத செய்கைகள் இஸ்லாமை நன்குணர்ந்தவரின் ஹிருதயத்தைப் புண்படுத்தாதிருக்க முடியுமா? என் செய்வது! முஸ்லிம்கள் கண்காணிக்க வேண்டியதாகவுள்ள கடமையை நிறைவேற்ற முற்பட்டு, தங்களின் கூட்டுறவு பலத்தைக்கொண்டு வேலைசெய்யக் கற்றுக்கொள்ளாத வரை, இவ்விபரீத நிலைமையைப் போக்குவது அசாத்தியமே.

கஃபாவைக் கட்டியது, அதன் பரிபாலகர்களாகவிருப்பது ஆகியவற்றைச் சார்ந்த கௌரவம் தங்களுக்கே உரியதென்று கூறி, மக்காவின் முஷ்ரிக்குகள் பெருமைகொண்டிருந்தனர். ஹஜ்ஜு காலத்தில் ஹாஜிகளுக்கு ஊழியஞ்செய்வது, அவர்களுக்குத் தண்ணீர் புகட்டுவது முதலிய காரியங்களையொட்டி, அவர்கள் மகிழ்ச்சியடைந்து வந்தனர். ஆனால், முஷ்ரிக்குகளின் இவ்வெண்ணத்தை மறுத்து அல்லாஹு தஆலா அறிவித்துள்ளவைகளாவன:—

"அல்லாஹு தஆலாவின் மஸ்ஜித்களைச் செழிக்கச் செய்வோர், அல்லாஹு தஆலாவின் பேரிலும், கூலிகொடுக்கும் நாளின்பேரிலும் ஈமான்கொண்டு, தொழுகையை நிலைநிறுத்தி, ஜகாத்தைக் கொடுத்து, அல்லாஹ் அல்லாதவைகளைத் தவிர்த்து, அல்லாஹு தஆலாவுக்கு மட்டும் பயப்படுகிறவரேயாகும். சந்தேகமின்றி இத்தகையோர் நேரான வழியைப் பெற்று, சமீபத்தில் ஜயமடைவார்கள்" (அல்குர்ஆனின் வியாக்கியானம்.)

ஹாஜிகளுக்குத் தண்ணீர் புகட்டி, மஸ்ஜித்களைச் செழிக்கச் செய்யும் காரியமானது, அல்லாஹு தஆலாவின்பேரிலும், கூலி கொடுக்கும் நாளின்பேரிலும் ஈமான் கொண்டு, அல்லாஹு தஆலாவின் வழிபாட்டில் ஜிஹாத் செய்பவரின் காரியத்திற் கொப்பாகுமென்று நீங்கள் கருதுகின்றீர்கள்? அல்லாஹு தஆலாவின் சமுகத்தில் இவ்விரு சாராரும் சம நிலைமையைக் கொள்ளமுடியாது. மேலும், அல்லாஹு தஆலா அநியாயம் புரிவோர்க்கு எக்காலத்தும் நல்வழியைக் காட்டுவதில்லை." (அல்குர்ஆனின் வியாக்கியானம்.)

மக்கத்து முஷ்ரிக்குகள் நியாயமற்ற இப்பெருமையிலும், கேட்டிற்கிலக்கான மகிழ்ச்சியிலும் மிதமிஞ்சி, இவர்கள் தங்களின் இச்சேவைக்குநிகராக வேறு எவ்வணக்கமும், எவ்வரிய செய்கையும் கிடையாதெனக் கூறுகின்றனர். ஆகவே இவர்கள், பருப்பில்லாத வெறுந் தொலியைமட்டுமுடைய பாதாம்கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கக் கருதுவோரைப்போலாகும். ஹஜ்ரத் அப்பாஸ் ரலியல்லாஹு

அன்ஹு அவர்கள் ஈமான் கொள்ளுமுன்னர், பத்ரு யுத்தத்தில் கைதியாகி வந்திருந்தபோழ்து, ஹஜ்ரத் அப்பாஸ் அவர்களுக்கும், ஹஜ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குமிடையில் நடந்த சம்பாஷணையை முன் (4-ம் வால்யூம், 6-ம் பகுதியில்) வாசித்திருப்பீர்கள். அகம் நிறைந்த வீண் பெருமையை மக்கத்து முஷ்ரிக்குகள் தங்களுக்கு எத்தகைய பெரும் கௌரவத்திற்குரியதென்று கருதியிருந்தார்களென்பது, ஹஜ்ரத் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் வார்த்தைகளினால் நன்கு விளங்குகின்றது.

ஆனது பற்றியே, இவ்வெண்ணத்தை மறுத்து, அல்லாஹுதஆலா ஈமானைச் சார்ந்த நான்கு நிபந்தனைகளை விபரித்துள்ளான். இந்நான்கு காரியங்களின்றி, மஸ்ஜித்துக்களுக்கு முத்தவல்லிகளாகவிருந்து, ஊழியம் புரிவதால் எப்பயனுமில்லை என்பது தெளிவாகிவிட்டது. பிறகு ஹாஜிகளுக்கு ஜலம் புகட்டுவது, கஃபாவின் முத்தவல்லியாக விருந்து சேவை செய்வது ஆகியவைகள் தங்களுக்கு அதி பெருமையையும், கௌரவத்தையும் கொடுத்துவிட்டனவென்று மக்கத்து முஷ்ரிக்குகள் கருதியிருந்தனராதலின், பதிலிருக்க முடியாமல் வாயை யடைக்கத்தக்க வினாவைக்கேட்டு, உண்மையான நற்காரியங்களையும், அல்லாஹுதஆலாவின் பிரீதிக்குரிய சாதனங்களையும் எடுத்துக் காட்டி, பிறகு அல்லாஹுதஆலா தனக்குரிய பிரத்தியேகமான தெய்வீகத் தொனியில் தன் கேள்விக்குத் தானே பதிலிறுத்துள்ளான். ஏனெனின், வழி கேட்டிற்கிலக்காகிவிட்ட மூளை சிந்திக்கவும், மறதியில் மூழ்கிக்கிடக்கும் ஹிருதயம் உணர்ச்சி பெறுதற்குமே.

ஹாஜிகளுக்குத் தண்ணீர் புகட்டுவதையும், மஸ்ஜிதெ ஹராமின் பரிபாலனத்தை யொட்டியும் பெருமைப் பேசுவோரை எச்சரித்து, அறிவுறுத்துவதற்காகவே அல்லாஹுதஆலா இவ்வாயத்தை இறக்கி, இவைகளுள் பெருமைக்குரிய காரியம் எதுவுமில்லை என்று எடுத்துக் காட்டியிருப்பதோடு, அல்லாஹுதஆலாவின் பேரிலும், கூலிகொடுக்கும் நாளின் பேரிலும் ஈமான் கொண்டு, அல்லாஹுதஆலாவின் வழிபாட்டில் ஜிஹாத் செய்பவர்களுக்கே உண்மையில் பெருமையும், கௌரவமுமுண்டென்று அறிவித்துள்ளான். (தப்ஸீர் இமாம் திப்ரீ 10:67)

ஹாஜிகளுக்கு ஜலம்புகட்டி, மஸ்ஜிதின் முத்தவல்லியாக விருக்கும் நபர், அல்லது கூட்டத்தையும், அல்லாஹுதஆலாவின்மீதும், கூலி கொடுக்கும் நாளின்மீதும் ஈமான் கொண்டு, அல்லாஹ்வின் வழிபாட்டில் ஜிஹாத்செய்யும் நபர், அல்லது கூட்டத்தையும் அல்லாஹுத

ஆலா எடுத்துக் காட்டி, இவ்விரு சாராரும் சம அந்தஸ்த்தையுடைய வர்களா? வென்று வினவி, அல்லாஹுத ஆலாவின்சமூகத்தில் இவ்விரு சாராரும் ஒரேவித அந்தஸ்த்தையுடையவர்களாக விருக்கமுடியாதென்று, விபரமாய் எடுத்து காட்டியுள்ளான்.

மேலும், மஸ்ஜிதுகளின்முத்தவல்லிகளாக விருப்பவரும், ஹாஜிகளுக்கு ஜலம்புகட்டுவோரும் இச்சேவையை முன்னிட்டு "மூமினீன்" "முக்லிஸீன்" "முஜாஹிதீன்" "ஸாதிகீன்" என்னும் உத்தமர்களுக்குள்ள கௌரவத்தைப்பெற வியலுமா? வீட்டின் ஊழியரும், வீட்டுக்குடையவனை வணங்குவோரும் சமமாகவிருக்க முடியுமா? அல்லாஹுத ஆலாவின் வீட்டை பரிபாலனஞ் செய்பவனென்றுக் கூறிக்கொண்டு, தன் ஹிருதயத்தை பரிபாலனஞ் செய்யாமல் மறந்துத்திரிகிறவன் எங்கே? அல்லாஹுத ஆலாவின் வீட்டை பரிபாலனஞ் செய்வதோடு, ஹிருதயமென்னும் தன்னகத்துள்ள மஸ்ஜிதை, நப்ஸைச் சார்ந்த துர்க்கிருத்தியங்களின் கேட்டைவிட்டுப் பரிசுத்தமாக்கி, தன் சக்தியைக்கொண்டு அல்லாஹ்வினுடைய வழிபாட்டில் உயிரையே தியாகம் செய்யும் உத்தமரெங்கே?

ஜிஹாதின் உண்மை.

ஜிஹாத் "ஜஹத" என்னும் பதத்திலிருந்து உண்டானது. முயற்சி, கஷ்டம், பிரயாசை, பகைவனை எதிர்த்துச் செய்யும் வேலையில் சங்கடத்தை ஏற்றுக்கொள்வது முதலியன மேற்கூறப்பட்ட பதத்தின் பொருளாகும். பகைவன் புரியும் யுத்தத்தைத் தாக்கும் பொருட்டு தன் முழுபலத்தைக் கொண்டும் முயற்சிப்பது, வெளித்தோற்றமான பகைவன் அஃதாவது:—உண்மையின் எதிரி, சத்தியத்தின் பகைவன், அநியாயகார அரசன் முதலிய பகிரங்க விரோதிகளாயினுஞ்சரி, நப்ஸு, ஷைத்தான் முதலிய அந்தரங்கப் பகைவர்களாயினுஞ் சரி எத்தகைய பகைவரையும் எதிர்த்து, அல்லாஹுத ஆலாவின் உண்மை, நியாயம், சத்தியம் ஆகிய வழிபாட்டில் ஈடுபட்டு கஷ்டத்தைச் சுமப்பது, உயிர் பொருள் முதலிய எல்லாவற்றையும் தியாகஞ் செய்வது ஆகிய நடவடிக்கைகள் பரிசுத்தமான பூரண ஜிஹாதாகும். (முபாதாத்)

இவ்வரிய ஜிஹாத்தின் சேவையானது தேசநன்மையைப் பொறுத்ததாயினுஞ்சரி, சமூக நன்மையைப் பொருத்ததாயினுஞ் சரி, போதனுமுறையைச் சார்ந்த சீர்திருத்தத்தைக் கோரியதாயினுஞ் சரி, அல்லது மானிட முன்னேற்றத்தைக் கருதிய சேவையாயினுஞ் சரி, பூமியின் ஒரு குறிப்பிட்ட பாகத்தின் மேன்மையை

விரும்பியதாயினுஞ் சரி, அல்லது முழுவுலகத்தின் க்ஷேமத்தைக் கோரியதாயினுஞ் சரி, அவையாவும் எச்சந்தர்பத்திலும் ஜிஹாதென்னும் பரிசுத்தமான காரியங்களே. மேலும், எவ்வதிர்ஷ்டக்காரனுக்கு இப்பரிசுத்தமான சேவையைப் புரிவதற் குரிய நற்பாக்கியமுண்டோ, அவன் உண்மையாகவே அல்லாஹுதஆலாவின்வழிபாட்டில் வேலைசெய்யும் "முஜாஹிதே பீ ஸபீலில்லாஹ்" என அழைக்கப்படுவான்.

"ஜிஹாத்" என்பதன் உண்மையை விரித்துக்காட்டுவதற்கு இது ஏற்றசமயமாகவில்லாததை யொட்டி விசனிக்கின்றோம். ஆனால், பல வியாசங்களை வெளியிட்டிருக்கின்றோம். அவைகளில் ஜிஹாதின் உண்மையை வெளியாக்கிக் காட்டும் பொருட்டு முயற்சித்திருக்கிறோம். அவ்வியாசங்கள் இச்சமயம் தோற்றத்திலிருக்குமாயின் உத்தமமாகவிருக்கும். "ஈதுல்அல்ஹா," "உஸ்வயெ இப்ராஹீம்," "பாத்திஹயெ ஜில்ஹெ துவ்வம்," "அம்ரு பில் மஃரூப்" முதலிய வியாசங்களைக் குறிப்பிடலாம். (இவ்வியாசங்களுள் பலவற்றை மொழிபெயர்த்து அல்கலாமில் 1, 2, 3, 4 வால்யூம்களிற் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன. ப. ர்.)

ஜிஹாத் என்னும் பதத்திற்கு யுத்தகளத்தில் மானிடரை வெட்டிக் குவிப்பதுமட்டுமே பொருளெனக் கருதி, இப்பதத்தை பிற்காலத்தலைவரரான நம் சில நூலாசிரியர்கள் தப்பாகவும், இஸ்லாமை நிந்திக்கும் மேல்நாட்டினர் அறியாமையினாலும் கையாண்டிருப்பதன் உண்மையை விளக்கிக் காட்ட மேற்கூறப்பட்டுள்ளவியாசங்களின்மூலமாய் முயன்றிருக்கின்றோம். ஜிஹாதென்னும் பதமானது: பல அர்த்தத்தைக் கொண்டுள்ள ஒரு பொதுமொழியாகும். ஜிஹாத், கிதால் ஆகிய இருபதங்களுக்குமுள்ள வித்தியாசத்தை குர்ஆன் ஷரீபு பன்முறை துலக்கிக் காட்டியிருக்கிறது. மேலும், இதை மெய்ப்பிக்கத் தக்க 'ஹதீது' களும், 'ஆதார்' களும் ஏராளமாக விருக்கின்றன. அல்லாஹுதஆலாவின் இஷ்டத்திற்குட்பட்டு, உண்மை, நியாயம், மானிட நன்மை, சத்தியம் ஆகியவைகளை ஷைத்தானிய நோக்கங்களை யெதிர்த்து, கெடுதியை அகற்றி ஸ்தரப்படுத்துவதற்காகவுள்ள ஒவ்வொரு முயற்சியும், ஒவ்வொரு பிரயாசையும், கஷ்டத்தையேற்கும் ஒவ்வொரு காரியமும் உண்மையில் அல்லாஹுதஆலாவின் வழிபாட்டைச் சார்ந்த ஜிஹாதேயாகும். இவ்வரிய காரியம் ராஜீயக் காரியத்தைச் சார்ந்ததாக விருப்பினுஞ் சரி, அல்லது உங்கள் வழமைச் சொற்களுக்கேற்ப தீனைச்சார்ந்த காரியமாகவிருப்பினுஞ் சரி, அல்லது நாகரீகத்தைச் சார்ந்ததாக விருப்பினுஞ் சரியே.

நபித்துவத்தின் முன்மாதிரி.

ஹஜ்ரத் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹுதஆலாவின் கட்டளைக்குட்பட்டு, அல்லாஹுதஆலாவின் அடியார்களை குப்ர், பாவம் ஆகியவைகளைச் செய்யாவொட்டாமல் தடுத்ததை முன்னிட்டு கற்களால் அடிக்கப்பட்டார்கள்; பற்பல கஷ்டத்திற்குட்பட்டார்கள். இது மார்க்க சம்பந்தமான கொள்கையையும், அனுஷ்டானங்களையும் சீர்திருத்துவதைச் சார்ந்த ஜிஹாதாகும். ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "கால்டியா" வென்னும் தெய்வீகப் பூமியிலிருந்த விக்கிரகங்களை அப்புறப்படுத்தி, அப்பூமியைச் சுத்தப்படுத்தினார்கள். நச்சத்திரங்களை ஆராதனை செய்தோரை ஏகதெய்வக் கொள்கையை ஏற்றுக்கொள்ளும்படிக் கூறினார்கள். ஆனது பற்றி, அப்பாதகர்கள் ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை எரித்துச் சாம்பலாக்கிவிடக் கருதி தீயை மூட்டி அத்தீயில் தள்ளினார்கள். இதுவும்ஜிஹாதெ பீஸபீலில்லாஹ் தான்.

ஹஜ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மிஸர் தேசத்து பிர்ஔன்களின் எதேச்சாதிகார ஆட்சியை ஒழித்து, தங்கள் சமூகத்தை அன்னியரின் அடிமை விலங்கிலிருந்தும், ஆட்சியிலிருந்தும் மீட்டு வைத்தார்கள். இது பூர்ண (பொலிடிக்கல்) காரியமும், ராஜீய ஜிஹாதுமாகும். ஆனால், இது ஜிஹாதெ பீஸபீலில்லாஹ் வென்பதை மறுக்க எவருக்கும் முடியுமா? ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மறைந்துபோன பனீஇஸ்ராயீல்களின் நல்லொழுக்கத்தைத் தேடிபிடிப்பதற்காக வந்தார்கள். அநியாயகார யூதர்கள் ஹஜ்ரத் அவர்களின் முகத்தில் துப்பினார்கள். பிலாதூஸைச் சார்ந்த இரக்கமற்ற சிப்பாய்கள் ஹஜ்ரத் அவர்களைச் சிலுவையில் அறைவதற்காக, அவர்களின் சிரசில் முட்களின் கிரீடத்தை மாட்டினார்கள். மேலும், ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பெரும் கஷ்ட நிஷ்டூரங்களுக்குட்படும் சகிப்புத்தன்மை கைவிடாதிருந்தார்கள். ஆகவே, இது ஜிஹாதெ பீஸபீலில்லாஹ்வின் நற்குணத்தைச் சார்ந்ததாகும்.

ஹஜ்ரத் கதமுல் முர்ஸலீன், முஹம்மது ஸல்லல்லாஹு அலைவஸல்லம் அவர்கள் முழுவுலகத்திலுமிருந்த வழிகேட்டையும், பாவயிருளையும் அகற்றும் பொருட்டு, தங்களுடையவும், தங்களின் பரிசுத்தமான கூட்டத்தினுடையவும் வாழ்நாட்களைக் கழித்தார்கள். இவர்கள் புரிந்த சேவையானது ஒரு சமூகத்தை, அல்லது பூமியின் ஒருபாகத்தைச் சீர்திருத்தஞ் செய்யும் காரியமாக மட்டுமில்லை. பால்டிக்ஸ் என்றும், முன்னேற்றமென்றும், மதமென்றும், நல்லொழுக்க

மென்றும் நீங்கள் பாகுபாடு செய்திருப்பதற்கேற்ப, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஒரு சமூகம், அல்லது பூகோளத்தின் ஒரு கோணத்தை சீர்திருத்துவதற்காகமட்டும் முயலவில்லை. ஆனால், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லாம் அவர்களின் பிரசாரமானது பொதுவாயும்,முழு யுலகத்தின் சீர்திருத்தத்தைக்கோரியதாயுமுள்ள இவ்வுலகத்தின் பெரும் மானிட ஜிஹாதாகும். இவ்வரிய ஜிஹாதானது ஒவ்வொரு மானிடனையும் சீர்திருத்துவதற்காகவும், உலகின் ஒவ்வொரு கெடுதியையும் அகற்றுதற்காகவுமுள்ளதாகும். ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஜமீ அல் முர்ஸலீன்.

மேற்கூறப்பட்ட அரிய காரியங்கள் உலகில் நடைபெறவேண்டிய ஜிஹாதெ பீஸபீலில்லாஹ்வுக்கு முன்மாதிரியாக விருப்பதற்கான நபித்துவத்தைச் சார்ந்தவைகளாகும். ஆனால், இந்நபித்துவத்தின் நிழலாகவுள்ள ஸித்தீகீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள் ஆகிய உத்தமர்களின் உறுதியும், உண்மையும் நிறைந்த ஜிஹாதைச்சார்ந்த எண்ணிறந்த முன்மாதிரியான நடவடிக்கைகள் நம்முன் தோன்றிய வண்ணமாக விருக்கின்றன. கௌரவம் வாய்ந்த மஹான்களான அன்பியாக்களின் நடவடிக்கைகள் உலகின் சீர்திருத்தத்தை யொட்டிய வித்தின் ஸ்தானத்திலும், நபிமார்களைப் பின்பற்றிய ஸித்தீகீன்கள் முதலிய உத்தமரின் நடவடிக்கைகள் அம்மரங்களுக்குப் பழங்களின் ஸ்தானத்திலுமிருக்கின்றன.

தங்களின் நடவடிக்கைகளுக்கு நபித்துவத்தின் சூரியனிலிருந்து பிரகாசத்தைப்பெற்று, தங்களின் சக்தியைக்கொண்டு, எவ்வாரேனும் சத்தியத்தையும், உண்மையையும் ஸ்திரப்படுத்தி, அநியாயம் துர்க்கிருத்தியம் ஆகியவைகளை ஒழிக்கத்தக்க வழியில், ஜிஹாதெ பீஸபீலில்லாஹ் என்னும் அரிய சேவையைப் புரிவதற்குரிய நல்லருளைப்பெற்ற முக்லிஸீன்களாகிய மூமின்கள் நபித்துவத்தின் வித்தைச் சார்ந்தக் கிளைகளாகும். அல்லாஹுதஆலா இவ்வுத்தமருக்கு அன்பியாக்கள், ஸித்தீகீன்களின் கூட்டுறவை யளித்து, இவர்களின் சேவையை நபித்துவத்தின் நடவடிக்கைகளைப் போல் ஏற்றுக்கொள்கின்றான். (தொடரும்.)

திருநபியின் நற்போதனைகள்.— (1) சகோதரனுடைய கஷ்டத்தைப் பற்றி சந்தோஷப்படுவோன், கஷ்டத்திற்குட்படுவான். (2) அயல்வீட்டானை கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் ஆளாக்குகிறவனை அல்லாஹுதஆலா கஷ்டத்திற்கு இரையாக்குகிறான். (3) மனிதனுக்கு நன்றி செலுத்தாதவன் ஆண்டவனுக்கு நன்றி செலுத்தான். (4) பிச்சைக்கேள்பவனிடம் சாந்தமாய் பேசுவது தர்மத்தில் சேரும். (5) மனிதருக்கு பிரயோசனமானவன் மானிடரில் உத்தமன். (6) மனிதர் பேரில் கிருபைச் செய்யாதவன்மீது, ஆண்டவன் கிருபைச் செய்யான்.

கிறிஸ்து மதமும், விக்கிரக ஆராதனையும்.

கிறிஸ்துமதம் 8-வது, 9-வது நூற்றுண்டுகளில் விக்கிரக ஆராதனையைச் சார்ந்த அபிப்பிராய பேதத்திலும், ஒரு பெரும் மதப் போராட்டத்திலும் சிக்குண்டு, அப்போராட்டமானது கானிஸ்டாண்டிநோபிளிலிருந்த "பீஸன்தீனீ" வகுப்புச் சாம்ராஜியத்தில் அடக்கமற்றதாகிவிட்டது.

கிறிஸ்துமத ஆரம்பத்தில் யூதமதத்தைவிட்டு கிறிஸ்துமதத்தைத்தழுவிக்கொண்டோர் விக்கிரகம், சுரூபம், சித்திரம் ஆகியவைகளைக் கௌரவித்து, அவைகளுக்குச் சாஷ்டாங்கஞ்செய்து, வணங்குவது முதலிய நடவடிக்கைகள் விக்கிரக ஆராதனையே யாதலின், இத்தகைய காரியங்களை அருவருத்துக்கொண்டிருந்தனர். ஏனெனின், தெய்வ சுரூபத்தை அமைப்பது ஆகாதென்று யூதமதம் கூறுவதாகவிருந்தது. ஆனால், கிரேக்கர் விக்கிரக ஆராதனையில் மிகப்பெரும் நட்புக்கொண்டவராகவிருந்தனர். ஆதலின், யூதமதத்தைவிட்டு கிறிஸ்துமதத்தைத் தழுவிக்கொண்ட அக்கிறிஸ்தவர்கள் கிரேக்கரோடு போராட வேண்டியதாகவுமிருந்தது. ஆனதுபற்றியே, இக்கிறிஸ்தவர் கிரேக்கரைவிட்டும் ஒதுங்கியிருக்கவேண்டுமெனக் கருதினர். விக்கிரக ஆராதனையைப் புரிந்துகொண்டிருந்த கிரேக்கர் தமது கரங்களாற் தயாரிக்கப்பட்ட வஸ்துக்களுக்குச் சாஷ்டாங்கஞ் செய்பவரென கூறி, ஆச்சரியமுற்று ஏளனஞ்செய்தனர். ஆனால், விக்கிரக ஆராதனையை யொட்டிய இவ்வருவருப்பானது மும்மூர்த்தியென்னும் கொள்கையையும், அதைச்சார்ந்த சுரூபங்களையும் தடுக்கக் கூடவில்லை என்பதுமட்டுமின்றி, உண்மையில் இப்போராட்டமே கிறிஸ்துவ ஆலயங்களில் விக்கிரக ஆராதனையையும், சுரூபச் சாஷ்டாங்கத்தையும் உண்டு பண்ணிவிட்டது.

விக்கிரக ஆராதனையின் ஆரம்பம்.

(கிறிஸ்து மதம் தோன்றுமுன்) விக்கிரக ஆராதனையைச் செய்துகொண்டிருந்துவிட்டு, பிறகு கிருஸ்துவ மதத்தைத் தழுவிக்கொண்டவரின் மூலமாக கிறிஸ்துவ மதத்தில் விக்கிரக ஆராதனை நுழைந்துவிட்டது. ஆனால் ''அரஸ்தூ'' ''பைஸாகோரஸ்'' முதலியவரின் உருவங்களை கிரேக்கர் கௌரவித்துக் கொண்டாடுவது

போலவே, அப்புதிய கிறிஸ்துவர் ஹஜ்ரத் மஸீஹ் அவர்களின் உருவத்தைக் கௌரவிக்க வாரம்பித்தனர். இவர்கள் கிறிஸ்து மதத்தைப் புதிதாய்த் தழுவிக் கொண்டவர்களாதலின், இவர்களின் செய்கையைக் கண்டிக்காமல் கிறிஸ்துவ பாதரிகள் அஜாக்கிரதையாக விருந்துவிட்டனர். மேலும், இப்புதிய கிருஸ்தவர் ஹஜ்ரத் மஸீஹ் அவர்களின் உருவச்சிலையை கொளரவிக்கிறார்களேயன்றி, வணங்கவில்லை எனக்கருதி, அப்பாதிரிகள் புதிய கிறிஸ்தவர்களின் இவ்வாராதனையைத் தடுக்காதிருந்ததினாலேயே, உருவச்சிலையைக் கௌரவிப்பதைச் சார்ந்த காரியங்கள் தடையின்றி நடைபெறவாயின.

உருவச்சிலையைக் கௌரவிப்பதென்று ஆரம்பமான காரியமானது, காலஞ்செல்ல செல்ல வணக்கத்தின் லக்ஷணத்தைக் கொண்டு விட்டது. மேலும், "விக்கிரக ஆராதனைக்கு ஹேதுவேயில்லாமல், அதை வேருடன் கெல்லியாகிவிட்டதென்றும், அவ்வாராதனை ஜீவித்தெழுமென்றஞ்ச வேண்டியதில்லை" என்றும் நம்பி குஸ்தந்தீன் என்னும் அரசர் விக்கிரக ஆராதனை கிறிஸ்துமத வணக்கமாகவே, தேவாலயங்களில் நடந்தேறி வருமாறு 3-வது நூற்றாண்டில் செய்த ஏற்பாடுகளை கிறிஸ்துவ பாதிரிகள் அகற்றாமலிருந்து விட்டனர்.

கிறிஸ்துவ மதத்தில் விக்கிரக ஆராதனை புகுந்து கொண்டவரலாறு இதுவேயாகும். சிலுவையையும், பரிசுத்தமான சின்னங்களையும் கௌரவிப்பது என்னும் முறையில் முதன் முதலாக இவ்வணக்கம் ஆரம்பமாயிற்று. பின்னர் தியாகிகளுடையவும், மகான்களுடையவும் சமாதிகளை மேன்மைப்படுத்தி,கொண்டாடுவதோடு தங்களுக்கு வேண்டுவனவற்றை அச்சமாதிகளிடம் கோரிக்கொள்ளத் தலைப்பட்டனர். சிலுவை, பரிசுத்தமான சின்னங்கள், சமாதிகள் ஆகியவைகளுக்கு கௌரவமிருக்குமாயின், விக்கிரகங்களுக்கு விசேஷ கௌரவமில்லாதிருக்க நியாயமில்லை எனக்கருதி, கடைசியாய் அப்பெரியார்களின் உருவத்தைச் செய்துவைக்க முற்பட்டனர். அரசர்களுடையவும், செல்வாக்குப் பெற்றிருந்தவர்களுடையவும் உருவத்தைச் செய்துவைக்கப்படும் ஸ்திதியில், தெய்வத்தினுடையவும், சிறப்புற்ற மகான்களுடையவும் உருவத்தைத் தயாரித்து, அவைகளிடம் நற்பாக்கியத்தை பெறுவது அவசியமெனக் கருதினார்கள். மேலும், அரசர்களைக்காட்டினும் மகான்கள் அதிக மேன்மைக் குரித்தானவர்களென்றும் கருதியிருந்தனர்.

அறிவும், நல்லுணர்ச்சியுமுண்டாகும்பொருட்டு முதன்முதலாக் கிறிஸ்துவ தேவாலயங்களின் சுவர்களில் உருவச்சிலைகளும், பெரியர

ரின் படங்களுமிருக்கலாமெனக் கருதி, அவ்வாறே செய்யத்தலைப் பட்டார்கள். ஆனால், காலஞ்செல்லச் செல்ல அவ்வேறுபாடும் கிறிஸ்துவரின் தேவாலயங்களில் விக்கிரக ஆராதனையைப் புகுத்துவிட்டதென்று கூறலாம். மேலும், விக்கிரக ஆராதனையை அத்தியாவசியமான மதக்கிரியை யென்னும், தெய்வீக வணக்கமென்றும் நம்பி, ஆண்டவனைத் தொழுவதேபோல் கிறிஸ்தவர் உருவச்சிலைகளைத் தொழுவாரம்பித்துக்கொண்டார்கள். இந்நூதனக் கிரிகையோடு, அல்லாஹுதஆலாவுக்கு மற்றவைகளை இணையாக்குவதைச்சார்ந்த வேறு பலகாரியங்களும் கிறிஸ்து மதத்தில் நுழைந்துவிட்டன. தீபமேற்றிவைப்பது, சாம்ராணியைத் தீயிலிட்டுப்புகைப்பது, சாஷ்டாங்கஞ் செய்வது முதலியவைகளை உதாரணமாகக் கூறலாம். இவைகள் விக்கிரக ஆராதனையைச் செய்வோரிடமிருந்து கற்றுக்கொள்ளப் பட்டனவாகும்.

உண்மைக் கிறிஸ்துவர் இவ்வடாத செய்கையைக்கண்டனஞ் செய்தார்களாயினும், இவர்களின் கண்டனத்தை யெவரும் பொருட்படுத்தவில்லை. இவ்வுருவச்சிலைகளின் அற்புதங்களைச் சார்ந்த ஆயிரக் கணக்கான பொய்க் கதைகள் பிரசித்தியடைந்திருந்தன வாதலின், ஜனங்கள் இவைகளை வணங்காதிருக்க இஷ்டப்படவில்லை.

கிறிஸ்து மதத்தில் விக்கிரக ஆராதனைப் புகவாரம்பித்த போழ்து, ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சுரூபம் லக்ஷணமின்றி நடுக்கமுற்றதாக அமைக்கப்பட்டிருந்தது. ஆனால், ஹஜ்ரத் "மஸீஹ்" ஹஜ்ரத் "மரியம்" (அலைஹிமஸ்ஸலாம்) ஆகியவர்களுடையவும், மற்ற மலக்குகளுடையவும் உருவங்கள் சுத்தமாயும், தெளிவாயும் நல்ல மானிடத்தோற்றத்தையும் கொண்டனவாகவிருந்தன.

கிறிஸ்து மதத்தின் ஆறுவது நூற்றுண்டு.

ஆறுவது நூற்றுண்டு முடிவதற்குள் விக்கிரக ஆராதனையானது கிறிஸ்துவ தேவாலயங்களைச் சார்ந்த பூரணச்சிறந்த வணக்கமாக வேற்பட்டுவிட்டது. எல்லா தேவாலயங்களும் விக்கிரகத்தைக் கொண்டும் அலங்கரிக்கப்பட்டன. போப் என்னும் மதாச்சாரியரின் மாளிகையிலுங்கூட உருவச்சிலைகள் நிறைந்துவிட்டன. மேலும், கிறிஸ்து மதத்தைச் சார்ந்த 'மூமின்'களென்போர் உருவச்சிலைகளையும், விக்கிரகச் சுரூபங்களையும் அளவுகடந்து நேசிப்பவராகவிருந்தனர். வணங்குவதற்கும், நன்னிலையையடைவதற்கும் உருவச்சிலைகள் அவசியமென்றும் நம்பத் தலைப்பட்டனர். கடவுளின் அச்சம், பரிசுத்தவாழ்க்கை ஆகியவைகளுக்கு உருவச்சிலையை வைத்திருப்பது ஒரு பெரும் அடையாளமெனக் கருதப்பட்டது.

உருவச்சிலைகளைக் கௌரவிப்பதும், விக்கிரக ஆராதனையும் எட்டாவது நூற்றாண்டின் மத்திபகாலத்தில் கிறிஸ்துமத வணக்க ஸ்தலங்களில் அதிபெரும் உச்சஸ்தானத்தை யடைந்துவிட்டன. இதே காலத்தில் தோன்றிய சில கிரேக்கப் பாதிரிகள் உருவச்சிலைகளை யொட்டி நடந்தேரிய காரியங்களை விக்கிரக ஆராதனை எனத் தீர்மானித்தனர். மேலும், விக்கிரக ஆராதனையிற் சிக்குண்டுவிட்ட கிருஸ்துவரை நோக்கி இப்பாதிரிகள் "கடவுளுக்கு இணைவைக்கும் சமூகங்கள் விக்கிரகங்களைக் கடவுளென்று கூறுவதில்லை; இவ்வுருவச்சிலையை யொட்டி நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையையே கடவுளுக்கு இணைவைக்கும் சமூகங்களும் கொண்டிருந்தன. ஆனால், இத்தகைய நம்பிக்கையைக் கொண்டிருந்தோரைக் கடவுளுக்கு இணைவைப்பவரென்று கடவுளின் வேதம் தீர்மானித்திருக்கிறது. ஆகவே, உங்களுக்கும், கடவுளுக்கு இணைவைக்கும் அச்சமூகங்களுக்குமிடையில் எவ்வேற்றுமையுமில்லை. ஆனால், நாமங்களிலும், பதங்களிலும் வேற்றுமைகளிருக்கின்றன.

இஸ்லாமின் ஆரம்பம்.

பல நூற்றாண்டின் மறதிக்குக்குப்பின்னர், கிறிஸ்து மதப்பாதிரிகளுக்கு விழிப்பேற்பட்டது. அரேபிய தேசத்திலிருந்து இஸ்லாம் மார்க்கமானது வெளிக்கிளம்பி, மிஸர், ஷாம், பலஸ்தீன் முதலிய தேசங்களில் பரவிற்று. மேலும், கானிஸ்தாந்திநோபிளைச் சார்ந்த பீஸன்தீனிவகுப்பாரின் தேவாலயத்திலும் இஸ்லாமின் பார்வைகள் விழுந்துகொண்டிருந்தன. மேலும், விக்கிரக ஆராதனையைக் கண்டிக்கும் இஸ்லாமிய போதனைகள் உலகமறிந்தனவே. இஸ்லாமிய ஆரம்பகாலத்துப் போராட்டத்திலேயே கிறிஸ்துவரை விக்கிரக ஆராதனைக்காரர்களென்றும், கடவுளுக்கு இணைவைப்பவர்களென்றும் முஸ்லிம்கள் கூறுவதைக் கிறுஸ்துவர் தெரிந்துகொண்டனர். மேலும், இஸ்லாமிய மஸ்ஜித்களில் எத்தகைய சிலையும், உருவமும், இல்லாது சுத்தமாக விருப்பதையும், அக்கிறிஸ்தவர் கண்கூடாய்த் தெரிந்துகொண்டனர். மேற்கூறப்பட்ட சம்பவங்களே கிறிஸ்துமதப் பாதிரிகளின் இவ்விழிப்பிற்குக் காரணமெனக்கூறலாம்.

இஸ்லாமிய வாடையின் மூலமாய் உணர்ச்சி பெற்ற ஒரு கிறிஸ்துவ வகுப்பினர் "தௌராத்" என்னும் வேதத்தின் இல்லத்திற்கு ஜனங்களை அழைக்க வாரம்பித்தனர். அவ்வேதம் உருவச்சிலைகளைக் கௌரவிப்பதையும், விக்கிரக ஆராதனையையும் சார்ந்த எல்லா நடவடிக்கைகளையும் (ஹராம்) ஆகாதென்த் தீர்மானித்திருந்தது.

லியூனின் சீர்திருத்தம்.

இஸ்லாமிய பிரகாசம் மேலோங்க வாரம்பித்துவிட்ட காலத்தில், மூன்ருவது "லியூன்" கானிஸ்டாண்டிநோபிளின் சிம்மாசனத்தையடைந்தார். "லியூன்" சக்ரவர்த்தி அஷ்ஷார் என்னும் மலைச்சிகரத்திலிருந்து வளர்ந்தவர். ஆகவே, கல்விவாசனை யற்றிருந்தாராயினும், சிரேஷ்டமான நல்ல அறிவுடையவராகவிருந்தார்.

மேலும், இவர் விக்கிரக ஆராதனையை அருவருக்கும் யூதர்களுடையவும், அரபியர்களுடையவும் கூட்டுறவைப் பெற்றிருந்தார். ஆகவே, இச்சம்பந்தத்தின் பயனுக இவர் உருவச்சிலைகளேயும், விக்கிரகங்களேயும் கௌரவித்து, வணங்குவதை மறுக்கவேண்டிய மனே நிலையைக் கொண்டிருந்தார். இவர் சிம்மாசனத்தை யடைந்து விட்டாராயினும், தமக்குப் போதிய செல்வாக்கேற்படும்வரை விக்கிரக ஆராதனையைச் சார்ந்த தம் கருத்தை வெளியிடாமல், அதிசாமர்த்தியமாக ஹிருதயத்துள்ளேயே வைத்திருந்துப் பிறகு மார்க்கச்சீர் திருத்தத்தைப் புரியமுற்பட்டார்.

இவ்வரசர் பாதிரிகளின் ஒரு சபையைக்கூட்டி "தேவாலயங்களிலும், பரிசுத்த ஸ்தலங்களிலுமுள்ள உருவச்சிலை முதலியசுரூபங்களைத் தேவாலயங்களிலிருந்தெடுத்து, கடவுளுக்கு இணைவைக்கக் கூடிய சடங்குகளை நிறைவேற்ற முடியாதவளவு உயரமான விடங்களில் அவைகளை அமர்த்தி விடவேண்டும்" என்ற மதத்தீர்ப்பைப் பிறப்பிக்கச் செய்ததே இவரின் முதற்காரியமாகும். சில வருடங்களுக்குப் பின்னர், உருவச்சிலைகள், விக்கிரகச்சுரூபங்கள் முதலியவைகளைக் கௌரவிக்கவும், வணங்கவும், தேவாலயங்களில் வைத்திருக்கவும் கூடாதென்று விளம்பரஞ்செய்து, கானிஸ்டாண்டி நோபிளைச் சார்ந்த தேவாலயங்களிலிருந்த விக்கிரகங்கள் முழுவதையு மகற்றி, ஹஜ்ரத் மஸீஹ், ஹஜ்ரத் மரியம் (அலைஹிமஸ்ஸலாம்) ஆகியவர்களின் எல்லா உருவச்சிலைகளேயு முடைத்தெரிந்ததோடு, சுவறுகளிலுள்ள சுரூபங்களேயும் அழித்து விடப்பட்டன.

"லியூன்" சக்ரவர்த்தியைக் காட்டினும் இவரின் புத்திரராகிய 5-வது "குஸ்தன்தீன்" விக்கிரக ஆராதனையை யொழிப்பதற்கான காரியத்தை அதிதீபரமாய்ச் செய்ய முற்பட்டார். மேலும், இவ்வரசர் கி. பி. 754-வது ஆண்டில் மதசம்பந்தமான ஒரு சபையை நடத்திவைத்தார். இச்சபைக்கு 338 பாதிரிகள் சமுகங்கொடுத்திருந்தனர். ஆகவே, இக்கூட்டத்தை அதிகௌரமான சபை என்றே கூறவேண்டும். "பீஸந்தீனி" வகுப்புத்தேவாலயங்களைச் சார்ந்த பாதிரிகள் மட்டுமே இச்சபைக்கு வந்திருந்தனர். ஆனல், ரோம்,

ஸ்கந்திரியா, ஜெருஸலம், அந்தாகியா ஆகிய நாட்டுப்பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளாதது ஆச்சரியமல்ல. விக்கிரக ஆராதனையைப் பற்றிய விபரத்தைச் சக்கிரவர்த்தியே சபையில் ஆஜர் செய்தார். "விக்கிரக ஆராதனையை கிறிஸ்துமத போதனையானது ஆகாதென்று வெகு கண்டிப்பாய்க் கூறுகின்றது" ஆகவே, பூசிக்கப்பட்டுவரும் உருவச்சிலைகள், சுரூபங்கள், அவைகளின் சின்னங்கள் முதலியவைகளை கிறிஸ்துமத வணக்கஸ்தலங்களை விட்டும் அகற்றி விட வேண்டும், என்று இச்சபையினர் ஏகமனதாய் தீர்மானித்தனர். சிலுவையை வைத்திருப்பதுங்கூட கிறிஸ்துமதச் சட்டப்படி ஆகாதெனத் தீர்மானித்ததோடு, உருவச்சிலைகளை யியற்றும் தொழிலைக்கூட ஆகாதென்றுகூறி, உருவச்சிலை, விக்கிரக சுரூபம், சிலுவை ஆகியவைகளைச் செய்வோரையும், எழுதுவோரையும் உடனே தேவாலயங்களிலிருந்து வெளியேற்றி விடவேண்டுமென்றும், இத்தகையோர் பாதிரிகளாயினுஞ் சரியே. என இச்சபையினர் அதிபெரும் கட்டளையைப் பிறப்பித்து விட்டனர்.

கி. பி. 766-வது ஆண்டில் இச்சபையின் தீர்மானங்கள் அதிபலத்தோடு அமலுக்குக் கொண்டுவரப்பட்டன. ஆகவே, சிலுவையை வைத்திருப்பது, மகான்களைத் தொழுவது, உருவச்சிலைகளைக் கௌரவிப்பது முதலிய (விக்கிரக ஆராதனையைச் சார்ந்த) ஒவ்வொரு காரியமும் பிசெகனத்தீர்மானித்து, இதைச் செய்வோர்க்கு சவுக்கடி முதற்கொண்டு, கண்களைத் தோண்டுவது, நாவையறுப்பது, தூக்கிலிடுவது வரையுள்ள சிக்ஷைகள் விதிக்கப்படுமென தீர்மானமாயிற்று.

மீண்டும் விக்கிரக ஆராதனை.

ஆனால், ஐரீனி சக்கிரவர்த்தினியின் காலத்தில் மீண்டும், விக்கிரக ஆராதனை தலைதூக்கிற்று. இச்சகரவர்த்தினி விக்கிரகஆராதனையை ஆதரிப்பவளாகவிருந்தாள். ஏனெனின், இவள் மாதரசியாகவிருந்ததோடு, கிரேக்கவம்சத்தைச் சார்ந்தவளாகவுமிருந்தாள். இம்மாதரசி தன் மைனர் புத்திரனாகிய 6-வது குஸ்தன்தைனின் போஷகியென்னும் முறையில் சிம்மாசனத்தைப் பெற்றாள். இம்மாதரசி ஆக்ஷிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடனேயே "சுகூனி" தேவாலயத்தைச் சார்ந்த பாதிரிகளைத் துன்புறுத்த வாரம்பித்தாள். கி. பி. 787-வது ஆண்டு செப்டம்பர் மாதம் "நீஸ்" என்னுமிடத்தில் ஒரு மார்க்க சபையைக்கூட்டினாள். இக்கூட்டத்திற்கு 367 பாதிரிகள் வந்திருந்தனர். மதாச்சாரியராகிய போப்பின் பிரதிநிதியும் இக்கூட்டத்திற்கு வந்திருந்தார். கிறிஸ்துமதத்தில் விக்கிரகங்க

ளையும், உருவச்சிலைகளையும் வணங்குவது ஆகுமென்பது மட்டுமின்றி, இக்காரியம் கிறிஸ்துமதப்படி மெச்சத்தக்கதென்றும் இச்சபையோர் ஏகமனதாய் மதத்தீர்ப்பொன்று வெளியிட்டனர். முன்னோர்களின் பெயரால் இட்டுக்கட்டிய பற்பல பொய்ச்செய்திகளை இதற்காதார மாக எடுத்துக் காட்டப்பட்டன. மேலும், கானிஸ்டாண்டிநோபிளில் முன் கூட்டப்பட்ட சபையில் கலந்துகொண்டோரை கிறிஸ்துமதப் படி காபர்களென்று தீர்மானித்ததோடு, அச்சபையின் தீர்மானத்தை அனுஷ்டிப்பவர் காபரென்றும், முர்தத்தென்றும் இச்சபைத் தீர்மானித்துவிட்டது.

இரண்டாவது சீர்திருத்தம்.

இப்புதிய தீர்மானப்படி சில காலம்வரை நாட்டிற் பற்பல காரியங்கள் நடைபெற்று வந்தன. பிறகு "டியூவேல்ஸ்" என்பவர் கானிஸ்டாண்டிநோபிளின் அரசராக வமர்ந்தார். இவர் விக்கிரக ஆராதனையை அருவருக்கும் பண்கவராகவிருந்தார். இவர் கி. பி. 833-வது ஆண்டில் மீண்டும் கிறிஸ்துவ பாதிரிமார்களிட மிருந்து ஒரு புதியதீர்ப்பைப் பெற்றார். இத்தீர்மானப்படி விக்கிரக ஆராதனை ஆகாதென்று ஏற்புட்டது. இவ்வரசர் உருவச்சிலைகளையும், விக்கிரகங்களையும் அகற்றி, அவைகளையழித்ததோடு, கிறிஸ்துவபெரியாரின் நாமங்களோடு வரையுப்பட்டிருந்த "முகத்தஸ்" என்னும் பதத்தையும் அழித்து விட்டார். மேலும், படங்களை யெழுதுவோரையும், விக்கிரகங்களைச் செய்வோரையும் கடிமையாய்த் தண்டித்தார். இந்நடவடிக்கைகளுக்கு மாறு செய்த பாதிரிகளின் நெற்றிகளில் தீயால் சூடுபோடப்பட்டன. சுருங்கச்சொல்லின் விக்கிரக ஆராதனையையும், அதையொட்டிய காரியங்களையும் ஒழிப்பதற்கு தக்க நடவடிக்கைகள் வெகு தாராளமாய்க் கையாளப்பட்டன.

அதேகாலத்தில் "ஜான்" என்னும் ஒரு கிறிஸ்தவ பாதிரியார் கீழ் ரோமாவைச்சார்ந்த தேவாலயங்களின் போப்பாக நியமனம்பெற்றார். இவர் டியூவேல்ஸ் சக்ரவர்த்தியின் உபாத்தியாயராக விருந்ததோடு, விக்கிரக ஆராதனையைக் கண்டிப்பாய் அருவருப்பவராக வுமிருந்தார். ஆனால், இவர் தைரியமற்ற கோழையாகவிருந்தார். விக்கிரக ஆராதனையை யொழிக்கும் பொருட்டு அரசரிட்ட கட்டளையை அமுலுக்குக் கொண்டுவர இவரால் சாத்தியப்படவில்லை. இதன்பயனாக எதிரிகள் அச்சமற்று சர்க்காரின் உத்திரவுகளை மறுத்து வேலைசெய்ய முற்பட்டுவிட்டனர். ஆகவே, இந்நிலைமையைக் கண்ட அரசர் கோபமுற்று பலமான அடக்குமுறையைக் கைக்கொண்டு, விக்கிரக விசுவாசிகளைக் கொரோமாய்ச் சிக்ஷித்துவந்தார்.

மூன்றாவது முறை விக்கிரக ஆராதனை.

சக்ரவர்த்தி "டியூவேல்ஸ" மரணமடைந்த பின்னர், இவரின் மனைவி சிம்மாசனத்தை யடைந்தாள். இவள் தன் கணவனின் கொள்கைக்கு மாறுபட்ட கொள்கையைக் கொண்டிருந்தாள். ஆகவே, இவள் மீண்டும் ஜனங்கள் விக்கிரக ஆராதனையைச் செய்யும்படி அனுமதிக்கக்கருதினாள். ஆனால், இவளிஷ்டப்படி விக்கிரக ஆராதனையானது நடைபெறமுடியாமல் "ஜான்" என்னும் பாதிரியார் பெருந் தடையாகவிருந்தார். (1) விக்கிரக ஆராதனை செய்வோர். (2) இதை மறுப்பவர். இவ்விரு வகுப்பினரும் ஜான் என்னும் பாதிரியை அருவருத்துக்கொண்டிருந்தனர். முதலாவது வகுப்பார் "ஜான்" தங்களின் பகைவரென்றும், இரண்டாவது வகுப்பினர் இவரைக் கோண நெஞ்சரென்றும், நயவஞ்சகரென்றும் கருதியிருந்தனர். இப்பாதிரி "பிரகிருதி சாஸ்திரத்திலும், பலர்சிபாவிலும் தேர்ச்சி பெற்றவராக விருந்தார். இக்கல்விகள் அக்காலத்து கிறிஸ்தவரின் தோற்றத்தில் குப்ராகவும், இல்ஹாதாகவுமிருந்தன. ஆகவே, பாதிரியை அப் பதவியினின்று அகற்ற ஜனங்கள் முயற்சிக்க வாரம்பித்தனர். பாதிரியார் சூனியக்காரரென்றும் பகிரங்கஞ் செய்யப்பட்டது. ஏனெனின், அவர் வகித்துவரும் பதவியினின்றும் அவரை தள்ளுவதற்கு இப்பழிச் சொல்லே போதியதாக விருந்தது. ஆகவே, பாதிரியார் பற்பல இழிவுக்காளாகி, பதவியினின்றும் தள்ளப்பட்டதோடு தேசப் பிரஷ்டமும் செய்யப்பட்டார். மேலும், அப்பாதிரியார் பிரசித்தமற்ற ஒரு ஆச்சிரமத்தில் பாதுகாவலில் வைக்கப்பட்டார். ஆனால், பாதிரி ஜானுக்கு இத்தனைத் தொந்தரைகள் மற்றுமின்றி, ஒரு பெரியாரின் உருவச்சிலையிலுள்ள கண்களை பாதிரிஜான் தோண்டிவிட்டதாக பகைவரால் குற்றஞ் சாட்டப்பட்டார். இக்குற்றத்திற்கு சிக்ஷையாக பாதிரியாரின் கண்களைத் தோண்டிவிட்டனர். பாதிரிஜான் ஒழிக்கப்பட்ட பின்னர், டியூவேல்ஸ் சக்ரவர்த்தியின் மனைவிக்கு நல்ல சமயமேற்பட்டது. அம்மாதரசி கி. பி. 842-வது வருடம் கானிஸ்டாண்டிநோபிளில் பாதிரிகளின் ஒருசபையைக் கூட்டி, விக்கிரக ஆராதனை செய்யவேண்டுமென்றும், இதை ஆக்ஷேபிப்பவர் காபிர்களென்றும் மதத்தீர்ப்பு வெளியிடச் செய்தாள். மேலும், அச்சபையினர் விக்கிரக ஆராதனையானது கிறிஸ்து மதத்தின் வணக்கங்களுக்கு அடிப்படையான தென்றும், ஒப்புக்கொண்டனர். ஆகவே, கி. பி. 842-ஞ பிப்ரவரிமீ 19உ தேவாலயங்களில் மீண்டும் உருவச் சிலைகளையும், விக்கிரகங்களையும் கொண்டுவந்து வைக்கப் பட்டன. ஆனதுபற்றியே, இன்றுவரை கிரேக்க தேவாலயங்களில் பிப்ரவரிமீ

19உயை கிருஸ்துவர் மதசம்பந்தமான சந்தோஷதினமாகக் கொண்டாடி வருகின்றனர்.

இதன் பின்னர், கிறிஸ்துமத ஒழுங்கு முறைப்படி விக்கிரக ஆராதனைக் கெதிரிடையான காரியமெதுவும் தோன்றவில்லை. ஆனால், சிலுவையுத்தத்திற்குப் பிறகு இஸ்லாமிய ஏகதெய்வக் கொள்கையின் பிரகாசமானது மேல்நாட்டின் ஹிருதயத்தையடைந்து, கிறிஸ்து மத சீர்திருத்தக்காரரான பிரசித்திபெற்ற "லூதர்" தோன்றினார்.

மஸ்ஜித் அயாஸூபியா

(எஹிப்தைச்சார்ந்த யாத்திரீகரான உஸ்தாது மர்ஸீமஹ்மூது அவர்கள் அல்ஹிலாலுக் கெழுதியது.)

கானிஸ்டாண்டி நோபிளிலுள்ள அயாஸூபியாவும், அதன் இன்றைய தோற்றமும்.

அயாஸூபியாவின் கட்டட அமைப்பும், அதன் அந்தரங்க பகிரங்கத் தோற்றமும், கண்ணைப் பறிக்கத்தக்க அழகும், மேன்மையும் "மானிடரின் ஹிருதயத்தைக் கவர்ந்துக் கொள்கின்றன" வென்பதே உலகசஞ்சாரிகளின் தீர்மானமாகும். அயாஸூபியாவுக்கு மட்டும் உரியனவாகவிருக்கும் கௌரவங்கள் முழு உலகிலும் பிரசித்திபெற்ற எக்கட்டடத்திற்கும் கிடையா. லண்டனிலுள்ள "வெஸ்ட்மினிஸ்டர்", பாரிஸிலுள்ள "பந்தியூன்" (Pantheon) ரீம்ஸின் "தேவாலயங்கள்", ஏதன்ஸின் "கர்போல்" அக்ஸரின் "கரங்கு" என்னும் வணக்கஸ்தலம் அஸ்வானின் "மாளிகை" முதலிய எதுவும் அயாஸூபியாவின் கம்பீரத்தைப் பெறவியலாது.

முழு உலகத்திலும் ஒரு பெரும் அதிர்ச்சியை யுண்டுபண்ணின பிரசித்திபெற்ற கோரியையும், அதில்அடக்கஞ்செய்யப்பட்டிருக்கும் "தௌத்தாஙூன் ஆமன்" என்பவரின் பிரேதத்தையும் நான் பார்த்திருக்கிறேன். ஆனால், அயாஸூபியாவைத் தரிசித்தபோழ்து என் மனத்துள் உண்டான ஆனந்தத்திற்களவேயில்லை. இவ்வானந்தம் நான் மரணமடையும்வரை என் மனத்தை விட்டகலாதென்பது திண்ணம்.

கிறிஸ்துவரின் மாதா கோவிலாகவிருந்த 'அயாஸொபியாவானது', இன்று 'மஸ்ஜித் அயாஸொபியாவாக விருக்கின்றது. இது மஸ்ஜிதாகவிருப்பதே நன்மையும், உத்தமமுமாகும். "கோஸ்டன்டைன்" என்னும் அரசர் இப்பெரும் மாதா கோயிலை பிராணத்தியாகியாகிய 'கதிஸர் ஸொபியாவின்' ஞாபகார்த்தமாக அம்மாதாகோயிலின் பெயராலேயே கட்டிவைத்தார். இது வழக்கத்திற்கும், அனுஷ்டானத்திற்கு மேற்ப கோஸ்டன்டைனின் நோக்கபடி, வருங்காலத்தில் ஒரு வணக்க ஸ்தலமாக விருக்கதக்க உரிமையைப் பெற்றிருக்கமுடியாது. ஆகவே, துருக்கி அரசரான 2-வது "முஹம்மது" அம்மாதா கோவிலை மஸ்ஜிதாக மாற்றிவிட்டார். மஸ்ஜிதாக மாற்றி பல நூற்றாண்டுகள் சென்ற பின்னரும் அயாஸொபியாவானது தனக்குரித்தாகவிருந்த கிறிஸ்துவ தோற்றங்களை யிழந்துவிடவில்லையென்றே கூறவேண்டியிருக்கிறது. ஏனெனின், இதுவரையில் அயாஸொபியாவானது ஒரு மாதா கோயிலின் தோற்றத்தையே கொண்டிருக்கின்றது. 'அயாஸொபியாவில் சிலுவையின் அடையாளங்கூட இன்னமும் இருந்துவருகிறது. சிலுவையின் உருவத்தையொட்டி அமைக்கப்பட்டிருக்கும் அங்கங்கள் இன்றளவும் பூர்வஸ்திதியிலேயே இருந்து வருகின்றன. அயாஸொபியாவின் தூண்கள் கோஸ்டன்டைனுடையவும், அவரின் மனைவியுடையவும் விசுவாசம் நிறைந்த சின்னங்களைச் சமர்ப்பிக்கும் வண்ணமாக விருக்கின்றன. அயாஸொபியாவின் இருவிலாப்புறங்களிலுமிருந்த ஞானஸ்னான சலவைக்கல் தண்ணீர்த் தொட்டிகளிரண்டும் முன்போலவே இன்றளவுமிருந்து வருகின்றன. அத்தொட்டியிலேயே தொழுகைக்காக ஆஜராகும் பெண்கள் உலுவு (கை, கால், முகம் முதலியவைகளைச்சுத்தி) செய்கின்றனர். அதன் சுவறுகளில் பூர்வகாலச் சித்திரங்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. ஆனால், அச்சித்திர உருவங்களை யழிக்கவும் துருக்கியர் முயற்சித்திருக்கிறார்கள். மேலும், ஹஜ்ரத் மரியம் அவர்களின் கூரிய பார்வையுடைய கண்களோடு கூடிய படம், தொழுகைக்காக அணிவகுத்திருப்போரைப் பார்க்கும் வண்ணமாகவிருக்கிறது. அச்சுரூபத்தை தொழுவோர் எவரும் பார்க்கமுடியாதாயினும், இஸ்லாமிய வணக்கஸ்தலத்தில் சுரூபமிருப்பது ஷிர்க்—இணைவைப்பதற்கொப்பாகுமாதலின், அச்சுரூபத்தை யழித்துவிடவும் துருக்கியர் முயற்சித்தார்கள். ஆனால், முழுச்சுரூபமும் அழிக்கப்படவில்லை.

அது மாதாகோயிலாகவிருந்தும், அதன் மிஹ்ராபனது கிப்லாவின் பக்கத்தில் அமைந்திருந்ததால் மாற்றி யமைக்கவேண்டிய அவசியமின்றியே, மஸ்ஜிதின் மிஹ்ராபாகவேற்பட்டு விட்டது பெரும்

ஆச்சரியமல்லவா? மாதா கோயில்களில் மட்டுமே கையாளப்பட்டு வருகின்ற வர்ணக் கண்ணாடிகள் தங்களுக் கெதிரே யிருப்பதைத் தொழுவோர் காண்பார்கள். ஆனால், அக் கண்ணாடிகளில் இன்று குர்ஆன் ஷரீபின் ஆயத்துகளும், அரபி வாக்கியங்களும் தோன்றும். ஆயினும், அயாஸூபியாவி லிருப்போர் தங்களை மஸ்ஜிதி லிருப்பவ ராக வெண்ணாமல், மாதாகோயிலிருப்பதாகவே கருதுவார்கள். ஏனெனின்? அயாஸூபியாவானது இன்றுவரை ஒரு மாதாகோவி லைப்போலவே இருந்து வருகின்றது.

கிறிஸ்து மதபிரசங்கிகள் நின்று பிரசங்கிப்பதற்குரிய சலவைக் கல் (மின்பர்) மேடையானது, சிலுவையின் சிரசைக் கொண்டதாக இன்றுவரையும் இருந்து வருகிறது. இதற்கெதிரே மற்றொரு மே டையைக் கட்டப்பட்டிருக்கின்றது. அதில் இஸ்லாமிய பிரசங்கி நின்று பிரசங்கஞ்செய்கிறார். இவ்விரண்டு மேடைகளும் சரித்திர சம்பந்தமான ஒரு ஏட்டின் இரு பக்கங்களாயும், எக்காலத்தும் அழி த்துவிட முடியாதனவாயு மிருக்கின்றன.

மஸ்ஜிதுக்கு ஏகுவினுல் ஏழு கேட்டுகள் பல்மான் கோட்டை களின் கேட்டுகளைப்போல், அதி கம்பீரமானவையாக விருக்கின்றன. ஒவ்வொரு கேட்டினுடையவும் கிராதிக் கதவுகளில் சிலுவையின் சின்னங்களுண்டு. இச் சிலுவையின் குருக்குச் சின்னங்களைத் துரு க்கி ஜெயசீலர் அழித்துவிட்டனர். ஆனால், அதன் நிகிளச் சின்னங் கள் இன்றுவரை முற்காலத்தைப் போலவே இருந்துவருகின்றன.

நான் அயாஸூபியாவைப் பற்றி விரித்துக் கூறக்கருதவில்லை. ஏனெனின், நான் அயாஸூபியாவின் காட்சிகளை எடுத்துக் காட்ட எத்துணை முயற்சித்தாலும், அதன் காட்சியை பத்திலொரு பாக மேனும் விளக்கிக் காட்டவியலாது. சுருங்கச்சொல்லில் முன் மாதாகோயிலாகவிருந்து, இப்போழ்து மஸ்ஜிதாக விருக்கும், அயா ஸூபியாவென்னும் கட்டடத்தைக் காட்டினும் அதியழகும், கம்பீ ரமுமுள்ள கட்டிடத்தை மானிடரின் கண்கள் இதுவரை உலகில் கண்டுகளித்திருக்க முடியாதென்றே கூறவேண்டும்.

அயாஸூபியாவும், ஜும்ஆ தொழுகையும்.

ஜும்ஆ தொழுகையை நிறைவேற்றுவதற்காக அயாஸூபியா வுக்குச் சென்றேன். இன்றைய மாறுதலுக்குப் பின்னர், "ஹேட்டு" என்னும் தொப்பியை அணிந்துகொள்ளும் துருக்கியர் தொழுகிறார் களா? இல்லையா? என்றும், தொழுவார்களாயின், எவ்வாறு தொழுகிறார்களெனக் கண்டறியவும் அதிபெரும் ஆவல் கொண்டிருந்

தேன். ஆனால், அயாஸஃபியாவை யடைந்ததும் எனக்கேற்பட்ட ஆச்சரியத்திற் களவில்லை. ஏனெனின்? அயாஸஃபியாவானது தொழுகையை நிறைவேற்றுவதற்காக வந்திருக்கும் ஜனங்களால் நிறம்பப் பெற்றிருந்தது. அயாஸஃபியாவில் ஜனங்கள் நிறைந்திருந்ததாய்ச் சொல்லப்படுமாயின், அவர்கள் ஆயிரக்கணக்காக விருந்தார்களென்று கருதவேண்டும். ஆயிரக் கணக்கர்களென்றால் 10,000-மோ, 20,000-மோ, 50,000-மோ, இத்தனை ஜனங்கள்தான் என்று குறிப்பிட்டுக்கூற முடியாது.

அவர்கள் அணிந்திருக்கும் ஹேட்டைப்பார்த்து பெரும் ஆச்சரியமுண்டாயிற்று. ஏனெனின், துருக்கியர் அணிந்துக்கொள்ளும் ஹேட் மேல்நாட்டார் அணிந்துகொள்ளுவதைப் போலன்றி, "அயாஸஃபியா"வை மஸ்ஜிதாக்கியதைப்போல், துருக்கியர் தங்களின் ஹேட்டை இஸ்லாமுக் கேற்றதாகச் செய்துகொண்டார்கள். அயாஸஃபியாவுக்குள்ளும் துருக்கியர் ஹேட்டை அணிந்திருந்தனர்.

இந்த ஹேட்டுகள் தொழுகையைத் தடுக்கக்கூடியதாக விருக்கவில்லை. ஹேட் அணிந்திருக்கும் துருக்கியர்கள் எவ்வாறு தொழுவார்களென்னும் சிந்தனையும், ஆச்சரியமும் என்னை விட்டகலாதிருந்தது. ஆனால், தொழுவதற்காக நிற்க வாரம்பிக்குமுன் ஹேட்டைக் களைந்து, தங்களின் முன் வைத்துவிட்டு, சட்டைப்பைகளிலிருந்து சாதாரணத் தொப்பியை எடுத்து அணிந்து கொள்ளுகின்றனர். சாதாரணத் தொப்பியில்லாதவர் தொப்பியில்லாததை முன்னிட்டு ருமாலை தலையில் கட்டிக்கொள்ளுகிறார்கள். மெதுவான ஹேட்டை அணிபவரும் சிலருண்டு. அவர்கள் தொப்பியின் நிகளமாபுள்ள முன்பாகம் பின்புறமாயும், சிறியதாயுள்ள பக்கம் முற்புறமாயு மிருக்கும்படி திருப்பி அணிந்துகொள்ளுகின்றனர். ரப்புல் ஆலமீனின் திருச்சமுகத்தில் சிரசைப் பணிய தடையில்லா திருக்கும்பொருட்டு, தங்களின் தொப்பியை இவ்வாறு போட்டுக்கொள்கின்றனர்.

இஸ்லாமிய மேடை (மின்பர்)க்கும், கிறிஸ்துவ மேடைக்கு மிடையில் உட்கார்ந்தேன். சலவைக்கல்லின் ஆறு தூண்களின்மேல் அமைக்கப்பட்டுள்ள ஒரு விசாலமான ஆசனமுண்டு. நான்கு துருக்கிகாரிகள் அவ்வாசனத்தின் நான்கு கோணங்களில் வீற்று குர்ஆன் ஷரீபின் சிறிய அத்தியாயங்களை நல்ல அழகிய தொனியில் ஓதிக்கொண்டிருந்தனர். முதன் முதலாக ஒரு காரி ஓர் அத்தியாயத்தை ஓதுகிறார். பின்னர் அவ்வத்தியாயத்தையே மற்ற மூன்று காரிகளும் ஒருவர்பின் ஒருவராய் ஓதுகிறார்கள். அத்தியாயத்தின் முடிவில் நால்வரும் சேர்ந்தாப்போல் "சுப்ஹானல்லாஹ், அல்ஹம்

துவில்லாஹ், வலா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்'' என்று ஓதுகின்றனர்.

துருக்கி கதீப்.

கதீப் மின்பரிலேறி குத்பா ஓதினர். குத்பாவின் முடிவில் துருக்கி குடியரசின் நன்மையைக்கோரி துஆவிரைந்து குத்பாவை முடித்தார்.

துருக்கியர் தொழுவதைக் கண்டு நான் பெரிதும் ஆச்சரியமடைந்தேன். அவர்கள் பக்தி சிரத்தையோடு தொழுகையின் வரிசையில் அமருகின்றனர். துருக்கியர் அல்லாஹுத ஆலாவின் சமுகத்தில் அச்சம் மேலிட்டவர்களாய்த் தொழுகின்றனர். வீரபுருஷர்களாகிய துருக்கியரின் உடையிலும், பழக்கவழக்கத்திலும் எத்தனை மாறுதலேற்பட்டிருப்பினும், அவர்களின் ''ஈமான்'' அதி உறுதியாகவேயிருக்கின்றது. மேலும், உண்மையில் இச்சமூகமானது முஸ்லிம் சமுகத்திற்கே பெரும் கீர்த்தியையளிக்கக் கூடிய தாகும்.

பத்திராதிபர் குறிப்பு.

துருக்கியரின் மதம்.

இன்று துருக்கியரின் மதத்தைபற்றி பத்திரிகைகள் பற்பல அபிப்பிராயங்களை வெளியிட்டு வருகின்றன. துருக்கியர் இஸ்லாமைத் தள்ளிவிட்டதாயும், இஸ்லாமுக்கும் துருக்கியருக்குமுள்ள சம்பந்தம் ஒழிந்துவிட்டதாயும், மதப்பற்றை யிழந்துவிட்டதாயும், பழக்க வழக்கம், நடையுடை பாவனையில் மேல் நாட்டினரை முழுதும் பின்பற்றிவிட்டனர் என்றும் பத்திரிகைகள் வெளியிட்டுள்ள செய்திகள் மட்டுமின்றி, மற்றொரு செய்தி அதியாச்சரியத்தை யுண்டுபண்ணத் தக்கதாகவிருக்கின்றது. அஃதாவது:—காஜீ முஸ்தபா கமால் பாஷா அவர்கள் ஒரு நீண்ட பிரசங்கத்தைச்செய்துமுடிக்க 36-மணி நேரங்கள் சென்றனவென்றும், அதில் துருக்கி தேசத்தின் பழய நிலைமையை எடுத்துக் காட்டப்பட்டிருப்பதாயும், அதனாடே ''துருக்கி ஆட்சிக்கும், இஸ்லாம் மார்க்கத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை'' என காஜீ முஸ்தபா கமால் பாஷா அவர்கள் கூறியதாயும் அறிவிக்கப்படுகின்றது.

இச் செய்தி நண்பர்களுக்குத் துக்கத்தையும், பகைவர்களுக்குச் சந்தோஷத்தையும் மூட்டியது. சில அறிவிலிகள் அதைக் கொண்டாட வாரம்பித்தனர். துருக்கியர்களின் அபிமானிகள் ஆச்சரியமுற்றனர். இந்தியர்களாகிய நாம் துருக்கி தேசத்தின் செய்தியைத் தெரிந்துக்கொள்ள போதிய வசதிகளில்லாததினால், நாமும் பல சந்தேகத்திற்குட்பட வேண்டியதாக விருந்தது.

துருக்கியர் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றியவர்க ளென்பதும்; பல தலைமுறையாக அவர்கள் முஸ்லிம்களாகவே இருந்து வருகிறார்க ளென்பதும், அவர்கள் முஸ்லிம்களாக விருப்பதை முன்னிட்டே பற்பல கஷ்டங்களை யனுபவித்து வந்தனரென்பதும், துருக்கியர் "ஜிஹாத்" செய்வதில் அதிகப் பிரியங்கொண்டவ ரென்பதும், உயிரைத் தியாகஞ்செய்ய இன்றைக்கும் ஆவலுள்ளவர்களென்பதும், தொழுகையையும், நோம்பையும் கட்டாயமாய் நிறைவேற்றுகிறவர்க ளென்பதும் நமக்கு நன்ருய்த் தெரியும். மேலும், துருக்கி அரசாங்கமானது தேசத்தில் இஸ்லாம் மதத்தைச்சார்ந்த நடவடிக்கைகள் செவ்வனே நடந்தேறிவரும் பொருட்டு, ஒரு மந்திராலோசனைச் சபையை ஏற்படுத்தியிருப்பதோடு, குர்ஆன் ஷரீபைச் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிடவும், குர்ஆன்ஷரீபை துருக்கிய பாஷையில் மொழிபெயர்க்கவும் ஏற்பாடுசெய்திருக்கிறது. மஸ்ஜிதுகளைச் சீர்திருத்தி, அவைகளில் முஅத்தின்களையும், ஊழியர்களையும் ஒழுங்கு முறைப்படி அமைத்திருக்கின்றது. ஜும்ஆவன்று மஸ்ஜிதுகளில் தொழுகை அதிகம்பிரமாக நடைபெறுகின்றது. துருக்கியர் அல்லாஹுதஆலாவுக்குப் பயந்தவர்களாய்த் தொழுகின்றனர். ஒவ்வொரு மஸ்ஜிதுகளிலும் தொழுவோர் நிறைந்துவிடுகின்றனர். துருக்கியர் ஆலிம்களைத் தயாரிப்பதற்கு குறிப்பான சட்டதிட்டங்களை நிறைவேற்றியிருப்பதையும் நாம் அறிவோம். மேற்கூறப்பட்டது போன்ற மார்க்க சம்பந்தமான நடவடிக்கைகளைச் செவ்வையாய் நடத்திவரும் துருக்கியர் இஸ்லாமைத்தள்ளிவிட்டதாய் அறிவிக்கப்படும் செய்தியை நாம் நம்பக்கூடவில்லை.

இஸ்லாமும், கமால் பாஷாவும்.

"துருக்கி அரசாங்கத்துக்கும், இஸ்லாமுக்கும் சம்பந்தமில்லை" என்று முஸ்தபா கமால் பாஷா அவர்கள் கூறியதாக வந்துள்ள செய்தி உண்மையா என்று கண்டறிய வேண்டும். இச்செய்தி உண்மையாயின், முஸ்லிம்கள் வருந்தாதிருக்க வியலாது. சமீப காலத்தில் மார்மடியூக் பிக்தால் சென்னையில் இஸ்லாமிய லக்ஷியங்களை விளக்கிச்

செய்த பிரசங்கங்களை ஊன்றிப் படித்தவரும் சஞ்சலமுறுவ ரென்பது திண்ணம்.

ஸையித் ஜமாலுத்தீன் அப்கானி, மௌலானா அபுல்கலாம் ஆஜாத், மார்மடியூக் பிக்தால் போன்றவர்களின் வார்த்தைகளையேனும் துருக்கியர் படிக்கவேண்டும்.

ஒருவர் ஸையித் ஜமாலுத்தீன் அப்கானி அவர்களை நோக்கி, "முஸ்லிம்களின் க்ஷீனதெசைக்கும், மேல் நாட்டாரின் முன்னேற்றத்திற்கும் காரணமென்ன?" வென்று வினவியதற்கு "உலக ஆக்ஷி, உலக சமாதானம், நல்லொழுக்கம், முன்னேற்றம் ஆகியவைகளுக் கவசியமான ஒழுங்கு முறையைக் கொண்டிருக்கும் இஸ்லாமை முஸ்லிம்கள் அறியாமல் க்ஷீனித்து விட்டனரென்றும், உலக வாழ்க்கையைத் துறந்து, சன்னியாசத்தை பேற்றுக்கொள்ள வேண்டுமென்று கற்பிக்கின்ற, கிறிஸ்து மதத்தைத் தள்ளியதே மேல்நாட்டாரின் முன்னேற்றத்துக்குக் காரணமென்றும்" ஸையித் அவர்கள் விடையளித்தார்கள்.

சுமார் 10-வருடங்கட்கு முன் லண்டனில் நடைபெற்ற ஒரு சபையில் (நௌமுஸ்லிம்) மார்மடியூக் பிக்தால் செய்த பிரசங்கத்தின் சாரம்:—"ஆக்ஷி, யுத்தம், வியாபாரம், விவாகம் ஆகியவைகளைச் செய்யாத மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பின் பற்றுபவரென்று தங்களைத்தாங்களே அழைத்துக் கொள்ளும் மேல்நாட்டார், உண்மையாகவே மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பின்பற்றுபவர்களாயின், இவர்கள் ஒழுங்கு முறைப்படி ஆக்ஷிபுரியவோ, வியாபாரத்தி லீடுபடவோ, விவாகஞ் செய்யவோ, யுத்தத்தை நடத்தவோ வியலாது. ஆனால், தெய்வீகத்தைச் சார்ந்த ஒழுங்கு முறைப்படி மேற்கூறியவைகளைச் செய்து பலனெய்தக் கருதுவோர், நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைப் பின்பற்றவேண்டும். மதுபானத்தாலும், வியபசாரத்தாலும், பலங்குன்றி, தைரிய மிழந்து போகாமல் சைனியங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று மேல் நாட்டார் கருதுவது உண்மையாயின், 1300-வருடங்களுக்கு முன், இத்துர்க் கிருத்தியங்களை யகற்றிய இஸ்லாமை யறிய வேண்டும். மகாயுத்தம் காரணமாக புருஷரையிழந்து திரியும் எண்ணிறந்த விதவைகள் மானிடர்களுக்குரிய மானத்தையுமிழந்து விடாதிருக்க, இஸ்லாம் அனுமதிக்கின்ற விவாக ஏற்பாட்டை மேல்நாட்டார் கைக்கொள்ளவேண்டும்."

துருக்கி அரசாங்கம் கிலாபத்தையொட்டி கடைசியாய்ச் செய்த தீர்மானம் சம்பந்தமாய் மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள்

1924-வது வருஷத்தில் வெளியிட்ட நீண்ட அறிக்கையில், நாம் இன்று தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் பல விருக்கின்றன. (அல்கலாம் முதல் வால்யூம்) ஆகவே, அவ்வறிக்கையில் ஆங்காங்குள்ள சில வாக்கியங்களின் சாரத்தை அடியில் எடுத்தெழுதுகின்றோம்.

(1) துருக்கி அரசாங்கத்தின் மதம் இஸ்லாமிய மதமாகவிருக்கின்றபடியால், ஓர் இஸ்லாமிய அரசாங்கமென்ற முறையிலேயே எல்லாவிஷயங்களும் நடைபெறுகின்றன.

(2) இஸ்லாமிய அரசாங்கம் துருக்கியிலிருக்கும் வரையில், கிலாபத்தும் அத்தேசத்திலேயே இருக்கும்.

(3) துருக்கியில் இஸ்லாமிய அரசாங்கமிருக்குமாயின், அங்கு கிலாபத்தும் இருப்பதாகத்தான் கூறவேண்டும். இஸ்லாமிய அரசாங்கமிருக்கும் வரை, கிலாபத்து ஒழிந்து விட்டதாகக் கூறமுடியாது. இஸ்லாமிய அரசாங்க மிருக்கும் போழ்து, கிலாபத்து இல்லையெனக் கூற நியாயமில்லை.

(4) துருக்கி அரசாங்கம் நிறுத்தப்பட்டுப் போனாலும், அல்லது இனிமேல் அவ்வரசாங்கம் ஒரு முஸ்லிம் அரசாங்கமாகவிருந்து வரமுடியாவிட்டாலும், கிலாபத்து ஒழிந்துபோகுமென்பதை யான் ஒப்புக்கொள்கிறேன்.

(5) துருக்கி அஸம்பிளியின் தீர்மானத்தில், இனி எவரையும் "கலீபா" என்றழைப்பதில்லை என்ற கருத்து மிருக்கலாமென்று நான் ஒப்புக்கொள்கிறேன். இஸ்லாமிய முறைப்படி குடியரசின் தலைவரே கலீபாவாக இருந்துங்கூட அவரை தலைவரென்றழைப்பதைத் தவிர, கலீபாவென்றழைப்பதில்லை என்றும், எதேச்சாதிகாரியே சரித்திர பூர்வமாய் கலீபாவென்றழைக்கப் பட்டுவந்திருப்பதால், குடியரசுத்தலைவரை கலீபாவென்றழைப்பது பிசகென்றும் துருக்கியர் நினைத்திருந்தால், அதை ஆக்ஷேபிப்பதற்கில்லை. ஒருக்கால் துருக்கியர் தங்களின் உள்நாட்டைச் சீர்திருத்தி, முன்னேற்றமடையக் கருதுமின்னுளில், இஸ்லாமிய உலகத்தின் உன்னத பொறுப்பை யேற்றுக்கொள்ள வேண்டிய பெரும் பதவியை வகித்து, ஒரு குறிப்பிட்ட நபர் இனி தங்கள் தேசத்திலிருந்து வருவது உசிதமல்லவென்று, துருக்கிஅஸம்பிளி கருதி யிருக்குமாயின், அஸம்பிளி பெரிய தொரு பிசகைச்செய்துவிட்டதாக நான் நிச்சயமாய்க் கூறுவேன்.

(6) துருக்கி தேசிய கக்ஷியார் மதக்கல்வி சம்பந்தமாகச் செய்திருக்கும் ஏற்பாடுகள் ஒழுங்கான நன்முறையைக் கொண்டனவா?

அல்லவா? என்பதைப்பற்றி யான் எதுவும் கூறத்தயாராயில்லை. என்னறிவுக்கும், ஆராய்ச்சிக்கு மெட்டியவரை இச்சீர்த்திருத்தத்தைச் செய்யும் முக்கியஸ்தர்களால் விசேஷ நன்மை யுண்டாகுமென நாம் எதிர்பார்க்க முடியாது. மதக்கல்வியில் சீர்திருத்தஞ் செய்யவேண்டு மென்று துருக்கி தேசிய கட்சியாருக் களவற்ற அவாவிருப்பினும், இச்சீர்த்தத்துக்குரிய ஒழுங்கானவழிகள் தேசியக்கட்சிகாரருக்குத் தெரியாது. மதவிஷயத்தில் சீர் திருத்தத்தைச் செய்வது சம்பந்த மான நுட்பங்களையும், அதனாலேற்படக் கூடிய கஷ்ட நிஷ் டூரங்களையு மறிந்த ஒரு நபரேனும் இக்கட்சியுள் இன்றிருப்பதாகக் கூறுவதற்கில்லை.

(7) மேல்நாட்டின் நாகரீகப் பிரசாரம், கீழ்தேசத்தில் பெருத்த சங்கடத்தையுண்டு பண்ணியிருக்கின்றது. புராதனக் கொள்கைக் கும், நவீன நாகரீகத்திற்குமிடையில் போர்நடந்து வருகிறது. இப் போர் இஸ்லாமிய உலகத்தையும் பாதித்திருக்கிறது. ஆகவே, இன்று துருக்கி தேசத்தில் மூன்று வகுப்பினரிருந்து வருகின்றனர். முதல் வகுப்பினர்:—முன்னோர்களைப் பின்பற்றிய புராதனக் கொள் கையையுடையவராகும். இவர்களிடை எத்தகைய நல்லுணர்ச்சியு மில்லை. இரண்டாவது வகுப்பினர்:— மேல்நாட்டின் நவீன நாகரீகத் திற் கிரையாகிவிட்டவராகும். இவர்களிடை இஸ்லாமிய அறிவை யும், ஒழுக்கத்தையும் காணக்கூடவில்லை. மேலும், இவர்கள் தீர்க்கா லோசனையற்ற ஆலிம்களுடையவும், கல்வியறிவில்லா பொது மக்க ளுடையவும் கொள்கை, நடவடிக்கை ஆகியவைகளே இஸ்லாமெனக் கருதுகின்றனர். புராதன விஷயங்களையும், நவீன முறையையும் ஆராய்ச்சி செய்து உத்தமமான வழிச்செல்லுவோரே மூன்றாவது வகுப்பினராகும். இம்மூன்றாவது வகுப்பினர் நமது துரதிருஷ்ட வசமாக இன்று துருக்கிதேசத்தில் குறைவாயும், ஒன்றிரண்டு வகுப்பினர் அதிகமாயுமிருக்கின்றனர்.

மேலே வரையப்பட்டுள்ள ஸையித் ஜமாலுத்தீன் அப்கானீ அவர்களின் விடை, மார்மடியூக் பிக்தாலின் பிரசங்க சாரம், மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களின் அறிக்கையைச் சார்ந்த குறிப்புகள் ஆகியவைகளை வாசிப்பவருக்கு, துருக்கியின் இன்றைய நிலைமை கவலை கொள்ளத் தக்கதா? அல்லது திருப்தியளிக்கக் கூடியதா? என்பது நன்றாய் விளங்கிவிடுமென்று நம்புகிறேன். ஆனால், இஸ்லாம் மதத்திற்கும், துருக்கி அரசாங்கத்திற்கும் சம்பந்தமில்லையென்று முஸ்தபா கமால் பாஷா அவர்கள் கூறியதாக வந்திருக்கும் சமாச்

சாரத்தை யொட்டி, "தாருல் இஸ்லாம்" கொண்டுள்ள அபிப்பிராயம் வியப்பைத் தருகின்றது.

தாருல் இஸ்லாம் (5—11—27-இதழில்,) கூறுவது வருமாறு:—"முஸ்தபா கமாலும் இஸ்லாமும். கமால் பாஷா இஸ்லாத்தைத் தம் ராஜ்யத்தினின்றும் அறுத்துவிட்டாரென்றும், அதிலிருந்து இந்திய முஸ்லிம்கள் ஒரு சிறந்த பாடங் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் சில ஹிந்துப் பத்திரிகைகள் கூக்குரலிடுகின்றன. இதைக் கண்டு ஒருவரும் அதைரியம் கொள்ளக் காரணமில்லை. ஏனெனின், ராஜாங்க நடப்புக்கும் இஸ்லாத்துக்கும் சம்பந்தமில்லையென்று இவர் கூறுகிறாரல்லாது. தீனுல் இஸ்லாத்தைத் துருக்கியர் விட்டுவிட்டாரென்று கூறிவிடவில்லை. இந்தியாவில் ஆங்கில ஆட்சி நடைபெறுகிறது; ஆங்கிலேயர் கிறிஸ்தவரேயாயினும், இங்குள்ள சட்டங்களுக்கும் கிறிஸ்து மதத்துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. இவ்வாறு தான் கமால் பாஷாவும் அங்கோராவில் செய்திருக்கிறார். இதிலென்ன ஆச்சரியமிருக்கிறது?"

அல்கலாம் நான்காம் வால்யூமின் முடிவுரை.

"அல்கலாம்" நான்காவது வால்யூமுக்கு முடிவுரை எழுதுமாறு தயைபுரிந்த அல்லாஹுத ஆலாவைப் புகழுகின்றேன். இது நான்காம் வால்யூமின் கடைசீ சஞ்சிகையாதலின், இன்ஷா அல்லாஹுத ஆலா அடுத்த சஞ்சிகை ஐந்தாவது வால்யூமின் ஆரம்பமாகும்.

"அல்கலாம்" தோன்றி மூன்றறை வருடங்களாகின்றன. இம்மூன்றறை வருடக்காலமாக அல்கலாம் புரிந்த சேவையையும், இது செய்யவேண்டியதாகவுள்ளஅரியகாரியங்களையும்சிந்திக்கும்போழ்து, போற்றத்தக்க எக்காரியத்தையும் "அல்கலாம்" செய்யவில்லை என்றே கூறவேண்டியிருக்கிறது. அல்காலம் ஏதேனும் ஊழியம் செய்திருப்பின், அது அல்லாஹுத ஆலாவின் கிருபையேயாகும்.

முஸ்லிம் பொதுமக்களுக்கு இஸ்லாமின் உண்மையை எடுத்துக் காட்டி, அவர்களின் கொள்கை, அனுஷ்டானம் முதலியவைகளைச் சீர்திருத்தி, அவர்களை உண்மை முஸ்லிமாகச் செய்வதே நம் கடமையாகவிருந்தும், அக்கடமையை நிறைவேற்றுவதற்குரிய அந்தஸ்தைச்

சில பத்திராபருங்கூட பெற்றிருக்கவில்லை. இது மறுக்கமுடியாத ஓர் உண்மையாகும். ஆனால், பெரும்பான்மையோர் இவ்வுண்மையையறியவில்லை.

இஸ்லாமிய உண்மையை அறியாது, நோய்வாய்ப் பட்டிருக்கும் அறிவிலிகளின் கூற்றுக்கேற்ப நடனம் புரிந்து, அன்னவரின் நன் மதிப்பையும், சன்மானத்தையும் பெற்ற பிரசுரங்கள் மலிந்து கிடக்குமிந்நாளில், அல்கலாமுக்குச் சொற்பத் தொகையினர் சந்தா தாரராக விருப்பதுநியாயமே. ஆனால், அல்கலாமை கிரயங்கொடுத்து வாங்கும் சொற்பத் தொகையினரேனும் இதில் பிரசுரிக்கப்படும் மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களின் வியாசங்களைப் படித்து, உணர்ச்சி பெறுவதாகத் தெரியுமாயின், நான் அளவுகடந்த ஆனந்த முறுவேனென்பது திண்ணம்.

பெல்காம் காங்கிரஸின்போது மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களை நான் கண்டு பேசிய விஷயங்களுள் சில, அல்கலாம் இரண்டாம் வால்யூமில் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன. அல்ஹிலாலை மீண்டும் பிரசுரிக்க முடியாதென்று மௌலானா அவர்கள் என்னிடம் கூறியிருப்பினும், அல்லாஹு தஆலாவின் கிருபையால் "அல்ஹிலால்" மூன்றாந் தடவையாக தோன்றி, நாட்டில் உலாவிவருகின்றது. முஸ்லிம்கள் படித்தறிய வேண்டிய எண்ணிறந்த விஷயங்கள் அல்ஹிலாலில் நிறைந்துகிடக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு ஆலிமும், ஒவ்வொரு தலைவரும் உர்து பாஷையை அறிந்த ஒவ்வொரு முஸ்லிமும், ஒவ்வொரு ஹிந்துவும் அல்ஹிலாலை ஊன்றிப் படிப்பது நம் நாட்டிற்கும், சமூகத்திற்கும் இன்றியமையாததாகும். அதற்கு வருட சந்தா ரூபாய் 12தான்.

உர்து பாஷையை அறியாதவருக்கும், 12 ரூபாய் கொடுத்து அல்ஹிலாலை வரவழைக்க முடியாதவருக்கும், அல்ஹிலாலிலுள்ள இம்மை மறுமையைச்சார்ந்த உண்மையை எடுத்தோதுவது அல்கலாமின் நோக்கங்களைச் சார்ந்த அரும் சேவையென்பது வெளிப்படை. மேலும், மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களின் வியாசங்களே அநேகமாய் அல்கலாமில் வெளியிடப்பட்டு வருகின்றன வென்று சிலர் குறைகூறுவதும் அல்கலாமுக்கேற்ற நற்சாட்சிப் பத்திரமாகும்.

மௌலானா அவர்களின் சிறந்த நற்போதனையைப் படித்துப் பலனெய்துவதற்குப் பதிலாய், அதை குறைகூறுவோர் சந்தேகமின்றி நோய்வாய்ப் பட்டிருப்பதை மறுக்கவியலாது. சர்க்கரை கசக்குமாயின் நோய்க்கிரையாகிவிட்டதையறிந்து, சிகிச்சைசெய்துகொள்ள

வேண்டுமேயன்றி சர்க்கரையைக் குறைகூறுவது நியாயமாகாது. மலேரியா ஜுரத்தால் பீடிக்கப்பட்டிருப்பவனுக்கு ஹகீம் அஜ்மல்கான் அவர்களின் ஔஷதத்தைக் கொடுப்பதா? அல்லது வைத்திய முறையை அறியாதவர் கஞ்சாவையும், அபினியையும் கலந்து கிண்டிய லேகியத்தைக் கொடுப்பதா?

மார்க்கக் கல்வியில் தேர்ச்சிபெற்ற மகான்களின் நற்போதனையே உலமாக்களை விழிக்கச்செய்யும். உலமாக்கள் விழித்தெழாதவரை இஸ்லாமிய முறைப்படி பொது மக்களைச் சீர்திருத்த இயலாது. உலமாக்கள் எத் தகையோராக விரிப்பினும், இவர்களே பொதுமக்களின் தலைவர்களாக விருப்பார்கள். உலமாக்களை யேளனஞ்செய்து, அவர்களை யொதுக்கிவிட்டு, இந்நாட்டில் பொதுமக்களைச் சீர்திருத்த முயலுவோரின் பகற்கனவையொட்டி வியப்படைகிறேன்.

என் ஹிஜாஸ் யாத்திரை.

நான் ஹிஜாஸிலிருந்து திரும்பிவரும்வரை அல்கலாம் நடந்து வரத்தகுந்த ஏற்பாடுகளைச் செய்துவைக்க முடியாமல் திடீரென்று பிரயாணமாக நேர்ந்ததால், நான் ஹிஜாஸிலிருக்கும் காலை அல்கலாம் நடந்துவருமென்று நம்பியிருக்கவில்லை. ஆனால், நன்மையையேவி, தீமையை யகற்றும் ஊழியமானது அல்லாஹுதஆலாவின் கட்டளைக்குட்பட்டேற்படும் ஒரு பிரயாணத்தை முன்னிட்டு நின்றுவிடுவது நியாயமில்லையாயினும், "அல்கலாம்" நின்றுவிடாமல் அல்லாஹுதஆலா செய்திருக்கும் கிருபையைச் சிந்தித்து, அவனைத் துதிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

யான் ஹஜ்ஜுக்குச் சென்றிருந்தபோழ்து, முழுபொறுப்பையும் ஏற்று, அல்கலாமை செவ்வையாய் நடத்திவந்த நண்பருக்கும், அல்கலாமை அச்சிட்டுவரும் சென்னை கேஸரி பிரிண்டிங் ஒர்க்ஸ் ஆலயத்தாருக்கும், அல்கலாமின் நன்மையைக் கோரி சதாவுழைத்து வரும் சகோதரர்களுக்கும் நன்றி நிறைவேற்றுகிறேன்.

அல்கலாமின் பொருளாதார நிலைமையையொட்டி சந்தாதாருக்கு அடிக்கடி ஞாபகமூட்டுவதையான் விரும்பவில்லை. ஆதலின், அல்கலாமுக்கு பணக்கஷ்டமே கிடையாதென்று சந்தாதாரநண்பர்கள் நம்பிவிடாது, அவரவரின் சந்தாத்தொகையை அனுப்பும்படி கோருகிறேன்.

ஒரு பழைய அறிக்கை.

'அல்கலாம்' புரிந்துள்ள சேவை போற்றத் தக்கதாகவில்லை என்பதை ஒப்புக்கொள்வதோடு, இதன் குறையை யான் மறுக்

வில்லை. ஆகவே, அல்கலாம் ஏதேனும் நற்சேவை புரிந்திருப்பி னும் இதைப்போன்று ஜனங்களின் புகழைவிரும்பாமல் மறுக்கமுடி யாத என்பலஹீனம், என் அறியாமை, என் குறை முதலியவைகளை யொட்டிய எச்சரிக்கை, உபதேசம் ஆகியவைகளைச் செவியுற்று சீர் திருந்த அல்லாஹுதஆலா எனக்குத் தௌபீக் செய்வாஞக.

அல்கலாம் நடத்துவது சம்பந்தமான என் உத்தேசம் பகிரங்க மாக வேண்டுமெனக் கருதி, முன்வரைந்துள்ளதை மீண்டும் இத னடியில் பிரசுரிக்கப்படுகின்றது.

"ஒவ்வொருவரும் நல்லதையேவி கெடுதியை யகற்றவேண்டு மென்று அல்லாஹுத்ஆலா இட்டிருக்கும் கட்டளையை நிறைவேற்ற நம்மவருக்கு இஃதொரு சாதனமாக விருக்குமென்னும் நம்பிக்கையே "அல்கலாமை" நடத்த எம்மைத் தூண்டிற்று."

முஸ்லிம்கள் தம்மதக்கடமையைச் செய்வதற்கு வேண்டியவை களை வெளியிட, இத்தகைய சஞ்சிகை இன்றியமையாததென்றே பல பெரியார்கள் கூறுகின்றனர்.

"நல்லத்தையேவி கெடுதியை யகற்றுவது" என்னும் நோக்கத் தைக் காட்டினும், "அல்கலாமை" நடத்துவதில் எமக்கு வேறு பெரிய லக்ஷியம் கிடையாது. ஆனல், அல்கலாமை நடத்துவ தற்கு மற்றவர்களைப்போல், யாமும் பொருளைச் செலவு செய்ய வேண்டியதாகத்தானிருக்கிறது. "அல்கலாமை" இனமாக வழங்க எமக்குப் போதிய ஐஸ்வரியமில்லாததால், சந்தாத்தொகையை எதிர் பார்க்கவேண்டி யிருப்பதை யொட்டியும் வருந்தாமலிருக்கக் கூட வில்லை. பிரயாசை, பொருள் செலவு ஆகியவைகளுக்கேற்ப "அல்க லாம்" நம்மவருக்கு நன்மை பயப்பதாகவிருந்தால் இது நடைபெற வேண்டும். இன்றேல், இது நின்றுபோவது உத்தமமல்லவா?

உண்மையான ஹிருதயத்தோடு "அல்கலாம்" வெளியிடப்பட்டி ருக்குமாயின், இதனல் ஏற்படும் நன்மையின் ஒரு பாகத்தையாவது கண்டுகளிக்க எமக்கு அல்லாஹுத ஆலா அருள்புரிவாஞக. இன் றேல், இது நம்மவருக்குக் கேடிழைக்காமலும், உண்மையான எந்த ஸ்தாபனத்தையும் பொறாமையினல் கெடுத்துவிடாமலும் அல்லா ஹுத ஆலா காப்பாற்றுவாஞக.

அசத்தியத்திற்கஞ்சாது "அல்கலாம்" சத்தியத்தைத் தன்னுள் கொண்டதாக விருந்தால், அல்லாஹுத ஆலா இதற்கு அபிவிருத்தி யைத் தந்தருள் புரிவாஞக. இன்றேல், இது ஒழிந்துபோகக் கடவது.

குல்ஜாரே பாதிமா

என்னும் பாதிமா நாயகியின் ஜீவிய சரித்திரம்

(அரபு தமிழ்)

நூலாசிரியர்:-வேலூர் மத்ரஸா பாகியாதுஸ் ஸாலிஹாத்தின்
ஆசிரியர் ஜனாப் மௌலானா மௌலவி

அமானி ஆலிம் சாஹிபு

இதில் பாதிமா நாயகியின் பிறப்பு முதல் இறப்புவரையிலுள்ள ஜீவிய சரித்திரம் அடங்கியிருக்கிறது. நபிகள் பிரான் (ஸல்) தங்கள் (வஃலு) உபதேசத்தில் நாயகியைப்பற்றிச் சொன்னவைகளும், காபிர்கள் நபிநாயகத்திற்கு தீங்கிழைத்தபோது நாயகி பாதிமா உதவி செய்ததும், மூன்று வருஷம்வரை ஷஃபே அபூதாலிப் என்னும் மலைப் பொதும்பிற் போய் ஒதுங்கியிருந்ததும், ஹஜ்ரத் அலிரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பாதிமா நாயகி அவர்களைக் கலியாணம் செய்து கொடுக்கும்படி கேட்டதும், உடனே அலி(ரலி) அவர்களுக்கே கலியாணம்செய்து கொடுக்கும்படியாய் வஹீ இறங்கியதும் ஆடம்பரமின்றி கலியாணம் நடைபெற்றதும், ஹஜ்ரத் அலி (ரலி) கலியாண விருந்தளித்ததும், நாயகிக்கு ஹஜ்ரத் அலி (ரலி) வீட்டில் ஏற்படுத்தப்பட்ட வேலைகளும், இமாம் ஹஸன், இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் பிறப்பும், நபிகள்பிரான் (சல்) அவர்கள் தமது காலகதிக்குமுன் நாயகியுடன் பேசிய ரகசியமும், வபாத்திற்கு பின் பாதிமா நாயகி படித்த மர்தியாவும், பைத்துல்ஹுஸ்ன் என்றவிடத்தில் போய் தனித்திருந்ததும், துக்கத்துடன் ஆறுமாதம் வரையிருந்து காலகதியடைந்ததும் பாதிமா நாயகியின் எல்லா உறவினரின் ஷஜறாவும் இன்னும் அநேக அரிய பெரிய விஷயங்களும் அடங்கியுள்ளன. மக்கா, மதீனா, நாயகியின் குப்பா, காபலா உஹுது மலை, தௌர், ஹிறாமலைகளின் படங்களுமிருக்கின்றன.

கிளோஸ் கடிதம் பைண்டு கட்டியது விலை ரூ. 1—0—0

விலாசம்

மத்ரஸயே பாகியாதுஸ்ஸாலிஹாத் அமானிரூம்

வேலூர்.

"அல்கலாம்" கிடைக்குமிடம்.

பிரிட்டிஷ் & அமெரிக்கன் நியூஸ் ஏஜென்ஸீ,
No. 6, புத்ரீ ரேடு, சிங்கப்பூர்.

புதிய சரித்திரங்கள்.

இச்சரித்திரங்கள் பார்ஸி, ஹிந்துஸ்தானி பாஷைகளிலிருந்தன. இதுகாறும் தமிழ் பாஷையில் வெளிவந்ததில்லை. இவைகளை நம் தென் இந்தியா முஸ்லிம் சகோதரர்கள் அறிந்து பலனடையுமாறு வெகுகாலமாய் அரும்பிரயாசை எடுத்து இனிய செந்தமிழ் நடையில் மொழிபெயர்த்து சுத்த தமிழிலும், அரபு தமிழ் இரண்டு பாஷைகளிலும் வெளிவந்திருக்கிறது. இதின் கீழ்கண்ட கிதாபு புத்தகங்களிலெல்லாம் தீனுடைய நஸீஹத் நன்மொழி உபதேசங்கள் அடங்கியிருக்கின்றன.

(தாரீகுல் அவ்லியா)

கனவான்களே! நமது இந்தியா தேசத்தில் (ஹிந்துஸ்தான் மாநகரில்) சூரியனைப்போல் வந்துதித்துக் கீர்த்தியும் புகழுஞ் சிறந்தோங்கி விளங்குகின்ற நமது அவ்லியாக்கள், ஸாலிஹீன்களின் ஜீவிய காரண கறுமாத்து சரித்திரமும் இதில் (ஹிந்துஸ்தான்) தேசத்தின் பெரிய பெரிய மஜீது கட்டடமும், அவ்லியாக்களின் தர்கா படங்களும் அதின் வரலாறும் எழுதி காட்டபட்டிருக்கிறது. பார்க்கத்தக்கதே. அணா 14.

	ரூ.	அ.
சாஜா முஈனுத்தீன் சரித்திரம்	1	0
மேற்படி அரப் தமிழ் மவ்லிதுசேர்ந்தது	1	8
ஸிந்தா ஷாஹ்மதார் சரித்திரம்	1	0
மேற்படி அரப் தமிழ் மவ்லிதுட	1	8
கிலுரு அலைஹிஸ்ஸலாம் சிக்கந்தர் இருவர்கள் கிஸ்ஸா	0	6
மேற்படி அரப் தமிழ்	0	14
உம்ததுல் இக்வான் இதில்லுக்மானுல் ஹகீம் மகனுக்குச் செய்த நஸீஹத்துகள்	0	14
அஸ்ஹாபுல் கஹ்பு என்னும் 6 பேர்கள் மலைக்கு ஓடிய சரித்திரம்	0	4
மேற்படி அரப் தமிழ்	0	6
பலுலூன் சஹாபி, அபூஷஹ்மா கிஸ்ஸா	0	4
மேற்படி அரப் தமிழ்	0	6

கேட்லாக் இனாம்

விலாசம்:—

பு. காஜா முஹம்மது ஆலிம் சாஹிப்,
47, செம்புதாஸ் தெரு மதராஸ்.

Printed at the Kesari Printing Works, G. T., Madras and Published by K. A. ... ...eeth, 42, Thambu Chetty Street, Madras.